# தொட்டனைத்தூறும் மணற்கேணி





பேராசிரியர்

அ.ச.ஞானசம்பந்தன்

கங்கை புத்தக நிலையம்

# தொட்டனைத்தூறும் மணற்கேணி

பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன்

கங்கை புத்தக நிலையம்

23, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை - 600 017.

முதற் பதிப்பு : நவம்பர் 2003

© உரிமை ஆசிரியருக்கு

விலை ரூ. 35.00

- TITLE : THOTTANAITHOORUM MANARKENI
- AUTHOR : PROF. A.S. GNANASAMBANDAN
- LANGUAGE : TAMIL
- SUBJECT : LITERATURE
- EDITION : FIRST EDITION, NOVEMBER 2003
- PAGES : 124 + xii = 136
- PUBLISHED BY : **GANGAI PUTHAKA NILAYAM**
  23, DEENADAYALU STREET,
  THYAGARAYA NAGAR,
  CHENNAI - 600 017.
- PRICE : RS. 35.00

---

Laser Typeset : **Sri Sathya Sai Graphics,**
30/1, Golden Apt., Sarojini St. Chennai - 17. Ph: 24332504

*Printed at* : Ragavendra Agencies, Chennai - 5 ✆ 28446166, 28446891

# அ.ச.ஞா எனும் தமிழ்க்கேணி

தேதி தெரியாததொரு நாளில், மாலைப் பொழுதில்,

பேராசிரியர் அ.ச.ஞா பேசிய 'தொட்டனைத்தூறும் மணற்கேணி' என்ற தலைப்பிட்ட சொற்பொழிவை ஒலிப் பேழையில் கேட்க நேர்ந்தது. அசந்து போனேன்.

அது இன்று புத்தகமாகக் காலப் பெட்டகத்திற்குள் வைத்துக் காப்பாற்றப்பட இருக்கிறது என்பது சிறந்த கருத்துகளை வாசிக்கவும், நேசிக்கவும் செய்யும் அனைவருக்கும் மகிழ்ச்சியான செய்தி.

நாம் செய்ய வேண்டியதையெல்லாம் அறியாமையை அகற்றுவதுதான்; மணலை நீக்குவது தான்; தண்ணீரைக் கொட்டுவதல்ல. அறிவை நம்முடைய அறியாமை மூடி இருக்கிறது அவ்வளவு தான்.

கல்வி என்பது ஒவ்வொரு நிமிடமும் நிகழ்வது; 'ஆஹா! இவ்வளவு நேரம் இது கூட நமக்குத் தெரியாமல் நாம் இருந்திருக்கிறோமே' என்று நம்மை நாமே புதுப்பித்துக் கொள்வது. பல நேரங்களில் நமக்குள் ஒலிக்கும் குரலை புற சப்தங்களிலிருந்து மீட்டெடுப்பது. அது ஆறாவது அறிவைத் தாண்டியது.

ஆறாவது அறிவு ஐந்து புலன்களையும் கட்டுப் பாட்டில் வைத்திருக்கும் கடிவாளமாக இருக்கிறது.

ஐம்புலன்களையும் கடப்பது எந்த நிலை? அது ஏழாவது அறிவு அது ஒருமித்த உள்ளுணர்வா? உள்ளே ஒலிக்கும் குரலா? intuition ஆ?

படிப்பதற்கும், கற்றுக் கொள்வதற்கும் வயது இல்லை. அதைத்தான் பேராசிரியர் அ.ச.ஞா செய்தார். விழிகள் பழுதடைந்த பிறகும் படித்தார்; எழுதினார்; உழைத்தார். அவர் வாழ்க்கைக்கும், இந்தச் சொற் பொழிவின் மூலக்கருத்துக்கும் மயிரிழையளவு கூட இடைவெளி இல்லை என்பதை அவரைத் தெரிந்தவர்கள் அறிந்தவர்கள்.

'சரயூ' நதி குறித்து கம்பர் செய்த தவறை சேக்கிழார் சரி செய்த விதம் பற்றி அவர் கூறும் அழகு.... அபாரம்.

'அக்கினிக் குஞ்சு'க்கும் தீயினை நயப்புறுதலுக்கும் அவர் போடும் முடிச்சும், ஆளவந்தார் குறித்த சம்பவமும், 'சும்மா இரு சொல்லற' என்பதற்கான விளக்கமும் நம்மைத் தமிழ் இலக்கியங்களினூடே கைபிடித்து அழைத்துச் செல்லும் ஓர் இனிய பயணமாக மிளிர்கிறது.

எண்ணமற்று இருப்பதே தியானம்; சொல்லற்று இருப்பதே மௌனம்; மனமற்று நிலைப்பதே ஞானம்.

வெளியே தேடுவது மட்டுமே மகிழ்ச்சியை விளை வித்து விடாது; வெளியில் செல்வம் எவ்வளவு சேர்ந்தும் இனிமையற்று இருப்பவர்களே அதிகம். உள்ளே தோண்டும் போது ஏற்படுவது சுகம் மட்டுமல்ல; அது நமக்குள் நடக்கும் இரசவாதம்.

'சான்றோர் கவி' என்பது ஆழத்தைக் குறிப்பது; ஆழமென்று தெரியாத ஆழம். உண்மை; ஆழமென்று தெரியாத ஆழமும், உயரமென்று தெரியாத உயரமும், அழகென்று தெரியாத அழகும் மேன்மையானவை - இறங்கிப் பார்த்தவர்களே ஆழத்தை உணர முடியும். ஏற முடிந்தவர்களே உயரத்தை உணர இயலும்.

பொறிகள் பற்றி பல மேற்கோள்கள் கொடுத்து பேராசிரியர் தரும் விளக்கம் நம்மை சிலிர்க்க வைக்கிறது. சொற்பொழிவு முழுவதும் அவர் நிரம்பி வழிகிறார்.

அவர் சொல்கிறார். 'வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருக்க வேண்டும்' வாழ்க்கைக் கென்று ஒரு பொருள் இல்லை; அதன் அர்த்தத்தை நாம் தான் தேடிப் பிடிக்க வேண்டும்.

எந்தத் தயாரிப்புமில்லாமல் அந்த இடத்திலேயே (extempore) நிகழ்த்திய சொற்பொழிவு என்பதை மனத்தில் நிறுத்தி வாசிப்பவர்கள், இந்நூலில் சரமாரியாக வந்து விழும் கருத்துகளையும், மில்டன், ஷேக்ஸ்பியர் முதல் பாரதி வரை வந்து கொட்டுகிற கவிதை வரிகளையும் இன்னும் அதிகமாக சுவைக்க முடியும். அவர் மேடைப் பேச்சுகளைக் கேட்டவர்கள், இதை ஏற்ற இறக்கங்களுடன் அவருடைய கம்பீரமான குரலில் நினைவுபடுத்தி மகிழவும் முடியும்.

'ஊறுவது நம் செயல் இல்லை' என்கிறார். ஊறுவதற்கான பக்குவத்துடனாவது இருக்க வேண்டிய பொறுப்பு நம்முடையது.

'பசுமட் கலத்துள் பெய்த நீர்' எப்படி திடீரென உடைந்துவிடும் என நம்மை அவர் எச்சரிக்கிறார். அனுபவத்துடன் இயையாத அறிவு, இப்படிப்பட்ட கருத்துகளை உணரக்கூட இயலாது. ஒழுகுவது வேறு; நிரம்பி வழிவது வேறு.

மந்திரம் பற்றி பேசுகிறார். மந்திரத்தில் மாத்திரம் மகிமை இல்லை; நாம் தயாராக இருக்கிறோமா என்பதும், நாம் எவ்வளவு தூரம் ஒப்படைக்கிறோம் என்பதும் தான் முக்கியம். முட்டாள்கள் மூவர் தண்ணீரில் நடந்தது பற்றி டால்ஸ்டாய் கதை எழுதினார். நாமும் கண்ணப்பனார் பற்றி படித்தோம்.

நம்பிக்கையும், அன்பும் முழுமையாக இருக்கும் போது வைதல் கூட வாழ்த்தாக மாறும்; புல் கூட புட்பமாக மாறும்; கல் கூட கல்கண்டு ஆகும்; மாமிசம் கூட நைவேத்யம் ஆகும்; உமிழ்நீர் கூட அபிடேகமாகும்.

'ஊழை' எப்படிப் புறமுதுகு காண முடியும் என்பது அவர் தந்த உதாரணம் எவ்வளவு நேர்த்தியானது! இங்கு பலர் வரத்தையே சாபமாக்கிக் கொள்ளுகிறார்கள்; சிலரோ சாபத்தையே வரமாக மாற்றி விடுகிறார்கள். தண்டனையையே பரிசாக நினைக்கும் பக்குவம் வந்தால் ஊழ் என்ன செய்ய முடியும். மரணத்தின் போது வாழ்ந்த திருப்தி இல்லாவிட்டால் வாழ்ந்துதான் என்ன பயன்?

'மூலமும் நடுவும் ஈறும் இல்லது ஓர்' என்பது 'No time; No space' என்று பொருள்படும் என்கிறார். பல துறைகளிலும் அவருக்கு இருக்கும் விசாலமான வாசிப்பு

நமக்கு புலப்படுகிறது. Time machine நாவலில் 'Time is the fourth dimension' என H.G. Wells குறிப்பிடுவார். 'In the beginning' என்றால் ஏற்கனவே நேரம் இருந்தது என்ற பொருள்.

படிப்பு மட்டும் அறிவு அல்ல; படிப்பு வெறும் முலாம் மட்டுமே. அதைத் தாண்டி உண்மை அறிவு உள்ளது என்றால் அது அன்பினால்; கருணையினால்; கனிவினால் நிகழ வேண்டும்.

'Fact is what we perceive; Truth is what it is' - இது குறித்து பேராசிரியர் குறிப்பிடும் எடுத்துக்காட்டுகள் எளிமையானவை. அகிரோ குரோசவாவின் Roshaman (eye of the beholder)ஐ நினைவுபடுத்துகின்றன.

2000 ஆண்டுகளுக்கு முன்பு, 'திருவள்ளுவர் எழுதியவற்றை இன்றும் புரிந்து கொள்ள முடிகிறதே' என்று அன்பர் ஒருவர் கேட்கிறார். Shakespeare applied a brake on the development of English - என்று சொல் வார்கள். Chaucer எழுதியவற்றை இன்று புரிந்து கொள்ள முடியாது. தன்னுடைய பங்களிப்பால் மொழியை நிலைபடுத்தி புரிதல்தன்மையில் நங்கூரம் பாய்ச்சும் வல்லமை உள்ளவர்கள் ஒரு சிலரே.

சரித்திரம் பற்றியும் பேசியுள்ளார். 'History that we read is the record of violence and not the record of silence' என்று ஓஷோ குறிப்பிடுவார். மலர்களைப் பற்றியதும் வரலாறு; மௌனத்தைப் பற்றியதும் வரலாறு; வரலாறு என்பது தகராறுகளின் தொகுப்பு

மட்டுமல்ல. அன்பைப்பற்றிய பதிவுகள் தாம் மானுடத்தை மாற்றியமைக்கும் சரித்திரச் சிதறல்கள்.

*114*ஆம் பக்கத்தில் ஒரு தகவல் வருகிறது; ஆம்; சீடன் மட்டும் குருவைத் தேடி அலைவது இல்லை; நல்ல குரு கூட தனக்கான சீடனுக்காகக் காத்திருக்கிறார்.

இரண்டு வருடங்களுக்கு முன் 'உலகத்தின் சிறந்த நூறு புத்தகங்கள்' என்ற ஆங்கில நூல் ஒன்றை புத்தகக் கடையில் கண்டேன். வாங்கி அவசர அவசரமாகப் புரட்டினேன்.

'திருக்குறள்' பெயர் இருக்கிறதா என்று; ஏமாற்றம்.

இந்நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளி யிட்டால் அந்நூலின் திருத்திய பதிப்பில் நிச்சயம் திருக்குறள் இருக்கும்.

**வெ. இறையன்பு**

# முன்னுரை

எங்கள் தந்தையார் பேராசிரியர் அ.ச.ஞா. அவர்கள் 1992ஆம் ஆண்டு அமெரிக்கா சென்றிருந்தார்கள்.

அங்கு 1992ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நியூஜெர்ஸியில் நிகழ்த்திய சொற்பொழிவின் பதிவு நாடா எங்களிடம் இருந்தது. எங்கள் தந்தையார் காலத்திலேயே இப்பதிவு நாடாவைக் கேட்ட திரு. இறையன்பு I.A.S அவர்கள் அதனை நூலாக வெளியிடவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். என்ன காரணத்தினாலேயோ எங்கள் தந்தையார் இருக்கும் பொழுது அது நிகழவில்லை.

இப்பொழுது அதனை வெளியிடுகிறோம். இந்த நூல் வித்தியாசமான அமைப்புக் கொண்டது. அவர்கள் எவ்வாறு பேசினார்களோ அவ்வாறே அச்சிடப் பட்டுள்ளது. தமிழினும் ஆங்கிலப் பயிற்சி மிக்குடைய அமெரிக்காவில் வாழும் தமிழ் மக்களிடையே நிகழ்த்திய சொற்பொழிவாதலின் அங்கங்கே ஆங்கிலச் சொற்களும் தொடர்களும் நிறைந்திருந்தன. அவற்றில் அவசியமான வற்றைத் தவிரச் சிலவற்றைத் தமிழ்ப் படுத்தியுள்ளோம். தொடர்பு கருதி அங்கங்கே ஒரு சில சொற்கள் விடப் பட்டும் சேர்க்கப்பட்டும் உள்ளன. மற்றபடி அவர்கள்

நிகழ்த்திய சொற்பொழிவு சிந்தாமல் சிதறாமல் அப்படியே இடம் பெற்றுள்ளது.

அவர்கள், 'தொட்டனைத்தூறும் மணற்கேணி' என்னும் தலைப்பில் நிகழ்த்திய சொற்பொழிவு இது. இதனை அப்பெயரிலேயே வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறோம்.

பதிவு நாடாவைக் கேட்டு முதலில் இச் சொற் பொழிவைக் கைப்பட எழுதியவர் சட்டமன்றத் துணைச் செயலாளராக இருந்து ஓய்வு பெற்ற ஸ்ரீவித்யா உபாசகர் திரு. G.S. அனந்த நாராயணன் ஆவார். பிரதிகளை வரிவரியாகப் படித்தும் நாடாவைக் கேட்டும் வேண்டிய திருத்தங்களை முனைவர் ம.ரா.போ. குருசாமி அவர்களும் ஓய்வு பெற்ற இரயில்வே பொறியாளர் C.P. கௌரிசங்கர் அவர்களும் செய்து உதவினார்கள். இறுதி யாக முனைவர் தெ. ஞானசுந்தரம் அவர்களும் அவசிய மான திருத்தங்கள் செய்து இந்நூல் நல்வடிவம் பெறு மாறு செய்தார்கள். இறைவன் திருவருளும் எங்கள் தந்தையாரின் நல் ஆசியும் இவர்கள் அனைவருக்கும் என்றென்றும் கிடைத்திட இறைவனை வேண்டு கிறோம். இந்நூல் வெளி வருவதற்குத் தூண்டுகோலாக இருந்தது மட்டுமின்றி இனிய அணிந்துரையையும் வரைந்துள்ள திரு. இறையன்பு I.A.S அவர்கட்கும் இவர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வழக்கம் போல் இந்நூலை நன்முறையில் அச்சிட்டு வெளியிட்ட கங்கை புத்தக நிலைய உரிமையாளர் திரு. திருநாவு. இராமநாதன் அவர்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகும்.

தமிழ் உலகம் எங்கள் தந்தையாரின் மற்ற நூல்களை ஏற்றுப் போற்றியதனைப் போல இதனையும் ஏற்றுப் போற்றும் என்பது எங்கள் நம்பிக்கை.

இப்படிக்கு
அன்புடன்

**அ.ச.ஞா. குடும்பத்தினர்.**

# தொட்டனைத்தூறும் மணற்கேணி

## பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன்

மிகச் சிறந்த ஒரு தலைப்பைக் கொடுத்திருக்கிறார்கள் - 'தொட்டனைத்தூறும் மணற்கேணி' என்று.

திருக்குறள் முழுவதையும் பார்த்தீர்களானால் பின்னே வந்த பாட்டி பாடினாளே 'இளமையிற் கல்' என்று - அவர் சொல்லவே இல்லை.

அதே மாதிரி இன்றைக்கு மருத்துவ இயக்கம் வளர்ந்த நிலையிலே - குழந்தை மருத்துவத்துக்கு 'பீடியாட்ரிக்ஸ்' என்று சொல்வதுபோல முதியோர் மருத்துவத்துக்கு 'ஜீரியாட்ரிக்ஸ்' என்று சொல்வார்கள். நாம் எல்லாரும் இதனை நினைத்துக் கொண்டிருந்தோம் ''மறந்து போச்சுன்னா, ஆமா வயசாச்சுன்னா மறக்க வேண்டியது தானே'' - என்று; அது தப்பு - அப்படி மறக்கிறது என்பது தேவையே இல்லை. மூளையிலே இருக்கிற ந்யூரான்ஸ் என்று சொல்வார்களே எத்தனையோ மில்லியன்ஸ் நீயூரான்ஸ் இருக்கின்றனவாம். அதிலே மிகப் பெரும் பகுதியை யாருமே அதிகம் உபயோகப் படுத்துகிறதே இல்லையாம்; ஐன்ஸ்டின் மாதிரி உலகத்திலே பிரசித்தி பெற்ற விஞ்ஞானிகூட 15% தான் பயன்படுத்துகிறார்கள். நாம் .001கூடப் பண்ணமாட்டோம். அந்த நியூரான்களுக்கு வேலை கொடுக்கிறது இல்லை.

இந்த geriatrists என்கிற மருத்துவர்கள் என்ன சொல்கிறார்கள்? அப்படி வேலை கொடுத்துப் பழகினால் உங்களுக்கு மறதி என்பது வராது என்கிறார்கள். 'அப்படீன்னா, படிக்கிறத்துக்கு என ஒரு வயசு கிடையாது. சிந்திக்கிறத்துக்கு என ஒரு வயசு கிடையாது. எப்பொழுது வேண்டுமானாலும் சிந்தித்துக் கொண்டே இருந்தோமானால், மறந்துபோகிறது என்கிற பிரச்சினையே வரப் போவதில்லே' என இன்றைக்கு ஜீரியாட்ரிக்ஸ் பற்றித் தெரிந்த மருத்துவர்கள் பேசுகிறார்கள்.

இந்த வள்ளுவன் பார்த்தான், 'இளமையிற் கல்' என்றால் 'முதுமையில் வேண்டாம்' என்றல்லவா அர்த்தமாகிப் போகும்! ஆகவே, 'இளமையிற் கல்' என்று அவன் சொல்லவே இல்லை.

'தொட்டனைத்தூறும் மணற்கேணி' என்பதாக ஒரு அழகான உதாரணம் காட்டினான். இதிலே Hydrologists 'நிலத்தடிநீர்' கண்டுபிடிக்கிறவர்கள் கூட ஒரு இடத்திலே எவ்வளவுதான் தண்ணீர் இருக்கிறது என்றால் அதில் Percentage error எவ்வளவு என்றுதான் சொல்வார்கள்.

ஏன் இந்த உதாரணம்? தொட்டனைத்தூறும் மணற்கேணி என்றால் பத்தடி தோண்டும் போது 10 லிட்டர் தண்ணீர் கிடைக்கிறது என்றால் 50 அடி தோண்டும் போது 10 அல்ல, இன்னும் மேலே கிடைக்கும். ஆக, போகப்போக அதிகமான தண்ணீரைக் கொடுத்துக் கொண்டே இருக்கும். முடிவில்லை.

''போர்வெல் (ஆழ்துளைக் கிணறு) 150 அடி போடுகிறார்கள்; 500 அடி கூடப் போடுகிறார்கள். அப்போ ஏன்

இந்தத் தண்ணீரைப் பயன்படுத்த முடியவில்லை முயற்சியில்லை.

இதைத் தஞ்சாவூர் ஜில்லாவில் பார்க்கலாம். இது நண்பர் வெங்கடராமனுக்குக் கூட நன்றாகத் தெரியும். பல மிராசுதாரர்கள் தங்கள் நிலத்தில் காலை வைச்சிருக்க மாட்டாங்க. எங்கே நிலம் என்று அவர்களுக்குக் காண்பிக்க வேண்டும்.

**செல்லான் கிழவன் இருப்பின் நிலம் புலந்து**
**இல்லாளின்ஊடி விடும்.**

*- (குறள் - 1039)*

அதைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை...

'நிலம் புலந்து இல்லாளின் ஊடிவிடும்' - என்பார் வள்ளுவர். அதைப்பற்றிக் கவலைப்படுவதே இல்லை.

'தோண்டத் தோண்ட' - என்றால், முயற்சி இருக்க இருக்க...

ஐந்து வயதிலே முயற்சி இருக்கலாம். பத்து வயதிலே முயற்சி இருக்கலாம். சாகப்போகிற வயதிலேயும் இருக்கலாம். அதனால் பின்னாலே ஒரு பழமொழி பண்ணி விட்டார். 'பாடை ஏறினும் ஏடது கைவிடேல்'. 'நீ கட்டேலே போறபோதுகூட விடாதடா...' என்று அப்படி compensate பண்ணிவிட்டார்.

'இளமையில் கல்' என்று சொல்லிப் 'பாடை ஏறினும் ஏடது கைவிடேல்' என்ற இரண்டையும் சேர்த்தார் வள்ளுவர்.

அப்போது மணற்கேணியிலே என்ன இருக்கு? பாறையிலே தண்ணீர் இல்லையா? இருக்கு. தெரியும் வள்ளுவனுக்கு. அப்போது ஏன் மணற்கேணியைச் சொன்னார் என்றால், நீ பண்ணுகிற முயற்சியை விடப் பலன் அதிகமாகக் கிடைக்கும். பாறைக் கேணியில் முயற்சி ரொம்ப ஜாஸ்தியாக இருக்கும். பலன் எவ்வளவு இருக்கும் என்று சொல்ல முடியாது. மணற்கேணியில அப்படி இல்லை. சும்மா கையினாலே பறிச்சாலே போதும். அதை நினைக்கிறார் சேக்கிழார். இந்தத் தொட்டனைத்தூறும் மணற்கேணி என்கிற அற்புதமான உவமை அவரிடம் வேலை செய்கிறது. எங்கே பயன்படுத்துவது? பழங்காலத்துப் புலவன் என்றால் புகுந்து விளையாடிவிடுவான், 'சாக்கடையெல்லாம் தீர்த்தம்' என்று. சேக்கிழார் அப்படிப் பாடுகிற ஆள் இல்லை.

வரலாற்றுமுறையில் (Historical) பாடவேண்டும் என்று நினைக்கிறார். எங்க ஊரிலே (தொண்டை நாட்டிலே) ஒரு ஆறு இருக்கிறது. அதற்குப் 'பாலாறு' என்று பெயர். அதில் பால்தான் ஓடும். அதாவது பௌர்ணமி அன்று பார்த்தீர்களானால் அப்படியே பால் ஓடுகிற மாதிரி இருக்கும். மழை பெய்யிற போதும் தண்ணியே ஓடாத இந்த ஆற்றைச் சொல்லணும். அவர் தொண்டை நாட்டுக்காரர். அதான் ப்ராப்ளம். 'எங்க ஊர் ஆற்றிலே மழை பெய்தால் போதும். இதை எப்படிச் சொல்வது' எனப் பார்க்கிறார்.

கம்பன் இதற்கு முன்னாலே ஒரு தப்புப் பண்ணி விட்டான். அவன் சரயூ நதியைப் பாட வந்தான். 'சரயு என்பது தாய் முலை அன்னது' (கம்ப - பாலகாண்டம் 1-12) என்று பாடிவிட்டான்.

தாய்ப்பால் எப்படிப் பால் சுரக்குமோ அதுபோலச் சரயு நதி சுரக்கும். இதிலே 'அதி வியாப்தி குற்றம்' என்று ஒன்று இருக்குது. அந்த உவமை முற்றிலும் பொருந்தாத உவமை. குழந்தை பால் குடிக்க ஆரம்பித்தால்தான் பால் வரும் தாய்க்கு. வாயை எடுத்துவிட்டால் பால் நின்றுபோகும். அது மாதிரியா சரயு? அப்போது இந்த உதாரணம் பொருத்தமில்லை.

'தொட்டனைத்தூறும் மணற்கேணி' வள்ளுவனுடைய இந்த உவமையைப் பயன்படுத்தணும். கம்பன் பண்ணின தவற்றைச் சரி பண்ணணும். என்ன பண்ணனும் என்று பார்க்கிற போது சரியாகப் பட்டது பாலாறு.

தண்ணி ஓடாத ஆற்றை என்னமாய்யா பாடறது? 'தண்ணி ஓடாது' என்று அப்படி யெல்லாம் சொல்லி விடாதீர்கள்.

**மள்ளர் வேனிலின் மணல்திடர் பிசைந்து கைவருட**
**வெள்ள நீர் இரு மருங்குகால் வழிமிதந்து ஏறிப்**
**பள்ளகீள் வயல் பருமடை உடைப்பது பாலி**

- (பெ.பு. திருக்குறிப்பு. 22)

கோடைக் காலத்திலே கூட... வேனிலில் கூட நல்ல வெய்யில் காலத்திலே கூட - பிசைந்து கை வருட - பறிச்சு அப்படி மண் எடுத்தான்னா தண்ணீர் வரும்.

உண்மை. இன்றைக்கும் பாலாற்றிலே தோண்டினால், தண்ணீர் வரும். தண்ணீர் இல்லாத ஆற்றைப் புகழவும் வேண்டும். மணற் கேணி என்று சொன்னாரே அந்த உதாரணத்தையும் நினைவில் கொள்ள வேண்டும். கம்பன் இப்படி ஒண்ணு கிடக்க ஒண்ணு சொல்லி விட்டானே அதையும் சீர் செய்ய வேணும்.

ஆகமொத்தம் இவன் எவ்வளவு முயற்சி பண்றானோ- இரண்டடி தோண்டினால் அதற்குத் தகுந்த தண்ணீர் வரும், பத்தடி தோண்டினால் அதற்குத் தகுந்த தண்ணீர் வரும், இருபதடி போனால் அதற்குத் தகுந்த தண்ணீர் வரும். ஆக, 'தொட்டனைத்தூறும் மணற்கேணி' என்கிற அந்த உவமை இருக்கிறதே, சிந்தித்துச் சிந்தித்து மகிழ வேண்டிய ஓர் உவமை.

அதை எதற்குச் சொல்ல வருகிறான்?

மாந்தர்க்குக் கற்றனைத்தூறும் அறிவு. கற்றல் என்று சொன்னவுடன் தயவு செய்து புத்தகத்தைப் படித்தல் என்று நினைத்துவிடாதீங்கள். பகவான் ராமகிருஷ்ண ருக்குக் கையெழுத்தே போட வராது. முழங்கையால்தான் போடுவார். ஆனால், ஏக சந்தகிராகியாளராகிய விவேகானந்தர்கூட அங்கே உட்கார்ந்து பயபக்தியாக கேட்க வேண்டிய அளவுக்கு அமைந்த 'ஞானம்' அது. 'M' என்ற ஒருவர் அதை record பண்ணியிருக்கிறார். பார்த்தீர்கள் என்றால், அவரது வாயிலிருந்து வருகிற வார்த்தைகள் பெரிய விஞ்ஞானி, அல்லது பெரிய தத்துவ ஞானி கூட முக்கி முக்கி விளக்க ஆரம்பித்தால் புரிந்து கொள்ள முடியாததை எளிதில் புரிய வைத்தன.

அப்படிப்பட்ட எளிய உதாரணத்திலே அழகாகச் சொல்லி விடுவார். இது எப்படிக் கிடைக்கிறது? அதை நம்மவர்கள் 'திருவருள்' என்று சொன்னார்கள். உங்களுக்கு அதிலே நம்பிக்கை இல்லை என்றால், திருவருள் என்று சொல்ல வேண்டாம் உள்ளுணர்வு (இன்ட்யூஷன்) என்று வைத்துக் கொள்ளுங்கள்.

இப்போது பெரிய விஞ்ஞான உண்மைகள் புதுமைகள் 80% of the discoveries in modern science is only by intuition. இதில் யாரும் தருக்க ரீதியாகப் (logical) போனது கிடையாது. கிடைத்திருக்கிறது. அது எப்படிக் கிடைத்தது என்று தெரியாது.

அது மாதிரி இவர்களுக்கு 'இன்ட்யூஷனிலே' கிடைக்கிறது. பகவான் ராமகிருஷ்ணருக்கு இன்ட்யூஷனாகத் தெரிகிறது. ஓதாது உணர்தல் என்று தாயுமானவர் சொன்னார். சேக்கிழார்தான் இதற்கு எல்லாம் authority. ஞானசம்பந்தர் ஐந்து வயதிலே பாடினார். எப்படி ஐந்து வயதிலே பாட முடியும்? என்னென்ன பாடினார்? சம்பந்தரின் பத்துப் பாட்டிலே பார்த்தீர்களானால் கலை ஞானம் இருக்கிறது. விஞ்ஞானம் இருக்கிறது. மெய்ஞ் ஞானம் இருக்கிறது. பொலிடிகல் சயன்ஸ் இருக்கிறது. இப்படி யெல்லாம் எப்படிப் பண்ணமுடியும் இந்த வயதிலே?

**உவமையிலாக் கலைஞானம் உணர் வரிய**
**மெய்ஞ்ஞானம்**
**தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்**
*(பெ.பு.திருஞா. 70)*

என்று பாடுகிறார். அறிதல் என்று ஒரு வார்த்தை இருக்கிறது; தெரிதல் என்று ஒரு வார்த்தை இருக்கிறது; கற்றல் என்று ஒரு வார்த்தை இருக்கிறது; சிந்தித்தல் என்று ஒரு வார்த்தை இருக்கிறது. இத்தனையும் விட்டு விட்டார். ஏன் என்றால் ஐந்து வயதிலே கற்க முடியாது. சிந்தித்தலும் சாத்தியம் இல்லை. இரண்டும் இல்லை என்றால் தெளிதல் இல்லவே இல்லை. கேட்டல் யார்கிட்டே போய் ஐந்து வயது பையன் என்னத்தைக் கேட்டிருக்கப்போகிறான்? பின்னே எப்படி இதெல்லாம் வந்தது?

'தாம் உணர்ந்தார்' என்ற அந்த வார்த்தையைப் போட்டார். உணர்தல் என்ற வார்த்தையைப் போட்ட உடனே he is not responsible for that; product has been given to him. யாரோ கொடுக்கிறார்கள். அதை அப்படியே வாங்கிச் சொல்கிறார். அது மாதிரி இவருக்கு அறிவு விளக்கம் தருகிறது.

இந்த 'உணர்தல்' என்ற வார்த்தையின் நுணுக்கத்தைச் சேக்கிழார் தான் முதன் முதலே உபயோகப்படுத்தியிருக் கிறார்.

'தவ முதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந் நிலையில்'. அறிந்தார் என்று சொல்லவில்லை. உணர்ந்த பிற்பாடு அதைச் சொல்வது ஒன்றும் பெரிய காரியம் இல்லை.

பன்னிரண்டாம் நூற்றாண்டிலே இந்த etymology என்னவென்று தெரிந்து, அதை உபயோகப்படுத்துகிறார் சேக்கிழார்.

*பாரதி வருகிறான். அப்படியே அந்தச் சொல்லில் ஈடுபடுகிறான். அவன் தருமன் சூதாடுவதைச் சொல்ல வருகிறான்.*

**கோயில் பூசை செய்வோர் சிலையைக்**
**கொண்டு விற்றல் போலும்....**

*- (பாரதி. பாஞ்சாலி சபதம். 219)*

*இது இப்போது தான் நடக்கிறது. நடராஜாவைத் தூக்கிக்கொண்டு போவது என்று நினைக்காதீங்க. தமிழ்நாட்டிலே எப்போது இருந்தோ நடந்துவந்தது. (இது பழமையான வியாபாரம்) கோயில் பூசாரியே விற்று விடுவான்.*

**கோயில் பூசை செய்வோர் சிலையைக்**
**கொண்டு விற்றல் போலும்**
**வாயில் காத்து நிற்போன் வீட்டை**
**வைத்திழத்தல் போலும்**
**ஆயிரங்களான நீதி அவைஉணர்ந்த**
**தருமன்நேயம் வைத்திழந்தான்**
**சீச்சீ சிறியர் செய்கை செய்தான்**

*- (பாரதி.பாஞ்சாலி சபதம் - 219)*

*ஆயிரங்களான நீதி அவை 'உணர்ந்த' தருமன் என் கிறான். 'அறிந்த' என்று சொல்லவில்லை. 'அறிந்தவன்' என்ன பண்ணுவான்? பிரமாதமாகச் சமாதானம் சொல்வான். பட்டிமண்டபத்தில் பேசித் தன் கருத்தை ஏற்றுக் கொள்ளச் செய்து விடுவான். 'ஆயிரங்களான நீதி அவை உணர்ந்த தருமன்' - நாட்டை வைச்சு*

விளையாடிட்டானே - அற்பப்பயல் - என்கிறாள். 'உணர்ந்த' என்ற சொல்லையே பாரதி இங்கே உபயோகிக்கிறான்.

பன்னிரண்டாம் நூற்றாண்டிலே சேக்கிழார் பயன் படுத்திய சொல்லைப் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே பாரதி பயன்படுத்தினான். கம்பன் எப்படி? இரண்டு பேருக்கும் தாத்தா.

ஏன் என்றால் வள்ளுவன் காலத்துச் சாரத்தை அப்படியே வாங்கினவன் அவன்.

இராவணன் இந்த மாதிரித் தப்புப் பண்ணிவிட்டான். மாரீசன் அவனைத் திட்ட வருகிறான். கும்பகர்ணன் அவனைத் திட்ட வருகிறான். இந்த இரண்டு பேர்தான் அவனைத் 'தப்புப் பண்ணிட்டேடா' என்று திட்டுகிற வர்கள்.

**ஆயிரம் மறைப்பொருள் உணர்ந்து அறிவு அமைந்தாய்**
**தீயினை நயப்புறுதல் செய்தனை தெரிந்தாய்**
**ஏயின உறத் தகைய இத் துணைய வேயோ?**

*(கம்ப - மந்திராலோசனை - 48)*

கும்பகர்ணன், 'இராவணன் அண்ணன்' என்கிற மரியாதை யோடு தான் பேசுகிறான்.

**ஆயிரம் மறைப்பொருள் உணர்ந்து அறிவு அமைந்தாய்**

அறிந்தது அல்ல - உணர்ந்து அறிவு அமைந்தாய். ஆயிரம் மறையை அல்ல - மறைப்பொருளை உணர்ந் தாய். யார்? கும்பகர்ணன் பேசுகிறான். எல்லாரையும் போல அத்யயனம் பண்ணி அல்ல. தவளைக் கத்திக்

கிட்டிருக்கிற மாதிரி இல்லை. ஆயிரம் மறைப் பொருளை உணர்ந்து அதனால் அறிவு அமைந்தவன்.

தீயினை நயப்புறுதல் செய்தனை தெரிந்தாய்

நெருப்பை எடுத்து மடியிலே கட்டிக்கொண்டான். இதனைத் தான் பின்னர்

அக்கினிக் குஞ்சு ஒன்று கண்டேன்

என்று பாரதி பாடினார். இது கம்பனில் இருந்து வாங்கியது.

அப்படியே கட்டிப்பிடித்துக் கொண்டு விட்டாயே நெருப்பை. இது மட்டுமா வரப்போகுது. என்னன்னவோ வரப்போகுது

ஆக, இந்த உணர்தல் என்ற சொல்லை இப்படி வாங்கிக் கொள்கிறார்கள். இதுதான் தொட்டனைத்து ஊறுதல். அதாவது ஒரு சொல்லை ஒரு மாபெரும் கவிஞன் எப்படி எப்படி உபயோகப் படுத்தியிருக் கிறான். அதுதான் உள்ளுணர்வு.

இப்போது ஒரு குழந்தை படிக்கிறது குறளை. ஒரு பாட்டைக் குழந்தை படிக்கிறதுக்கும் நாம் படிக் கிறதுக்கும் என்ன வித்தியாசம்? வெறும் பதத்தைக் குழந்தை படிக்கும். அதுக்கு மேலே போக முடியாது.

இருபத்தைந்து வயது. இப்போது பதத்தை விட ஆழமாகப் போகலாம் - ஏன் அப்படிச் சொன்னான் என்று. இன்னும் வயசு ஆக ஆக அதை இந்தப் பய அப்படிச் சொன்னானே அது ஏண்டா?' என்று ஆராயலாம்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

என்கிறான் வள்ளுவன்.

"நீ கவலைப்படாதே; படி, இது சரியா என்று சிந்தித்துப்பார்." அதைத் தான் அவனே சொன்னான். எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் என்று. தட்சிணாமூர்த்தி மரத்தடியில் சொன்னார். அதைக் கூடச் சிந்தித்துப் பார். அப்படியே எடுத்துக் கொண்டால் அது கட்டுச் சோறு மாதிரி ஆயிடும். அதை உன்னுடையதாக ஆக்கிக் கொள்ள வேண்டுமானால் அதனை ஆராய்ச்சி செய். (question it.) கேள்வி கேட்கக் கேட்கத் தொட்டனைத்தூறும் மணற்கேணி....

இலக்கியம் படிக்கிறோம். 'பெரிய புராணம் என்ற ஒரு வார்த்தை இருந்தது' அதை ந்யூரான் கொண்டு போய்ச் சேர்க்கிறது. It all takes place in a hundredth of a second or less than that. உடனே கண்ணாடி டம்ளரையோ டேப் ரெக்கார்டரையோ நினைக்கல. இந்த நூலை நினைவுக்கு கொண்டு வருகிறது. எப்படி? அது ஒரு different set of neurons இந்த நூலுக்குண்டான தோடு இணைந்திருக்கிறது. அதைத்தான் association of ideas என்று சொல்வார்கள்.

இந்தச் சொல்லைப் படித்தவுடனே இந்தச் சொல் புத்தகத்தின் வடிவத்தை மனத்திற்குக் கொண்டு வரு கிறது. பெரியபுராண நூலுக்குப் போய் இணைக்கிறது. இலக்கியம், உடலியல், உளவியல் ஆய்வாளர்கள் மூன்று

பேரும் சேர்ந்து செய்த ஆராய்ச்சியைச் சேர்த்துக் கற்றனைத்தூறும் அறிவு என்று வைத்தான்.

நீ மேன் மேலே படிக்கப் படிக்க ஊறும் என்று சொன்னானே - என்ன அர்த்தம்? அப்போ, இந்த ந்யூரான்கள் சேர்த்து வைச்சிருக்கு; உனக்கே தெரியாது அந்த உடைமை. எவ்வளவுன்னு. அதை யாராவது எடுத்துக்காட்டினாப் புரிந்து கொள்ள முடியும்.

அதை வேறு விதமா உங்களுக்குச் சொல்லணும்னா, ஆளவந்தார் என்று ஓர் ஆசாரியர். அவர் ஈசுவர முனிகளின் மைந்தர்; நாதமுனிகளின் பேரர். அவரை அரசனும் அரசியும் தங்கள் அரண்மனையில் வளர்த்தனர். அரசன் தான் நாட்டில் பாதி கொடுத்தான். அவருடைய தாத்தா நாதமுனிகள் மிகப் பெரிய வைணவ பக்தர். பேரப் பையன் நல்ல வயசுக்கு வந்து இவரை வளர்க்கிற காலத்துல அவர் காலமாகி விட்டார். மணக்கால் நம்பி அவருடைய சீடர். மணக்கால் நம்பியைக் கூப்பிட்டார். 'அந்த பேரன் ராஜாவாப் போய்விட்டான். நீ எப்படியாவது அவனைக் கரையேற்றிக் கொண்டு வரணும்.' என்று கூறினார்.

மணக்கால் நம்பி ரொம்ப அறிவுள்ளவர். திடீரென்று ராஜாகிட்டே போய் நின்று 'ஒங்க தாத்தா இதையெல்லாம் விட்டு விட்டுப் பெருமாளைச் சேவி என்று சொன்னார்' என்றால், சரி 'நீ போய்ச் சேவித்துக்கிட்டு இரு. நான் பின்னாலே வந்து பார்த்துக்கிறேன்' என்பான்.

மகா அறிவாளியாகிய அவர் என்ன பண்ணினார்? He never wanted an interview with the king.

தூதுவளைக் கீரை மகாராஜாவுக்கு ரொம்பப் பிடிக்கும் எனக் கேள்விப்பட்டார். தினமும் தூதுவளைக் கீரையைக் கொண்டு வந்து பின்பக்கமாகச் சமையல் காரன் கிட்டே ஒரு 'கத்தையைக்' கொடுத்துவிட்டுப் போய் விடுவார்.

தினம் சமையல் பண்ணிவைப்பான். ஆளவந்தாருக்கு ரொம்பச் சந்தோஷம். தினமும் தூதுவளைக் கீரை கிடைக்கிறது. மகாராஜாவுக்குக் கிடைக்காதா என்ன? ஆனால் தினம் தூதுவளைக் கீரை வேணும்னு மகாராஜா யார் கிட்டே போய்ச் சொல்ல முடியும்? நாம் என்றால் யார் கிட்ட வேண்டுமானாலும் சொல்லலாம். மேலே போகப்போக ரொம்பப் பரிதாபமான நிலை தான் வரும். Uneasy lies the head that wears the crown என்று சொல்வாரே ஷேக்ஸ்பியர். அதுமாதிரி; சொல்லவும் முடியாது மெல்லவும் முடியாது. கிடைத்தது; சாப்பிட்டுக்கிட்டே இருந்தார். ஒரு மாதம் கொடுத்தார். அப்புறம் அதை நிறுத்திவிட்டார். அன்றைக்குச் சாப் பிடுகிற போது 'எங்கேடா தூதுவளைக் கீரை' என்றார். 'இல்லீங்க... ஏன் என்றால் யாரோ ஒருவன் - ஒரு கிழவன் தினம் கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் போவான். இன்றைக்கு அவன் கொண்டுவந்து கொடுக்கலிங்க' என்றான்.

'சரி நாளைக்கு வரும்' என்று பார்த்தார். நாளை மறுநாள் வரும் என்று பார்த்தார். நான்கு நாள் ஆச்சு. வரவே இல்லை.

ராஜாவுக்குத் தூதுவளை மேலே ஒரு விதமான வெறி உண்டாகிவிட்டது. 'போய்ப் பிடிடா அந்தக் கிழவனை எங்கிருந்தாலும்' என்றார்.

சரி என்று, தேடிப்பிடித்துக் கிழவனைக் கொண்டு வந்தார்கள். ராஜாகிட்டே நிறுத்தினார்கள். ''நீ தான் தூதுவளைக் கீரை கொடுத்தாயா?'' என்றார். 'ஆமாம் நான்தான் கொண்டு வந்து கொடுத்தேன்.' ''ஏன்?''

''உங்க தாத்தா ஒரு பொக்கிஷம் வைத்திருக்கிறார். அதை உங்களிடம் காட்ட வேண்டும் என்று சொன்னாரு. எப்படி மகாராஜாகிட்டே வந்து சொல்வது? என்னை விடுவானா, என் கோலத்தைப் பார்த்து. பார்த்தேன். இதுமாதிரி தூதுவளை கொடுத்து கிட்டு இருந்தேன்.''

இப்போ ராஜாவுக்குப் பொக்கிஷம் என்றவுடன் ஆசை உண்டாயிற்று. இன்னும் கொஞ்சம் ராஜ்யத்தைப் பெருக்கலாம் என்று எண்ணினார். 'அப்படியா எங்கே இருக்கு?''...

''அங்கே நம்ம இரண்டு பேர்தான் போக முடியும். நான் தான் காட்ட முடியும். இந்த மாதிரி ராஜா தடபுடலா வந்தால் கஷ்டம்.''

''பொக்கிஷத்தை வேறு ஒருவன் திருடிக்கிட்டுப் போய் விட்டானா? பங்கு கேட்டானா?'' என்றார். எனவே எல்லாரையும் விட்டுட்டு ராஜா மணக்கால் நம்பியோடே புறப்பட்டார். இப்படிப் புறப்பட்டு ஸ்ரீரங்கம் வரணும். வரும்போது அங்கங்கே தங்கித்

தங்கிப் பிரபந்தங்களைப் படித்திட்டு ஸ்ரீரங்கத்துக்கு வந்தார். 'இதைப் பார். இதுதான்' என்று திருவரங்கப் பெருமானைக் காட்டினார். அப்பொழுதே ஆளவந்தார் துறவை மேற்கொண்டார். ராஜ்யம் எல்லாத்தையும் விட்டுட்டு. இந்த அபிப்பிராயம் எங்கிருந்தது அவருக்கு? இதுதான் ஊறுதல் என்று பெயர்.

நியூரானில் எங்கோ இருந்தது. அது நமக்குத் தெரியாது. (Somewhere in the neurons. We don't know.)

இதனைப் பரம்பரை என்று சொல்வீர்களா? அல்லது பூர்வ புண்ணியம் என்று சொல்வீர்களா? அல்லது உங்களுடைய தொடர்பால் வந்தது என்று சொல்வீர் களா? சூழலால் வந்தது என்று சொல்வீர்களா? என்ன பெயர் வேண்டுமானாலும் சொல்லுங்கள். இது நம்மவர் கள் கண்டுபிடித்தது. Modern science accepts it. ESP என்று சொல்றார்களே அதுதான். They have come to the conclusion that there are certain things which are inside us. We do not know they are there... யாராவது ஒருத்தர் வந்து அதைத் திறந்து காட்டினால் அதனை அறிய முடியும்.

நமக்குள் இருக்கிறது. திருவருள் மூலமாக அது எப்பவாவது யாராவது வந்து வழிகாட்டினார்கள் என் றால், உணர முடியும். போறபோக்கிலே சொல்லிட்டுப் போவான். நம்பவே முடியாது.

நம்ம சின்னசாமி ஐயர் மகன் பாரதி இருந்தாரே. கவிச் சக்ரவர்த்தி பாரதி எங்கள் வெங்கட்ராமன் மாவட்டத்தைச் சேர்ந்தவர் தான். அவர் நாட்டுப் பாடல்

எல்லாம் பாடிக் கொண்டிருந்தார். ஒன்றும் குறைச்சல் இல்லை.

பாண்டிச்சேரி போனார். இறைவன் என்று சொல் லுங்கள் அல்லது இயற்கை என்று சொல்லுங்கள். எனக்கு ஒன்றும் தடை கிடையாது.

அங்கே ஒரு பைத்தியம். ஊரிலே உண்டான குப்பை எல்லாம் தூக்கி, துப்பட்டிக்குள்ளே போட்டுக்கிட்டு, ஊரெல்லாம் சுத்தி வரும். எல்லாரும் பைத்தியம் பைத்தியம் என்பார்கள்.

கொஞ்ச நாள் கழித்துப் பாரதி தற்செயலாகஅவ ருடைய கண்ணைப் பார்த்துவிட்டார். 'அட, தெய்வமே! இவர் பைத்தியம் இல்லை' என்று உணர்ந்தார். அவர் இவரைப் பின்தொடர்ந்து கொண்டே இருந்தார். இவர் தவிர்த்துக் கொண்டே இருந்தார்.

ஒரு நாள் மணக்குள விநாயகர் கோவில் தெருவிலே போய் அவருடைய காலைப் பிடித்துக் கொண்டு 'எனக்கு வழி காட்டவேண்டும்' என்றார். 'என்னடா வேணும்னு' கேட்டார் அவர். 'ஊரில் இருக்கிற குப்பை யெல்லாம் ஏன் சுமக்கிறீர்' என்று கேட்டார் பாரதியார்.

'மடையா மடையா நான் வெளியில் சுமக்கிறேன். நீ உள்ளே சுமக்கிறாய்' என்றார். அவ்வளவுதான் உபதேசம். 'ஓம் நமச்சிவாய' இல்லை. 'நமோ நாராயணாய' இல்லை.

அந்த உபதேசம் என்பது எப்படி வரும் என்ற கவலையே கிடையாது அவங்களுக்கு

சும்மா இரு சொல்லற என்றலுமே
அம்மா பொருளொன்றும் அறிந்திலனே

*என்று பாடுவார் அருணகிரிநாதர். என்ன உபதேசம் பண்ணினானாம்...?*

"சும்மா இரு சொல்லற"

*என்றானாம்.*

*'சும்மா இரு' என்றதாலே 'மௌனமாக இரு' என்று அர்த்தம் பண்ணிட்டாங்க. அப்படியென்றால் பைத்திய மெல்லாம் மோட்சத்துக்குப் போயிடும் - அதாவது ஊமையெல்லாம் மோட்சத்துக்குப் போயிடும். அயோக் கியத்தனம் பண்ணுவோம்னு தெரியும் அருணகிரி நாதருக்கு - 'சும்மா இரு' என்று மட்டும் சொல்லாமே, 'சும்மா இரு' சொல்லற' என்றானாம். அதாவது சொல்லற்றுப் போவது. எண்ணம் என்பது எப்படி வருது? சொற்களால் வெளிவருகிறது. நாம் சொற்களால் நினைக்கிறோம்.*

*சொற்கள் இல்லேன்னா எண்ணமே கிடையாது. அதைத்தான் புத்தன் சொன்னான் - "எண்ணங்கள் தூய்மை அடையட்டும்" என்று.*

*தம்ம பதத்தின் தொடக்கத்திலே நாலாவது வரியே இதுதான். எண்ணங்கள் என்றும் இருப்பவை. எண் ணங்கள் சொற்களின் மூலமாக வருகின்றன. எண்ணங்கள் தூய்மையானால் சொல் சுத்தமாக வரும்.*

*நம்மவர்கள் அதைத்தான் சொன்னார்கள். "சும்மா இரு சொல்லற என்றலுமே அம்மா பொருளொன்றும்*

அறிந்திலனே'' என்று அதனை அருணகிரிநாதப் பெருமான் அநுபவித்துப் பாடுகிறார்.

அருணகிரிநாதருக்கு 300 வருஷம் கழித்து வருகிறார் தாயுமானவர். அருணகிரிநாதர் போய் 650 ஆண்டுகள் ஆகிவிட்டன. தாயுமானவர் 250 ஆண்டுகள் கூட ஆகவில்லை. நினைத்துப் பார்க்கிறார்.

ஐயா அருணகிரியப்பா உனைப்போல
மெய்யாக ஒரு சொல் விளம்பினவர் யார்

(தாயு: உடல் பொய்யுறவு)

ஒரு சொல் - என்ன சொல்லு? 'சொல் அற' என்று சொன்னாரே. 'ஐயா அருணகிரியப்பா' உனைப்போல மெய்யாக ஒரு சொல் விளம்பினவர் யார்? ஆக, ஒரு ஞானியை இன்னொரு ஞானிதான் போற்றிப் பாராட்ட முடியும்.

எத்தனையோ பாடியிருக்கிறார் அருணகிரியார். அத்தனையும் விட்டுவிட்டு இந்த ஒரு சொல்லைப் பிடித்துக்கொண்டார் தாயுமானவர்.

உனைப் போல ஒருசொல். அதுவும் மெய்யாக. விளம்பினவர் யார்? ஏன்னா, அனுபவத்தால் கிடைத்தது. அருணகிரியாருக்கு எப்படிக் கிடைத்தது?

அது எங்கேயோ இருக்கிறது. எவனோ ஒருத்தன் வருகிறான். இவனுக்குத் தெரியாது. ஆனால் அவனுக்குத் தெரியும். எப்போது வரணும், யார் கிட்டே வரணும்; என்ன சொல்லணும்? எல்லாம் அவனுக்குத் தெரியும். ஆனால், இவனுக்குத் தெரியாது, எந்த வாத்தியார் வரப்போகிறார் என்று.

வருபவர்கள் சில சமயங்களிலே விஸ்தாரமாக உபதேசம் பண்றாங்க. சில சமயங்களிலே ஒரு சொல் சொல்றாங்க. சில சமயங்களிலே அதுவும் இல்லை. கண்ணாலே பார்த்துவிட்டுப் போய்விடுகிறார்கள். நயன தீக்ஷை என்று பெயர். சில சமயங்களிலே காலாலே உதைக்கிறாங்கள். திருவடி தீக்ஷை என்று பெயர். சில சமயங்களிலே இப்படித் தொடறாங்க. அது ஸ்பரிச தீக்ஷை என்று பெயர்.

எந்த தீக்ஷை பண்ணினால் உனக்கு நியூரான்கள் திறக்குமோ, உள் உணர்வு வெளிப்படுமோ அது அவர்களுக்குத் தெரியும். அதைத் தெரிந்து செய்கிறாங்க.

ஆகவே, 'கற்றனைத்தூறும்' 'கற்றல்' என்றவுடன் நாம் என்ன தப்புச் செய்து விட்டோம். புத்தகத்தைப் படிப்பது மட்டும் என்று கருதி விட்டோம். அது சரியன்று.

புஸ்தகத்தைப் படிக்கிறதும் கல்விதான்; எவனையோ கேக்கிறதும் கல்விதான்; நாலு பேரோடே கலந்துரையாடுவதும் கல்விதான். ஒண்ணுமே இல்லை. ரமணர் கிட்ட போனால் ஒண்ணும் சொல்ல மாட்டார். ஒரு மூலையில் அமைதியாக உட்காரணும். - பல பேருக்குப் பைத்தியம் பிடித்துடும். - காரணம் பக்குவமில்லாதவற்குப் பைத்தியம் தான் பிடிக்கும். அந்த நான் யார்? ('Who am I') என்கிற கேள்வி ஒண்ணுதான்.

'கல்வி என்பது ஏட்டுக் கல்வி, காதால் கேட்கிற கல்வி, பிறரோடு பேசுகின்ற கல்வி, சிந்திக்கின்ற கல்வி எல்லாமே கல்விதான். கல் என்றால் என்ன? தோண்டுதல்

என்று அர்த்தம். தோண்டுகிறது - புத்தகத்தைத் தோண்டி னாலும் சரி - கண்ணை மூடிக் கொண்டு உள்ளே தோண்டிக் கொண்டாலும் சரி.

முடிஞ்சவர்கள் உள்ளே தோண்டுங்க - முடியாதவர்கள் வெளியே தோண்டுங்க. ஆக மொத்தம் தொட்டனைத் தூறும் அறிவு. அது ஒன்றும் புதியதாக வந்து தொப் பென்று' குதித்து விடவில்லை. அது உள்ளே இருக்கிறது. யாராவது ஒருவர் வந்து கதவுகளைத் திறக்க வேண்டும். (It is there within Somebody is required to open the gates.)

அப்போது ஊற ஆரம்பிச்சுடும். எவ்வளவு ஊறும்?

....அங்கேதான் நம்ம ராசி. சிலபேருக்கு நீங்க நம்பவே மாட்டீங்க. என்னுடைய வாழ்க்கையிலே எவ்வளவோ மகான்களை நான் சந்திச்சிருக்கிறேன். சொல்லவே முடியாது.

யோக சுவாமிகள் என்று ஒருபெரிய மகான் இலங்கையிலே நான் இரண்டு சொற்பொழிவு செய்தேன். மூன்றாவது சொற்பொழிவில் vocal chord failure. ENT specialist டாக்டர் ஒருத்தர் இருக்கிறார். ஓய்வு பெற்றவர். அவர் வீட்டுக்குக் காரை நானே ஓட்டிக் கொண்டு போய், கையைத் தட்டிக் கூப்பிட்டு, இது மாதிரி ஆய்விட்டது என்று எழுதிக் காட்டினேன். 'கொழும்புக்குப் போய்ப் பார்க்கலாம். நான் ஆளை அனுப்புகிறேன். ஏற்பாடு பண்றேன்' என்றெல்லாம் சொன்னார். வெளியே வந்து காரை ஸ்டார்ட் பண்றேன். ''என் பிழைப்போ வாய்ப்

பேச்சில் தான் - அது போயிருச்சு.'' என்று அஞ்சியவனை அப்போது அந்த டாக்டர் 'நீங்கள் யோக சுவாமிகள் சீடரல்லவா? அவரைப் பார்த்துபோட்டுப் போகலா மல்லவோ?' என்றார். அதுவரைக்கும் நான் நினைக்கக் கூட இல்லை. அப்புறம் போனேன். அவர் கண்ட படி பேசுவார். கெட்ட வார்த்தையெல்லாம் சொல்லித் திட்டுவார். பேச்சோடு பேச்சாகச் சொன்னார்: ''சேக்கிழாரையும் கம்பனையும் வெட்டித் தானே புதைக்கணும். நாங்கள் தானே புதைக்கணும். பொடியன் போ!'' என்றார். அவ் வளவுதான். ''சரி உத்தரவு'' என்ற வார்த்தை என் வாயில் வந்தது. விழுந்து கும்பிட்டேன். வரும்போது 'டாக்டர்' என்று நடு ரோட்டிலே இருந்து கத்தினேன் அப்போது எனக்கு 40 வயது கூட இல்லை. டாக்டர் 70 வயதானவர். தடால் என்று விழுந்து கும்பிட்டார். ''அவர் (யோகசாமி) ஒருத்தர் தான் இது செய்ய முடியும். கொழும்புக்கு அனுப்பிப் பார்க்க வேண்டியதில்லை. சிலருக்கு vocal chord failure வரும். No treatment for that.'' இதைச் சரிப்படுத்துகிற அளவுக்குச் சித்தர்கள் இருக்கிறார்கள்.

ஆகமொத்தம் தொட்டனைத்தூறும் என்றால் நான் தோண்ட வில்லை. ஆகவே எனக்கு ஊற வில்லை. நான் தோண்ட வில்லை என்று நினைக்கும்போது, மணற் கேணியில்லை. பாறாங்கல் கேணியாக இருக்கு.

தொட்டனைத்து ஊறும் அறிவு - அறிவு என்ற சொல்லை மறந்திடாதீங்க. வள்ளுவரைப் பொறுத்த மட்டிலே அறிவு, உணர்வு, பண்பு எல்லாம் ஒருபொருட் சொற்கள். மாறி மாறி உபயோகப்படுத்துவார்.

பிறிதின்நோய் தன்நோய்போல் போற்றாக் கடை
அறிவினால் ஆகுவதுண்டோ

என்பார்.

அறிவு என்றால் intellect என்று அர்த்தம் பண்ணி விட்டால் இடர்ப்பட நேரிடும்.

அங்கே intellect என்ற பொருள் இல்லை. நீ அன்புடையவனாக, பண்புடையவனாக... இருந்தால் இன்னொருத்தர் நோயைப் பார்த்துக் கையெழுத்துப் போட்டுப் புண்ணியமில்லை. நீ பங்கிட்டுக்கணும். அது எப்படிடா முடியும்? அவனுக்கு வயிற்று வலின்னா, வலியைப் பங்கிட்டுக்கணும் என்று அர்த்தமில்லை. பிறிதின் நோய் தன் நோய்போல் போற்றுதல் என்றால், பங்கிடுதல் என்று அர்த்தமில்லை. அவனுக்கு வயிற்று வலிவந்தால் அவன் எப்படித் துன்பப்படுகிறானோ அது மாதிரி நீயும்... அவன் சாப்பிடாமல் இருந்தால் நீயும் கிட. உண்மையான காதல் பற்றிச் சாதல், நோதல், பிரிவினை நோதல் என்றெல்லாம் இலக்கணக்காரன் சொல்வான். - இதுதான் உண்மையான நட்பு.

இந்தக் கருத்து எப்படி வருகிறது?

அது ஏறிட்டுக்கொண்டு நாம் அனுபவிப்பது.

அறிவினால் ஆகுவதுண்டோ? இது அறிவினால் செய்கிற காரியம் இல்லே. பண்பினாலே செய்வதாகும். ஆகவே, திருவள்ளுவரைப் பொறுத்தமட்டில் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

அறிவு, உணர்வு, பண்பு என்பதை மாறி மாறி உபயோகப்படுத்துவார். அதாவது, அவர் காலத்தில் தனித்தனியே வேறுபடுத்திக் காணவில்லை.

அப்படியானால் அறிவு என்பது அவர்களுக்குத் தெரியாதா? தெரியும். சொல்லைப் பொறுத்த மட்டிலே அது எண்ணத்தில் செம்மையற்ற வாகனம் (Very imperfect. Vehicle of thought) ஆகவே, மாறி மாறிப் பயன்படுத்துகிறார். அவருடைய காலங்களிலே அறிவைத் தெரிந்திருக்கிறான், உணர்வைத் தெரிந்திருக்கிறான். மனத்தின் செயல் என்ன? அறிவின் செயல் என்ன? தெரிந்திருக்கிறான்.

சொல்ல வேண்டிய இடத்திலே சொல்கிறார். சில சமயங்களிலே ''தொட்டனைத்தூறும்' என்று அவர் சொல்லி விட்டதனாலே அதற்கப்புறம் நாம் அப்படியே பின்பற்றுகிறோம். இப்பொழுது கவிதை இருக்கு. கவிதையைப் பார்த்தீர்கள் என்றால், பிற்காலத்தில் வந்த மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை...

வள்ளுவன் எப்போதுமே காப்சூல் வைத்தியக்காரன். ஹோமியோபதி (யுனானி) மாதிரி. இத்தனூண்டு இத்தனூண்டு கொடுப்பான்.

நமது போக்கு? நிறைய மருந்து சாப்பிட்டால் திருப்தி, இத்தனூண்டு மாத்திரை சாப்பிட்டால் திருப்தி அடையறது இல்லே. இந்த மாதிரி வைத்தியம் செய்பவனும் பின்னாலே வந்தான்.

காப்சூல் வைத்தியக்காரனை விட்டுவிட்டு, அவங்க கொஞ்சம் விஸ்தாரமாகச் சொன்னாங்க.

'தொட்டனைத் தூறும் அறிவு' என்றால் - வளர வளரக் கவிதை இருக்கிறதையா.

அது எப்படி இருக்கும் என்கிறீர்களா?

**சான்றோர் கவியெனக்**
**கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார்**

என்று கம்பன் சொல்கிறான்.

காப்சூலை இன்னும் கொஞ்சம் ஆகப் 3cc பண்ணினான் கம்பன். .

'சான்றோர் கவியெனக் கண்ட கோதாவரி' என்று உவமையைப் பொருளாக்கி, பொருளை உவமையாக்கி - அது ஒரு வேடிக்கை.

கோதாவரியைப் பார்த்தீங்கள்னா தெரியும். தெளிவான நீர். கோதாவரிக்கு நிகராகத் தாமிரபரணியைத்தான் பார்க்கலாம். தாமிரபரணியைப் பார்த்தால் $1^1/_2$ அடி தான் இருக்கும். விழுந்தால் இரண்டரை ஆள் மட்டம் போகும். உண்மையான ஆழம், தோற்றமளிக்கும் ஆழம் (Real depth and apparent depth) என்று இயற்பியலில் படிக்கிறீங்களே - அந்த மாதிரி நான் தாமிரபரணியை அனுபவித்தவன்

அதைப் பார்த்து $1^1/_2$ அடி தான் என எதிர்பார்த்தால் ஏமாந்தீர்கள். அது ஐந்தடி ஆழம்.

சான்றோர் கவி இருக்கிறதே பார்த்தால் இவ்வளவு தான் அர்த்தம். அது முடிந்து போச்சு நமக்குத் தெரிந்தது பதவுரை, பொழிப்புரை, கருத்துரை பாறை போறை...

துறை என்று வந்தால் அடுத்த பாட்டுக்குப் போய் விடுவோம்.

சான்றோர் கவி - அதைப் பார்த்தவுடன், ஏன்டா. அப்படிச் சொன்னான்' என்று கேட்டீங்கன்னா, உள்ளே தோண்டத் தோண்ட வரும்.

மகா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை கோதாவரி யைப் போய்ப் பார்த்திருக்க முடியாது. தாமிர பரணியை இவர் பார்த்திருப்பார். அவர் பார்த்தார். எல்லாருக்கும் தெரிந்த மாதுளம் பழம் என்று சொன்னார். மாதுளம் பழத்தை எடுத்தால் மேலே தோல்.... அப்புறம் மெல் லிசா ஒரு படலம். ஆக... பெரியவர்கள் கவிதை மாதுளம் பழம்போலே என்று மகாவித்துவான் சொன்னார்.

கம்பன் கோதாவரி போலச் சான்றோர் கவிதை என்றான்.

வள்ளுவர், 'தொட்டனைத்தூறும் மணற்கேணி' என்றார். நீ தோண்டத் தோண்ட... உன்னுடைய முயற்சி எப்படியோ அப்படி நீ 90 வயதில்கூடத் தோண்டலாம். தோண்டுவதற்கு வயது வரம்பு கிடையாது.

இந்த வயதில் படிச்சு என்ன ஆகப் போகுது என்று நினைக்காதே. இது வரையிலும் தெரியாதது தெரியும்.

இதனை உறுதியாகச் சொல்கிறேன். ஏவி. மெய்யப்ப செட்டியார் அவருடைய மகன் சரவணன் சொன்னாரு - 'அப்பா பேர்லே ஒரு அறக்கட்டளை வைக்கணும். ஒவ்வொரு வருடமும் யாராவது கம்பனைப் பற்றி ஒரு

நூல்...! இஸ்மாயில் சொன்னார் 'டேய் நீ எழுதுடா'. ''நான் கம்பனைப் பற்றி போதிய அளவு எழுதி விட்டேன்.'' என்று மறுத்தேன். இஸ்மாயில் என்னென்னமோ சொல்லிப் பார்த்தார். சரவணனும் 'ஐயா நீங்கள் தான் எழுத வேண்டும்' என்று சொல்ல நான் 'கம்பன் கழகத்திற்குப் போவதையே விடப் போகிறேன். இது வேறு உபத்திரவம்' என்றேன். இஸ்மாயில் 'டேய் நீதான் எழுதணும்' என்று சொல்ல, 'டேய் உன் கதையெல்லாம் என்கிட்ட பலிக்காது' என்று மறுத்துவிட்டேன். என்னவோ அன்னைக்கு ராத்திரியோ அல்லது மறுநாள் காலம்பரையோ நான் தியானம் செய்து கொண்டிருந்தேன். ஒரு முழுமையான எண்ணம் தோன்றியது. இது வரை நானும் ஏகப் பட்டது எழுதியிருக்கிறேன். ஏகப்பட்ட பேர் எழுதியிருக்கிறார்கள். பெரியவர்களில் இருந்து சின்னவர்கள் வரை எல்லாரும் எழுதியிருக்கிறார்கள். யாரும் புலனடக்கம் பற்றி எழுதவில்லை. புலனடக்கம் என்ற வார்த்தையையும் கம்பனையும் இணைக்கவே இல்லை.

அது எனக்குப் புரிந்தவுடனேயே இந்த முதல் பாட்டே இடிக்குது.

**ஆசலம்புரி ஐம் பொறி வாளியும்**
**காசு அலம்பு முலையம் கண் எனும்**
**பூசல் அம்பும் நெறியின் புறம் செலாக்**
**கோசலம் புனை ஆற்று அணி கூறுவாம்.**

*(கம்ப. ஆற்றுப்படலம் - 1)*

தியானம் பண்ணும்போது இந்தப் பாட்டு வரக் காரணம் என்ன?

தேவாரம், திருவாசகம் நினைப்பு வந்தால் சரி. ஒரு சம்பந்தமும் இல்லாமல் வந்தது. அதனை விட்டுவிட முயன்றேன். ஆனால், அந்தப் பாட்டு என்னை விடமாட்டேன் என்கிறது.

பத்து பதினைந்து நிமிடங்களில் தெளிவு ஏற்பட்டது.

**ஆசலம் புரிஜம் பொறி வாளியும்**
**காசு அலம்பு முலையவர் கண் எனும்**
**பூசல் அம்பும் நெறியின் புறம் செலாக்**
**கோசலம் புனை ஆற்று அணி கூறுவாம்.**

(கம்ப. ஆற்றுப்படலம்)

ஏன் இப்படி சொன்னான்? இதனை யாரும் எண்ணிப்பார்க்கவில்லை.

ஒரு பெரிய காப்பியம் - இதில் புலனடக்கமே இல்லாத ஒரு பிரிவினர் இருக்குது. புலனடக்கத்திலேயே உயர்ந்து இருக்கிற ஒரு பிரிவினர் இருக்குது. இவர்களிடையே இடையிலே நம்மைப் போன்றவர்களும் - பொது ஜனமும் - இருக்கிறார்கள்.

புலன் அடக்கத்திற்கே பிறந்தவன் அனுமன்.

இராவணன் மாதிரி: 'எவன் பெண்டாட்டியா இருந்தா என்ன, எனக்கு வேணும்' அவ்வளவுதான். புலனடக்கமே இல்லாதவன்.

சுக்கிரீவன் மாதிரி ஆளுகள். கொஞ்சம் இங்கே கொஞ்சம் அங்கே. ஆனால் அவன் மேலே குற்றம் இல்லே.

நமக்குக் கூட ஞானம் வருது. ஆனால் அது எவ்வளவு நேரம் நிற்கிறது?

சர்க்கரை சாப்பிடக்கூடாது என்று சொல்றாங்க. நானும் சாப்பிடக் கூடாது என்றுதான் நினைக்கிறேன். எதுவரையிலே...?

பார்த்துட்டாக் கொஞ்சம் சாப்பிடத் தோணுது. சாப்பிடறதுன்னு வந்தாச்சு. இதிலே பாதி சாப்பிடுறது கொஞ்சம் சாப்பிடது என்ன இனி? என்னுடைய புலனடக்கம் அவ்வளவுதான். நான் என்ன செய்ய முடியும்? சுக்கிரீவன் நம் படைப்பைச் சேர்ந்தவன்.

எங்கப்பா எனக்காகவே ஒரு கதை சொல்வார்.

குரங்கு ஒண்ணு அமாவாசை விரதம் இருக்கணும்னு நினைச்சுதாம். அது அமாவாசை அன்னிக்கு வெள்ளரித் தோட்டத்திலே உட்கார்ந்து இருந்தது. கொஞ்சம் நேரம் ஆனவுடன் குரங்கு நினைச்சது. 'விரதம்தானே இருக்கணும். வெள்ளரிப் பிஞ்சைப் பறிச்சுக் கையிலே வச்சுருந்தா தப்பு இல்லையே!' என நினைச்சது. உடனே பறிச்சு கையிலே வச்சுண்டது. அப்புறம் நினைச்சது, சாப்பிடத் தானே கூடாது. கடிச்சு கடிச்சுத் துப்பிடுவமே, என்று. அப்புறம் கடிச்சு கடிச்சு துப்பிச்சு. நம்ம வீட்டிலெல்லாம் சாமிக்குப் படைக்கணும்னு தயார் பண்ணும்போது இப்படித்தான். சமயல் செய்றவங்கள் உப்பு சரியாக இருக்கா என்று பாக்க கொஞ்சம் கடிச்சுப் பார்த்துத் துப்பிடுவாங்க அதுபோல். அப்புறம் 'கடிச்சுத் துப்புறதை மென்னு மென்னு துப்பிட்டா என்ன' என நினைச்சது.

அப்புறம் மென்னு மென்னு துப்பிச்சு. அப்புறம் நினைச்சது, 'மென்னு மென்னு வெளிலே துப்பினா என்ன உள்ளேயே துப்பினா என்ன' என நினைச்சது. அப்புறம் மென்னு மென்னு உள்ளேயே துப்பிக்கிடுச்சு. இது தான் என்னுடைய விரதம். நம்ம புலனடக்கம் எல்லாம் இப்படித்தான். 'ஆசலம் புரி ஐம்பொறி வாளியும்' ஐந்து புலன்களாகிய அம்புகள்... மெய் வாய், கண், மூக்கு, காது - அதாவது வம்புகளையே செய்கின்ற - ஐம்பொறிகளாகிய அம்புகள். ஐந்தையும் சொன்ன பிற்பாடு 'காசு அலம்பு முலையவர் கண் எனும் பூசல் அம்பும்!' என்று வருகிறது.

'பெண் என்று சொல்லப்படுகிறவளின் கண் ஆகிய அம்பும்' - இது என்னடா வம்பு? அந்த ஐந்திலே இல்லாததா இது. இல்லை, ஆறாவதாகியதொரு கண் இருக்கிறதா? நெற்றிக் கண். என்னை நினைக்கத் தூண்டியது.

'நெறியின் புறம் செலாக்கோசலம்'

சிவஞான முனிவர் வியாக்கியானம் எழுதுகிறார் மெய்கண்டாருடைய சிவஞான போதத்திற்கு. அவர்தான் முதன் முதலிலே பிரிச்சார் - 'சென்று பற்றும் பொறி - நின்று பற்றும் பொறி' என்று.

அந்த நாளில் அவர்கள் எவ்வளவு முன்னேறி இருந் தார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள். (see how far they had advanced in those days.) எங்கேயோ மரத்தடியில் உட்கார்ந்து சாமியாராக இருந்தவர் சிவஞானமுனிவர்.

திருவாவடுதுறை மடத்தில் இருந்தவர். அங்கே இருந்தவர்கள் என்ன நினைச்சாங்களோ? அவரைத் திருநெல்வேலி ஜில்லாவில் குற்றாலம் போற வழியிலே ஒரு இடம் இருக்கிறது. 'அங்கே போயா' என்று அனுப் பிட்டார்கள். தொல்லை கொடுக்காம இருக்கணுங்கறத் துக்குத் தான் இந்தக் கதை. அங்கே உட்கார்ந்து கொண்டு தான் ஆராய்ச்சி பண்ணினார். எப்படி இவருக்குத் தோணுச்சி என்று தெரியலை. ஐந்து பொறிகளைப் பங்கு பிரிச்சார். சென்று பற்றும் பொறி. நின்று பற்றும் பொறி என்று. காது சென்று பற்றலை. அந்த ஒலி காதில் வந்து விழுந்து என்னை பற்றுது. இனிப்பு இருக்கிறது. வாயில் பட்டால் தான் சுவைக்கிறது. சத்தம் காதில் விழணும். காற்றோ அல்லது வேறு ஏதோ மேலே படணும். இவை எல்லாமே நின்று பற்றும் பொறிகள் - மெய், வாய், மூக்கு, செவி. கண்ணைப் பிரிச்சார். அது சென்று பற்றும் பொறி என்றார். ஸார், அதையெல்லாம் பார்க்கக் கூடாது ஸார். அது என்னத்துக்கு அடுத்த வீட்டுச் சமாசாரம் - பார்க்கிறோமா இல்லையா? இந்தக் கண் இருக்குதே - இது சென்று பற்றும் பொறி. இதை உணர்ந்தான் கம்ப நாடன்.

மற்றப் பொறிகள் தொல்லை கொடுக்கிறதை விட இந்தக் கண் அதிகமாக தொல்லை கொடுக்கும். அதிகமானத் தொல்லை கொடுக்கிறது மட்டும் இல்லே. மற்றப் பொறிகளில்ஏதாவது வந்து விழுந்தால்தான் தொல்லை கொடுக்கும். இது தொல்லையைத் தேடிக் கிட்டுப் போகும்: ஆகவே பிரித்தார்

ஆசலம் புரி ஐம்பொறி வாளி என்று சொல்லிவிட்டுப் பின் கண் எனும் பூசல் அம்பும் அதாவது சண்டை போடுகிற கண்ணும் நெறியின் புறம் செலா... தங்களுக்கு வகுத்த நெறி அலாது, வேறு இடத்துக்குச் செல்லா என்றார்.

ஆக, கம்பனுடைய நோக்கம் என்ன? புலனடக்கம் பேசணும். இராமகதை, ஆன்மீகம். அதெல்லாம் வேறே. இல்லை என்று சொல்லலே. அது எல்லாத்தையும் விடப் புலனடக்கம் வேண்டும்.

வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருக்க வேண்டும். மில்டனுடைய நினைப்பு வருது. அவன் சொன்னான்: "I shall leave into this world a work which the world will not willingly let die" எப்போது? 27-வது வயசிலே. He had not started singing 'Paradise lost.' இந்த உலகமே விரும்பினால்கூட 'சாகடிக்க முடியாத காப்பியத்தைப் படைக்கப் போகிறேன்' அது மாதிரி - கம்பனுக்குப் புலனடக்கம் - நல்ல வசதி சோழநாட்டில் 9-ஆம் நூற்றாண்டில். இலக்கியத் திறனாய்வாளன் சொல்வான். பெருங்காப்பியம் தோன்றணும்னா இரண்டு சூழல் வேண்டும் - before the birth of a powerful dynasty or the end of a powerful dynasty - 9 ஆம் நூற்றாண்டு பல்லவர்கள் ஒழிந்து சோழர்கள் வரப் போகிறார்கள். விஜயவியாசன் முதல் - மூன்றாம் குலோத்துங்கன் வரை - சுமார் 300 ஆண்டுகள் - சோழ சாம்ராஜ்யம் உலகப் பிரசித்தி பெற்றதாயிருந்தது. சோழ சாம்ராஜ்யத்தின் ஆரம்பத்தில் கம்பன் வருகிறான்...

காலத்தேர் அப்படியே ஓடிக்கொண்டிருக்கிறது. எல்லா விதமான வசதிகளும் வருது. பாலும் தேனும் பெருக்கெடுத்து ஓடுது. பிறகு தொல்லை தொடங்கு கிறது. Where wealth accumulates men decay. கம்பனைப் பொறுத்தவரை யாரோ ஒருத்தன் சாப்பாடு போட்டு வசதிகளைக் கொடுக்கிறான். சாதாரணமாக, அப்படி வசதி கிடைத்தவன் நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது பேர் கெட்டுப் போவான். இந்தச் சௌகரியமே கம்பனைச் சிந்திக்க வைக்குது. அவனை என்னமோ பண்ணுது. அப்பதான் - பொறி புலன்கள் துன்பம் தருவதற்காகவே உள்ளன என்னும் நினைப்பு வருகிறது - ஒரு இலட்சிய மனிதன் நடையில் நின்றுயர் நாயகன் - அவனுக்குப் பொறி புலன்கள் இல்லையா? இருக்கின்றன. ஆனால் குதிரையை அடக்கிச் சவாரி செய்வது போல, அடக்கிச் சாரதியாகிறான். இராவணன் மாதிரி இருக்கிறவங்கள் குதிரைகள் மாதிரி ஆகிவிடுகிறார்கள். பொறி புலன்கள் அவங்க மீது ஏறிச் சவாரி செய்கின்றன. இதை நினைத்த வுடன் இதற்கு ஒரு வடிவு கொடுக்கிறான். இது எல் லாம் மூன்று நிமிடங்களில் என்னுள் தோன்றியது. இதை நினைக்கவும் இல்லை. அன்றைக்கு ராத்திரி இஸ்மாயிலுக்கு டெலிபோன் செய்து 'டேய், நான் எழுதப் போறேன்டா' என்றேன். அவர் 'எனக்குத் தெரியும்டா, நீதான் செய்வே என்று' என்றார். இதை நினைக்கவும இல்லை. எதிர்பார்க்கவும் இல்லை. - தொட்டனைத்தூறும் என்பதற்கு ஒரு அழியாச் சான்று இது.

தோண்டுதல் நடக்கிறது. ஏன்? கம்பருக்கும், சேக்கிழாருக்கும் செய்ய வேண்டியதைச் செய்து முடித்து விட்டேன். தோண்டுதல்தான் என் வேலை.

இப்போது ஊறும் என்று சொன்னானே, ஊறிச்சா?

அப்படி எழுதினது தான் அந்தப் புத்தகம்.

எனக்குச் சமஸ்கிருதம் தெரியாது. தேவாரத்தைப் படித்தால், எல்லா தேவாரத்திலும் வேதம், வேதம் என்று... ஒருநாள் அப்படியே தலையிலே கைவச்சுண்டு உட்கார்ந்திருந்தேன். எனக்கு நஞ்சுண்டன் என்று ஒரு நண்பர் ஓய்வு பெற்ற பேராசிரியர். வேத விற்பன்னர். அவர் வந்து பார்த்துட்டு 'என்ன அ.ச. ஏன் இப்படி உட்கார்ந்திருக்கீங்க?' என்று கேட்டார். 'நஞ்சுண்டா எனக்கு வயிற்றெரிச்சலா இருக்கு. நான் வடமொழி படிக்காம போயிட்டேன். இந்த வயசிலே என்ன பண்ணுவேன்? எல்லாத் தேவாரத்திலும் வேதம், வேதம் என்று வருது! வேதத்தில் என்னதான் இருக்குதுனு - தெரியலை' என்றேன். அவர், '50 வருஷத்துக்கு முன்ன இப்படிக் கவலைப்பட்டா நியாயம். இப்பதான் எல்லாம் ஆங்கிலத்தில் வந்திருக்கே என்ன கவலை?' என்று சொல்லி 30 புத்தகங்கள் கொடுத்தார். மூன்று மாதங்கள் படித்தேன். தேவை ஏற்படும்போது மூலத்தைப் பார்த்து விடுவோம். ராத்திரி 11 - மணிக்கு விவாதம் பண்ணு வோம். தீர்வு காண முடியாமல் திண்டாடுவோம்.

காலையில் எழுந்தப்புறம் குளிக்கிறது எல்லாம் கிடையாது. என் பழக்கமே வேறே. கடகட என்று எழுத

ஆரம்பித்துவிடுவேன். நஞ்சுண்டன் வந்து கேட்பார். 'என்ன கரக் கரக் எழுதிக்கொண்டே யிருக்கிறீர்கள்?' என்பார். என்ன எழுதியிருந்தேன்கிறது படித்தால்தான் தெரியும். 'என்ன ராத்திரி விஷயம் பண்ணினது. பதில் எழுதிட்டீங்களே,' என்று கேப்பார். நானா எழுதினேன். அப்படி நினைத்தால் நான் ஒரு முட்டாள். யாரோ உள்ளிருந்து எழுதி வைக்கிறான். குமுதம் பத்திரிகையி லிருந்து வந்து ஒருத்தன் கேட்டான். 'என்ன ஸார், நிறைய கஷ்டப்பட்டு எழுதியிருக்கீங்களே!' மூணு நாலு ரீம் பேப்பர், என் பொண்ணு கொண்டு வந்து கொடுத்த அயல்நாட்டுப் பேனாக்கள் - இவை தாண்டா என்னுது. பாக்கி என்னுது ஒண்ணும் இல்லை - இது எங்கேயிருந்து வந்துச்சு? தோண்டினது என்னமோ உண்மை. என்ன தெரியுமா? பெரியபுராணம் எங்கிறது எங்கள் அப்பா சொத்து. நிறைய சொல்லிக் கொடுத்திருக்கிறார். எத்தனையோ எழுதியிருக்கிறேன். நிறையத் தெரியும். அதை யெல்லாம் எழுதறதுக்கு வேலையற்றுப் போய் இந்தப் பணியை மேற்கொள்ள வேண்டியதில்லையே! There must be something in it - I do not know - so I began questioning - அதுவும் தோண்டுதல் தான். 'இருளி லிருந்து ஒளிக்கு அழைத்துச் செல்.' எனக்கு ஒன்றும் தெரியாது, அப்போ யாரோ ஒருத்தர் வந்தார். நான் காஞ்சிபுரத்துக்கு வாரத்துக்கு ஒரு தடவை போவேன் - முதல போகமாட்டேன் என்றுதான் சொன்னேன். அவர் தான் 'அப்போ இங்கேயே உட்கார்ந்து எழுது'. அவர் தற்செயலாக என்னைச் சந்தித்து பார்த்து, ஏன் உட்கார்ந் திருக்கே என்று கேட்டு.... எப்படி நெறிப்படுத்துகிறது?

தோண்டுதல் நடக்கிறது? நீங்க நினைக்கிற மாதிரி அல்லது பெரிய புராணத்தைத் தோண்டுதல் என்று இல்லை. ஏன் - எதுக்காக இங்கு என்னை உட்கார்த்தி வைத்திருக்கிறது. அதுவும் ஒரு விதமான தோண்டுதல் தான். எழுதி முடிச்சேன். முன்னே கம்பனைப் பற்றி எழுதினதும் இது மாதிரி தான். அதுக்குச் சாகித்ய அகாடமி விருது கிடைத்தது. அப்போதான் நினைச்சேன். எப்போதோ 40 வருஷம் முன்னாடி யோக சுவாமிகள் சொன்னார் - 'கம்பனையும் சேக்கிழாரையும் வெட்டிப் நாமதானே புதைக்கணு மல்லோ?' - இரண்டு பேருக்கும் செய்ய வேண்டிய கடமை. அந்த இரண்டு நூலும் என் படைப்பல்ல. தோண்டுதல் என்னுடையது. தண்ணி ஓடுவது அவனுடையது. அவ்வளவுதான். இந்த நிலைமை வருமேயானால் உலகம் போற்றிக் காப்பாற்றுகின்ற படைப்பை நம்மால் உருவாக்க முடியும். இப்போ ஊறும் என்று சொன்னானே - இது எழுதி முடிச்சிட்டியா. அது வரைக்கும் தான் ஊறிச்சா?

குறளிலே பொருளதிகாரத்தில் ஒரு பகுதி. இவ்வளவு நடந்தும் அந்த ஆண்டவன் என்னைக் காக்கவே இல்லை.

ருத்ரம் என்று ஒன்று உண்டு க்ருஷ்ண யஜுர்லே நாலாவது பிராமணத்திலே வருது. ஸ்ரீருத்ரம் என்று பெயர். அதைச் சொல்லித்தான் சிவன் கோயில்லே எல்லாம் அபிஷேகம் பண்ணுவான். அந்த ருத்ரத்தைப் படிச்சவுடனே எனக்கு வந்த கோபத்திலே எல்லாக் கோயிலில் இருக்கிற குருக்களையும் நிக்க வைத்துச் சுடணும்னு மனசிலே வந்தது. ஏன்னா, இந்த ருத்ரத்திலே.

சிவபெருமானை அவமானப்படுத்திறதில் இவ்வளவு அவ்வளவு இல்லை. இது மந்திரமாக யாரும் சொல்லி யிருக்கமாட்டான். வேதத்திலே யாரோ இதைப் புகுத்திட்டான் - அதாவது ருத்ரனைப் பிடிக்காதவன், சிவபெருமானைப் பிடிக்காதவன், சிவ வழிபாடு பிடிக்காதவன், இவங்களைத் திருப்திப் படுத்துவதற் காகப் பண்ணியிருக்கான். இது எந்த இடத்திலே வருது? இருக்கிற இடம் தெரியும். நாலாவது பிராமணம், யஜுர் அதெல்லாம் தெரியுது. சூழ்நிலை என்ன? அது தெரி யாது. எவ்வளவோ முயல்கிறேன். தவிக்கிறேன். ஒண்ணும் நடக்கலை. புத்தகம் வெளிவந்தாச்சு. மனசிலே ஏதோ ஒண்ணு... எனக்கு நிறைவு வரலையே? ருத்ரத்தைப் பற்றி எழுதியிருக்கிறேன் - ஆனால் எந்தச் சூழலில் வந்ததுன்னு தெரியலையே.

AV. சுப்ரமணியம்னு ஒரு நண்பர். ரெயில்வேயி லிருந்து General Manager ஆக இருந்து ஓய்வு பெற்றவர். சங்க இலக்கியத்தை பதிற்றுப்பத்தை மொழி பெயர்த் தவர். அவ்வளவு பெரிய தமிழறிஞர் - வடமொழியில் சூரர். வேதம் தண்ணிப்பட்ட பாடு. 'No. அ.ச. இவ்வளவு எழுதியிருக்கிறேன் - பார்க்கிறேன்' என்றார். நஞ்சுண்டனும் நானும் பார்த்தோம். அதற்குள் கம்பன் விழா. தினமணின்னு ஒரு தமிழ்ப் பத்திரிகை கேள்விப் பட்டிருப் பீங்க என்று நினைக்கிறேன். அதுக்கு பதிப்பாசிரியர் A.N. சிவராமன். அவர் படித்தது பத்தாவது வரைக்கும். அவர் எழுதியிருக்கிற 'ஏவுகணைகள்' என்கிற பாடம் M.Scக்கு வைத்திருக்கிறோம். அவர் தஞ்சாவூர் இருக்கிற

விவசாயிகளைப் பற்றி எழுதியிருக்கிறது பொருளாதாரப் பாடமாகும். நம்ப முடியாத பயங்கரமான புறநோக்கு ஆள் அவர். சட்டை கிட்டை ஒண்ணும் இருக்காது. சுவாரஸ்யமான இடம். அவர் கம்பர் விழாவுக்குப் போகும் போது மூணு நாலு தடவை கூட்டிண்டு போயிருக்கேன். ஒரு நாள் என்னைக் கேட்டார். 'எப்படிடா போறே?' - 'போயா நீ பஸ்ஸிலே போ' என்று சொல்லிவிட்டேன். 'இல்லை உன் கூடத்தான் வரப்போறேன்.' என் வீட்டுக்காரி என்ன பண்ணினா - டிரைவரைக் கூப்பிட்டு 'ஜாக்கிரதை, அவர் பார்க்கிறதுக்கு அப்பாவி மாதிரி இருப்பாரு. வித்தியாசமா நடந்துக்காதே' என்றெல்லாம் உபதேசம் பண்ணி அவனை அனுப்பிச்சா. அவர் கீழே படுத்துக்கிட்டிருந்தார். அவரை அழைத்து வர என் டிரைவர் போனான். 'யாரப்பா நீ' என்றார். 'ஓ ஐயரே' என்றான்! 'நான் இவர் வீட்டிலேயிருந்து வரேன் - இந்த வீட்டு ஐயரைக் கூப்பிட்டு வரச் சொன்னாரு', என்றான். அவர் ஒரு படுக்கையைச் சுருட்டி எடுத்துக்கொண்டு வந்தார். டிரைவர் 'யோ, மூளையிருக்கா' உனக்கு - நாலுபேர் போகணும் - பெட்டி படுக்கைக் கெல்லாம் எங்கே இடமிருக்கு - வைய்யா' - என்று சொல்ல, அவர் அதைக் கொண்டு போய் வச்சுட்டார். 'நான் தான் சொல்லியாச்சில்லையா' என்று டிரைவர் சொல்லி, ஐயர் வருவார் என்று கையைக் கட்டினு நிக்கிறான். இவர் வந்து வண்டியிலே ஏறினவுடன், அவனுக்கு உயிரே போயிடுச்சு. அங்கேயிருந்து என் வீட்டுக்குத் திரும்பி வந்தவுடனே, வீட்டுக்குப் பின்புறம் ஓடினான் 'அம்மா, அம்மா' என்று கத்திண்டு. என் வீட்டுக்காரியோ

முன்னாடி வந்து சிவராமனை வரவேற்க நிற்கிறாள். அவள் பின்னாலே போனவுடன் டிரைவர் 'அம்மா நீங்க சொன்னபடி நடந்து போச்சு. நான் வாயில வந்தபடி பேசிட்டேன்!' அந்த சிவராமன் எளிமைனா அந்த மாதிரி. கம்பர் விழாவில 'புத்தகத்தைப் பார்த்தேன் - நல்லா பண்ணிருக்கே.' என்றார் அவர். 'அதெல்லாம் சரி சிவராமா - இந்த ருத்ரத்தைப் பற்றிக் கண்டு பிடிக்க முடியலையே' என்றேன் வருத்தத்துடன். அவர் எங்கே எப்போ போனாலும் 24 கேஸட் . ஒரு பை. ஒரு டேப் ரெக்கார்டர் கூட போகும் எல்லாம் வேதம். அதர்வண வேதம் தமிழ் நாட்டிலே இல்லவே இல்லை. இதுக்காக ராஜஸ்தானிலிருந்து சொந்தமாகக் காசு கொடுத்து இரண்டு பேரை விமானத்திலே வரவழைத்து, அதர்வண வேதத்தைப் பதிவு செய்திருக்கார். அவர் 'என்ன பண்ண சொல்றே' என்றார். - சந்திரசேகர் என்று ஒரு நண்பர் என் கூடவே இருந்தார். சிவராமன், என்னை அந்த 24 casette இருக்கில்ல, கண்ணை மூடிண்டு ஒண்ணை எடுறா பார்க்கலாம்.' 'Research பண்றியா நீ - கண்ணை மூடிண்டு?' ....'எடறா பாக்கலாம்.' என்றார். சந்திர சேகரன் கூட "ஆண்டவன் கண்ணில்லாத போது கொடுத்த கையை உபயோகப்படுத்துக..." என்றார். சந்திரசேகரனிடம் 'நீ எடுறா' என்றேன். 'நான் மாட்டேன்; நீங்கள் எடுங்க' என்றான் சந்திரசேகரன். 'கேள்வி இருக்குது - பதில் தெரியாது - சொல்லப் போனால் - அவன் என்னை விட வயசானவன். என்னைக்கு மண்டையைப் போடப் போவானோ தெரியாது. அவன் போனான்னா வேதத்திற்கு அர்த்தம் சொல்வதற்கு ஆள் கிடையாது'

நம்பமாட் டீர்கள், கண்ணை மூடிண்டு எடுத்தேன். 'டேய் பிடிச்சுட் டேன்டா. பிராமணத்திலே இத்தனாவது பிராமணத்திலே இருக்குடா இது' என்றார்.

கருட வியூகம் என்று ஒரு யாகம். கருட வியூகம்னா கருடன் மாதிரி திருமந்திரம். ஆயிரத்தெட்டு இஷ்ட காமம் (செங்கல்) - வச்சுக்கட்டணும் கருடன் மாதிரி இறக்கை வைச்சு, மூக்கு வைச்சு, உடம்பு வைச்சு, வால் வைச்சு, செங்கல்லே பதிச்சுப் பண்ணணும். நடுவுலே பெரிய கருடன். அதன் வயிற்றிலே உட்கார்ந்து கொண்டு யாகம் பண்ணணும். யாகத்துக்கு எல்லாம் ரெடியா யிடுச்சு. ஆசாரியன் உட்கார்ந்துட்டான். யாகத்தைப் பண்றவன் இருக்கிறானே, அவன் கேட்கிறான் - 'ஆசாரியரே யாகத்தை ஆரம்பிக்கலாமா? என்று. அப்ப சொல்றான் 'டேய் இந்த யாகத்தில் வழக்கம் போல ருத்ரனுக்கு அவிஷ். ஒண்ணும் கிடையாது அவன் தொல்லை கொடுப்பான். திருட்டுப் பயல்?... ஆகவே என்ன செய்யறது? - ருத்ரனுக்கு வாக்கரிசி போடணும். என்னடா போடணும்? யாகத்துக்கு என்ன என்ன எல்லாம் கூடாதோ அதையெல்லாம் எடுத்துக்கிட்டான். யாகத்துக்குப் பசும்பால் தவிர வேறு எதுவும் எடுத்துக் கொள்வதில்லை. ஆட்டுப்பால் எடுத்துக்கொள் என்றான். யாகத்துக்கு வேண்டிய பாத்திரம் தூய்மையான செப்பு அல்லது வெள்ளி. அதற்குப் பதில் மட்சட்டி எடுத்துக்கோ என்றான். பசும்பாலுக்குப் பதில் ஆட்டுப்பால்; சுருகரண்டிக்கு எருக்க இலை. சிவபெருமானுக்கு யாகம் பண்றான் ஸ்ரீருத்ரம் - ஆட்டுப்பால், மண்சட்டி, எருக்க இலை. இதை இடது இறக்கையில் உட்கார்ந்து ருத்ரம்

சொல்லி பண்ணுடா என்று சொல்கிறான் அவ்வளவு கேவலமாகச் சிவபெருமானைப் பண்ணுவதுதான் ஸ்ரீருத்ரம். இது தோண்டத் தோண்டத் தோண்டிக்கிட்டே இருக்கிறேன். எப்படித் தீர்க்கலாம் என்று... சொல்லிச் சொல்லிச் சிரிக்கிறார் சிவராமன் என்னமாடா ஆச்சு? தெரியலை. இந்த மாதிரி வாழ்க்கையிலே நடக்கிறது... உங்கள் கண்களைத் திறந்து வைத்திருங்கள்.

தொடுதல் உங்களை அறியாமலேயே நடந்து கொண்டிருக்க வேண்டும். புறத்தே நிகழ வேண்டும் என்பதில்லை. உட்கார்ந்துகிட்டே கூட இருக்கலாம். அந்த எண்ணம் இருக்குமேயானால், ஊறும். எப்ப ஊறும்? இப்ப தண்ணீர் வரும் என்று நினைப்பீங்க. வராது. இன்னும் ஐந்து ஆறு அடி தோண்டணும்னு நினைப்பான். அரை அடி தோண்டும் போது புது புது என்று தண்ணீர் வரும். அவனுடைய ராசி.

தொட்டனைத்தூறும். ஊறும் என்பது நம்ம செயல் இல்லை; இறைவன் செயல். தொடுதல் நம்முடைய கடமை. அந்த மாதிரி செய்தால் எதை எடுத்தாலும் உங்களுக்கு விடை கிடைக்கும்.

இப்போ சான்றோர் கவி... ஒவ்வொரு பாட்டையும் அந்த ஆசலம் புரி கேட்டுக் கொண்டே இருக்கணும்.

கேட்காமல் விட்டால் ஒன்றும் கிடைக்காது. அதுக்கு நாம் என்ன பண்ண முடியும்? கேட்பது நம்முடைய முயற்சி. கேள்வி கேட்பதை விடுவோமேயானால் விடை கிடைக்காது.

சாதாரணமாக ஒரு குறள் இருக்கிறது. அந்தக் குறளையே 'தொட்டனைத்தூறும்' பண்ணியாகணும். அதைக் குழந்தை நிலையிலே படிக்கிறது போக, மேல் நிலைக்கு வர வர ஆழ்ந்து பார்க்க வேண்டும். - ஒரு காலத்துக்கேற்ற குறள்.

என் வீட்டுக்காரி கடைக்குப் போனா. அவன் சங்கிலியும் வச்சுருக்கான். வளையலும் வச்சுருக்கான். எதை வாங்குவது என்று அவளுக்கே புரியலை. ''சங்கிலி வேணுனா செக் கொடுங்க. வளையல் வேணுனா கேஷ் ஆகக் கொடுங்க'' என்றான். காஷ் விவகாரம் என்றால் கணக்கிலே வராதுன்னு அர்த்தம். நாம் எல்லாம் ஒரே மாதிரி தான் இருக்கோம். இது எல்லா இடத்திலும் நடக்கிறது.

வள்ளுவன் காலத்தில் இந்த ப்ளாக், ஒயிட் இல்லையா! இருந்திருக்கு.

சலத்தால் பொருள் செய்து ஏமார்த்தல் பசுமட்
கலத்துள் நீர்பெய் திரீஇ யற்று

(குறள்-660)

எங்கே போறான் பாருங்க. இன்னைக்கு எல்லாத் தையும் பார்த்து, பார்க்க வேண்டியவங்களை யெல்லாம் பார்த்து, செய்ய வேண்டியவையெல்லாம் செய்தாச்சு - இனிமேல் எனக்கு எந்த விதமான பயமும் கிடையாது என்கிறான். 'சலத்தால் பொருள் செய்து - தப்புத் தண்டா வழியில் பொருளைச் சேகரித்து' என்றான். அதற்கும் மேலே போறான் பாருங்க. ஏன் என்றால் நமக்கு நல்ல அறிவுரை கூற வந்தவன். 'ஏமம் ஆர்த்தல் பாதுகாவலைச்

செய்து விட்டு'. இது மாதிரி வந்தால் எத்தனைபேர் கண்குத்தி பாம்புபோல இருப்பான் இதை வெளிக்காட்டு வதற்கு! அவர்களையெல்லாம் வாயடைப்பதற்குப் போட்டு அடக்கி, இனிமேல் ஒரு கவலையுமில்லை என்று இருக்கிறபோது...

திடீரென்று போய்விடுகிறது. அதற்கு ஓர் உதாரணம் சொன்னான்.

'பசுமட் கலத்துள்நீர் பெய் திரீஇ யற்று' பச்சை மண்ணுப் பானையிலே தண்ணீர் வச்சு காபந்து பண்ணி னதுபோல. இந்த உதாரணம் இருக்கிறது. பார்த்தா. பைத்தியக்கார உதாரணம். பச்ச மண் பானையிலே தண்ணி வையுங்க. ஒண்ணும் ஆகாது. அப்ப, வள்ளுவன் தப்புப் பண்ணிட்டானா? இல்லே அவன் என்ன சொல்ல ணும்னு நினைச்சானோ அதை இங்கே சொல்லி வச்சுக் காட்டிவிட்டான். ஏன்னா, பச்ச மண்ணுப் பானையிலே நீங்க தண்ணி ஊத்தின உடனே ஒண்ணும் ஆகாது. ஊத்தி ஒரு மணி கழித்து பாருங்க ஒண்ணும் ஆகாது. இனி கவலையில்லேன்னு போய்ப் படுப்பீங்க - டப் டப் க்ளோஸ். அதுதான் முக்கியம்.

ஏமம் ஆர்த்தல் தப்புத் தண்டா பண்ணிப் பொரு ளைச் சேர்த்து அதுக்குப் பாதுகாப்பு எல்லாம் செய்து விட்டு அமைதியோடு இருக்கிறியே, பசுமட் கண் கலத்துள் நீர் பெய்து ஒரு மணி பார்த்திரு. உடையாது. இனிமேல் கவலையில்லேன்னு கண்ணை மூடு. அது எப்போ உடைந்ததுன்னு உனக்குத் தெரியாது. அது மாதிரி ஏமம் ஆர்த்தால் எந்த மாதிரி தொல்லை வரும்?

ஒன்று அரசாங்கத்தாலே இல்லே வருமான வரித்துறை மூலமாக...

தோண்டத் தோண்டப் புதிய பொருள் கிடைக்கிறது. அன்றைக்கு அவன் காலத்தில் என்ன சூழ்நிலையில் அவன் எதை நினைந்து பாடினானோ! இருபது நூற்றாண்டுக்கும் இருபத்திரண்டாம் நூற்றாண்டுக்கும் அது பொருந்திவருகிறது. பொதுமைகள் அது மாதிரி!

உழவைப் பற்றிப் பேசுவான். வெங்கட்ராமன் துறை வெங்கட்ராமன் ஏரையும் பார்த்தவர். டிராக்டரையும் பார்த்தவர். இத்தனைக்கும் பொதுவாகச் சொல்வானா வள்ளுவன்?

'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' என்றான். மற்றதெல்லாம் கருவி என்று சொல்லிவிட்டால் ஏருக்கும் பொருந்தும், டிராக்டருக்கும் பொருந்தும். இது மாதிரி பொதுமையாகச் சொல்கிறான் உலகம் எவ்வளவுதான் வளர்ச்சி அடைந்தாலும் அந்தக் குறள் பொருந்தும்.

ஒரு சம்பவம். துணை வேந்தர் தெ.பொ.மீயும் நானும் உட்கார்ந்து பேசிக் கொண்டே இருந்தோம். அப்போது எங்ககிட்ட படித்த பெண் ஒருவர் - கோவை கிருஷ்ணம்மாள் காலேஜில் வேலைபார்ப்பவர் - வந்தார். 'வாம்மா, வணக்கம், செளக்கியமா?' என்றார் தெ.பொ.மீ. அந்தப் பெண் ஒரு ஏழைப் பெண் - படித்து முன்னுக்கு வந்தவள் - 'நன்றாக வசதியாகவே இருக்கிறேன்' என்றாள். 'என்னம்மா, ஏதோ கேள்விப் பட்டேனே?' - 'ஆமாம், சார் இரண்டு மூன்று ஆண்டு காலமாக 20 லட்ச

ரூபாயில் படுத்திருந்தேன்' என்றாள். தெ.பொ.மீ. அதிர்ந்து போனார். 'ஆமாம் ஸார், ஹாஸ்டல்லே வருமான வரிச் சோதனை நடந்தது. 'பெட்'டுக்குள்ளேயிருந்து பொல பொல வென்று ரூபாய் கொட்டுது. என்னுடைய படுக்கையில் இருந்து 20 லட்சம் ரூபாய் கொட்டிற்று' என்றாள்.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற.

(குறள் - 14)

எந்த ஒரு பயலும் மனசைப் பற்றிச் சொல்லலை. ஆகமமோ, வேதமோ, வாழ்க்கை முறையைப் பேசும் தர்ம சாஸ்திரமோ, எதுவும் மனத்தைப் பற்றிச் சொன்னதே கிடையாது. வேத பாடசாலையிலே முதல்வராக இருப்பவர் - நாலு வேதத்திலும் கெட்டிக்காரர். அவர் தலைமை வகிச்சார். ''ஸார் நான் சொல்றது உங்களுக்குப் பிடிக்கலேன்னா நீங்கள் சொல்லுங்க பஞ்சாட்சரம் ஒன்னு இருக்கு. அது ஞான சம்பந்தர் திருநாவுக்கரசர் எல்லாம் அவ்வளவு மொழி படிச்சவங்க. பாலி கூட படிச்சிருக் காங்க. திருநாவுக்கரசர் பலமொழி அறிந்தவர். ஆனால் ஒரு தடவை கூட 'பஞ்சாட்சரம்' என்கிற சொல்லைப் பயன்படுத்தவே இல்லை. ஐந்தெழுத்தைப் பற்றித்தான் சொல்கிறார்கள். ஆகவே நீங்க ருத்ரத்தில் வர பஞ்சாட்சரம் வேறே, ஐந்தெழுத்து வேறே'' என்றேன். அவர் வாயைத் திறந்து பேசலை. இரண்டும் 'நமசிவாய' தான். இல்லன்னலே. 'கொல்' என்று தமிழிலே ஒரு வார்த்தை இருக்கிறது; 'kill' என்று ஆங்கிலத்திலே இருக்கு. இரண்டும் ஒரே அர்த்தம். இதிலேயிருந்து அது வந்ததா;

அதுலேயிருந்து இது வந்ததா? மொழிநூல் படிச்சவர்களுக்குத் தெரியும். மொழிகளில், ஒத்த ஒலியோடு ஒத்த பொருளோடு சொற்கள் தனித் தனியே இருக்கலாம். இது இரண்டும் ஒன்று என்று எப்படிச் சொல்வது? மேலும் விளக்கம் கேட்டார். உதாரணம் சொன்னேன். யாகத்தில் வர மந்திரங்கள் பார்த்தீங்களானால், முன்னால் மந்திர போகி என்று இருக்கும். அதிலே, இந்திராய ஸ்வாஹா, வருணாய ஸ்வாஹா என்று போட்டுக்கிட்டே இருப்பான். ஆனால் இப்படி போடறவன் எந்த மனோ நிலையில் இருக்கணும்னு வேதத்திலே எங்கேயும் சொல்லலை. மேற்கு நோக்கி உட்காரணும், ஒன்றரை அடி பலகை போடணும். இதை எடுத்து விடணும். அப்படீன்னு சொல்லியிருக்கே தவிர அப்படிப் போடறவன் சீட்டாட்டத்தைப் பற்றி நினைச்சிக்கிட்டே இருந்தான்னா? ஆகவே நான் சொன்னேன் 'ஐயா, உங்கள் ஸ்ரீருத்ரம் சொல்றவன் எந்த மனோநிலையிலே சொல்லணும்னு சொல்லலை. ஆனால் எங்க ஆள் அப்படிச் சொல்லலை. என்னைப் போல காலிப் பயிலே இருந்தான்னா 'நமச்சிவாய' என்று தினமும் கத்துறான் - மோட்சத்துக்காப் போவான் அவன்?'' ஸ்ரீருத்ரக் கணக்குப்படி நீ 100 தடவை சொன்னால் அதற்குப் பயன் உண்டு. திருவள்ளுவர் கருத்து ஒரு கோடி தடவை சொன்னாலும் புண்ணியம் கிடையாது. ஒரு கோடி சொன்னாலும் பயனில்லை. ஏன்! இங்கே மனநிலை தான் முக்கியம்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது

- (திருமுறை:3:49:1)

இத்தனை முன்னேற்பாடு இருந்தால்தான் நீ சொல்கிற நமச்சிவாயத்துக்கு மதிப்பு. இல்லாவிட்டால் வெற்று ஓசைக் கூட்டம்தான். ந-ம-சி-வா-ய ஒலிக்குப் பலனுண்டு.

எதுவாக இருந்தாலும் தோண்டத் தோண்ட - கவிதை யாகட்டும், தத்துவமாகட்டும் ஆன்மீகமாகட்டும்... ஊறும்.

ஒலி அலைகளுக்குப் பலன் உண்டு இல்லேன்னு சொல்லலை.

நான் ஒலியைப் பற்றிப் படிச்சிருக்கிறேன். Ultra soundஐப் பற்றிப் படிச்சிருக்கிறேன். supersonic soundஐப் பற்றி நம்மவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுக்கும் பலனுண்டு. அதனாலே அத்யாயனம் பண்ண னும்னு. இப்ப இந்த vibrations இருக்கே, ஏன் மந்திரங் களிலே சேர்த்தான்? (நமசிவாயங்கறது கூட அதைச் சமீபத்திலேதான் வந்த சிந்தனையை எழுதினேன்.) இதுவும் தோண்டினதனாலே வந்த பொருள் தான். யாரோ ஒருத்தர் கேட்டார். 'என்ன ஸார், மந்திரம் மந்திரம்னு?' சரி. நமசிவாய என்றால் என்ன? தொடக் கப்பள்ளி பையனுக்குக் கூடத் தெரியும். நம என்றால் கும்பிடு என்று அர்த்தம் சிவ - சிவபெருமானுடைய பெயர். இதை இரண்டையும் சேர்த்தா எப்படி மந்திரமாயிடும்?

அப்பொழுது தொல்காப்பியம் நினைவுக்கு வருது. அதிலே சொல்லியிருக்கிறான். நாமெல்லாம் குறை

மொழி மாந்தர். ஏன்னா, நான் சொல்றது உங்களுக்குப் புரிய மாட்டேங்றது. காரணம் என்னுடைய கருத்தைச் சொல்ல எனக்கு முடியலை. சொற்கள் வரும் போது அவற்றை ஒழுங்குபடுத்திச் சொல்லத் தெரியலை. நான் என்ன பண்ணுவேன்' - இதற்குக் குறைமொழி என்று பெயர்.

- ஒரு குழந்தை வருது - 'அப்பா மேலே எவ்வளவு ஆசை?' என்று கேட்டா 'இவ்வளவு' என்று காண்பிக் கிறது. உடனே வட்டம் போட்டு IIr $^2$ போட்டு இரண் டால் வகுத்து... இப்படியெல்லாமாகப் பண்ணுவான்? உடனே 'என் தங்கம்', என்று எடுத்துக் கட்டிக் கொள் வான். அவன் அன்பின் அளவை எப்படித் தெரிஞ்சிக் கிட்டான்? இது உணர்வினாலே உணரப்படுகின்றது. அறிவினாலே ஆராயப்படுவதன்று. இந்த அடிப்படை தான். குறைமொழி மாந்தர் பேசும்போது ஒருத்தருக்கும் (conveyance of thought) புரியாத தன்மைத்தாக இருக்க லாம்; இல்லாமல் போகலாம். 'நிறை மொழிமாந்தர்' நம்ம மாதிரி இல்லை. அவர்கள் சொற்களை உருவாக்கு கிறார்கள். நாம் இருக்கிற சொற்களை உபயோகப் படுத்துகிறோம் - அதுவும் பொருள் தெரிந்தும், தெரியா மலும் - தவறாகவும் பயன் பண்றோம். அவங்க அப்படி யில்லை - They create words - நிறைமொழி மாந்தர் - எல்லாருக்குமாக ஒன்றைச் சொன்னா, அமெரிக்காவிலே இருக்கிறமாதிரி competitive society - இலே விட்டு விடுவீங்கள். நடக்கிற காரியமில்லை - ஒன்றுமே சொல்ல வேண்டாம். உட்கார்ந்த இடத்திலேயே படுக்கை

அறையிலேயோ ஓய்வு அறையிலேயோ ஆரம்பியுங்கள். நான் தயார்... 'எங்கப்பன் பேர நமசிவாயம் என்பதை நீ என்ன சொல்லித் தருவது?' அடே அப்படியல்ல - நீ சொல்வது நமசிவாய என்பது வெறும் எழுத்துக்களோட பிணைப்பு. நான் சொல்றது இருக்கே, அதுக்கு சக்தி ஏத்தியிருக்கேன். வெறுமனே Battery ஆக இருக்கும் போது தொட்டால், ஒன்றும் ஆகப் போவதில்லை - charge பண்ண Batteryஐ கை வைத்தால்....? நான் இப்போது charge பண்றேன். நமசிவாய என்பது உனக்குத் தெரிந்த வார்த்தைதான் நமோ நாராயணா என்பதும் உனக்குத் தெரிந்த வார்த்தைதான். எல்லாம் உனக்குத் தெரிந்தது தான். இந்த நிறை மொழி மாந்தர் தெரிந்த வார்த்தைகளை எடுத்து 'ஆணையிற் கிளைந்தனர்' - ஆணையிட்டார்கள். ந-ம-சி-வா-ய என்கிற word combinationலே இந்த frequencyயைச் சேர்த்து total frequency இருக்கிறதே அதன் vibrations வருமாறு ஏத்தினான். அது எப்படி வந்தது? அது அவனுடைய ஆற்றல் - தவ வலிமை - இறைவனுடைய அனுக்கிரகத்தி னாலே 'இதைச் செய்' என்று ஆணையிடுகிறான். Milton சொல்கிறானே - 'They also serve who stand and wait' என்று. அவங்களும் அதைத்தான் செய்கிறார்கள்! சும்மாவே உட்கார்ந்திக்கிட்டு, 'என்னை என்ன சொல்லப் போகி றான் ஆண்டவன்' என்று காத்துக்கிட்டிருக்காங்களே. They also serve who stand and wait இந்த நிறைமொழி மாந்தர்கள் நமக்கு உபசாரம் செய்யணுங்கறத்துக்காக, சாதாரண வார்த்தைகளை எடுத்து, - தெரியாத வார்த்தைகள் என்றால் வம்பில் வந்து மாட்டிக்கொள்ளும்-

எல்லையற்ற சக்தியைக் கொடுத்து - ஆணையிற் கிளந்த மறைமொழி - அதுதான்டா மந்திரம் என்பது என்றார்கள். 2,500 ஆண்டுகளுக்கு முன்பு இதைப் பற்றி பகுத்தறிந்து, எதுமந்திரம்னா - சாதாரண சொற்கள் மந்திரம் அல்ல. சாதாரண சொற்களை எடுத்து Power ஏத்தினானே அது தான் மந்திரம் என்றார்கள். சாதாரண சொல்லைத் தானே பின்னே அதை 'மறைமொழி' என்று ஏன் சொல்றே? - charged Batteryக்கும் uncharged Batteryக்கும் வித்தியாசம் கண்டுபிடிப்பீங்களா நீங்கள்? No body can - leads வைத்துப் பார்த்தால்தானே தெரியுமே தவிர, இல்லாவிட்டால் இரண்டும் ஒன்றாகத்தான் தெரியும். அதுபோல, வெறும் நமசிவாய என்னும் வார்த்தைக்கும் மந்திரமாக இருக்கும் நமசிவாயவுக்கும் வித்தியாசம் தெரியாது உங்களுக்கு. ஆனால் Battery test பண்ணுவது போல உட்கார்ந்து கண்ணைமூடி ஓம் நமசிவாய அல்லது ஓம் நமோ நாராயணாய என்று சொல்ல ஆரம்பித்தீர்க ளானால், கொஞ்ச நாளைக்குப் பிறகு shock அடிக்க ஆரம்பிக்கும். நம்ம பெரியவங்க இதைப் பண்ணிக் கொடுத்திருக்கிறார்கள். அதனால் தான் பாடல் பெற்ற ஸ்தலம். மங்களாசாஸனம் பெற்ற ஸ்தலம் என்றெல் லாம் ஞானசம்பந்தர் பாடியவுடனே அந்த இடத்துக்கு அந்த vibrations கொடுத்திடறாங்க. They were capable. அவங்களைப் பொறுத்தமட்டில், they were so powerful - எந்த இடத்திலே எப்படிப் பாடினார்களோ அந்த இடத்திலே அந்த vibrations எழுந்து கொண்டே இருக்கும். அதனாலே பாடல் பெற்ற ஸ்தலம் - அந்த கோயில் தடபுடலாக இல்லாமல் இருக்கலாம். ஆனால்

உள்ளே புகுந்தீர்களானால், you will feel Bakti - இது பாடல் பெற்ற ஸ்தலம், மங்களாசாஸனம் பெற்ற ஸ்தலம் - என்று. இந்த நிறைமொழி மாந்தர்கள் அந்த இடத்திலே போய் அந்த power-ஐ வைத்திருக்கிறார்கள். இதை எப்படித் தெரிந்துக்கிறோம்? தோண்ட வேண்டும். தோண்டினால் அதற்குப் பொருள் வைத்திருக்கிறார்கள். நச்சினார்க்கினியர் முதல் எல்லாரும் சூத்திரத்துக்கு உரை எழுதி வைச்சிருக்காங்க. ''நிறைமொழி மாந்தர் - முற்றறிவுடையவரான மாந்தர்; ஆணையிற் கிளந்து - ஆணையினால் மொழிந்து. மறைமொழி - மறைமொழி, - மந்திரம் - மந்திரம்'' என்று. நீங்கள் ஏன் என்று தோண்ட ஆரம்பிச்சீங்கள்னா எதை எடுத்தாலும் தோண்டத் தோண்ட, கவிதையாகட்டும், தத்துவ மாகட்டும், ஆன்மீக விஷயமாகட்டும், ஆண்டவன் நிச்சய அருள்கிட்டும்.

வைணவத்தில் இராமானுஜர் இருந்தார். நமோ நாராயணாய என்று வாத்தியார் சொல்லிக் கொடுத்ததைக் கோயில் கோபுரத்தில் மேலே ஏறிக் கத்தினார். கீழே இருந்த குரு கத்தினார். 'டேய் சண்டாளா. மூன்று நரகத்தையும் தாண்டி அழிந்து போவே' 'நீ என்னா சொன்னே இந்த மந்திரத்தைத் தினமும் சொன்னா, மோட்சம் போவான் என்று சொன்னியா இல்லையா?' 'ஆம்'. 'இத்தனை பேரும் மோட்சம் போக, நான் மட்டும் நரகம் போனால் போகிறேன்' என்றார். அந்த மாதிரி கதவைத் திறந்த நாடு இது. இராமானுஜர் என்ன தைரியம் இருந்தால், குருவினுடைய வார்த்தையை அவன் காலத்திலேயே மீறிக் கோபுரத்தின் மேலேறி

மந்திரத்தைச் சொல்லியிருப்பார்! குரு சொன்னான் 'சொல்லிட்டுப்போ. நீ நரகத்திற்குப் போவே'. 'நான் போகத் தயார்' என்று சொல்லிட்டார் இராமானுஜர்.

இந்த அளவுக்கு பிறருக்குச் செய்ய வேண்டுமென்ற பெருங்கருணை அளவில் உந்தப்பட்ட பெரியவர்கள் தோண்டுகிறார்கள் எப்படி மக்களுக்குத் தொண்டு செய்வது என்று! ஆண்டவன் அதற்குத் தகுந்தபடி வழி காட்டுகிறான்.

கலைஞன் நினைக்கிறான். ஒரு சிறந்த கவிதை இயற்றி, உலகுய்வதற்கு வழி செய்ய வேண்டுமென்று. விஞ்ஞானி நினைக்கிறான் புதிய கண்டு பிடிப்புகளைப் படைத்து சமுதாயத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று. இத்தனை பேருக்கும் தோண்டுவது பொதுப்பண்பு.

ஒரே காரியம் விஞ்ஞானிக்கும், விவசாயிக்கும், புலவனுக்கும் சேருமா? சேரும். ஒரு வேரிலிருந்து சத்து வருவது ஒண்ணு தானே? தண்டுக்குப் போவுது - தண்டு உருவாகுது. இலைக்குப் போகுது. இலை தழைக்குது. பூவுக்குப் போனா பூ பூக்குது, அதுபோலத்தான். இலக்கியத்திலே தோண்டலாம்; இலக்கணத்திலே தோண்டலாம்; ஆன்மீகத்திலே தோண்டலாம். எதிலே வேண்டுமானாலும் தோண்டலாம். தோண்டினால் ஊறும். இத்தனையும் மனசில் வைத்துக்கொண்டு, அறிவு என்று சொல்லினால் விளக்கம் பெற வேண்டும்னு நினைக்கிறயா, அதனால் பெறுவாய். உணர்வு விளக்கம் பெற வேண்டும் என்று நினைக்கிறயா? - அதனைப் பெறுவாய். இது இரண்டையும் தாண்டி இதனுடைய சொல்லுக்கு

அடியில் இருக்கிறது என்ன என்று சொல்வது தொல்காப்பியத்தில் சொல்வான் - எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே! எல்லாச் சொல்லுக்கும் பொருள் இருக்கிறது. சொல்லுக்குப் பொருள் என்பது நம்ம நிலையிலே ஒரு பொருள் - மேலே போகப் போக ஒத்த கருத்துக்களின் இணைப்பு மூலமாக அதற்கேற்ற ஒரு பொருள் தெரியணும். I.A. Richards இதை நன்கு விளக்கிறான். துப்பாக்கி இருக்கிறது; வாள் இருக்கிறது - இரண்டும் கொலைக் கருவிதான். 'take the sword' என்கிற போது 'take the gun' என்று சொன்னால், அதுக்கு அர்த்தம் வேறே. ஏண்டான்னா இரண்டாயிரம் வருஷமா, 'Sword' என்பது - Homer காலத்திலேயிருந்த நம்ம காதிலே விழுது. அதனால் 'sword' காதிலே விழுந்தவுடனே, Homer கருத்து என்னவோ அது குத்தினால் என்ன ஆகும் என்பது நமக்கு கண்முன் வருது. - அதுவரையில் நம்முடைய கற்பனை வருது - sword என்றவுடன், நியூரான்கள் சேமித்து வைத்திருப்பதில் இத்தனை அளவுக்குச் சேர்ந்து வருது. அந்த 'sword' நாடகத்திலே வரும்போது, அந்த இடத்தோடு பொருள் பண்ணுது. இது தான் தொட்டனைத்தூறும். 'sword' என்று வந்த வுடன், நாம் ஒருநாள் அந்த நாடகத்திலே பார்த்த அட்டைக்கத்தி நினைப்பு வருது. ஆகையினாலே மணற் கேணி போல மூளையில் உள்ளன நியூரான்கள்.

மணற்கேணி போல இருப்பது மூளையிலே உள்ள ந்யூரான் கூட்டம். தொடுதல் ஆகிய செயல் நம்மைச் சேர்ந்தது.

தோண்டத் தொடங்கினால் அது எந்த வழியில் வேண்டுமானாலும் வெளிப்படும். விஞ்ஞானமாகவோ, மந்திரமாகவோ, கவிதையாகவோ தொழில் முறையிலோ வெளிப்படும். எப்படி வெளிப்படும்? - நீங்க எந்த அள வுக்குத் தோண்டுகிறீர்களோ அந்த அளவுக்கு வெளிப் படும். அப்படின்னா, மூளையிலிருக்கிற அந்தஸ்து அது.

அடுத்து விதியை எடுத்துக் கொள்வோம். விதியை வெல்ல முடியாது என்பாங்க.

**ஊழின் பெருவலி யாவுள மற்றுஒன்று**
**சூழினும் தான் முந்துறும்**

*(குறள் - 380)*

-இப்படி ஒன்றுக்கொன்று மாறுபட்டுச் சொல்லப் படுவதற்கு அறுதியாக ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனால் ஒன்று மட்டும் சொல்லலாம். வள்ளுவர் பைத்தியக்காரர் இல்லே

ஓரளவுக்கு எந்தக் கருத்தை எடுத்துச் சொல்ல வேண்டுமோ அதை அழுத்திச் சொல்வார். இது எல்லா ருக்கும் உள்ளது. சீதை அழகு என்று சொல்வான் கம்பன்; மண்டோதரியை வருணிக்கும் போது, சீதை கெட்டாள் - மறந்து விடாதீர்கள். அப்போ மண்டோதரியை வருணிக் கும்போது சீதையை மறந்து விட்டானா? இல்லே அந்தந்த இடத்திலே அந்த அந்தப் பொருளுக்கு பிரதான்யம் கொடுக்கணும். அது தான் முக்கியம். இந்த இடத்தில் சீதைக்கு அடுத்தபடி என்று சொன்னால் கதையே போயிடும்.

அதுபோல ஊழைப்பற்றிச் சொல்லும்போது - ''பெருவலி யாவுள?'' - 'நீ எந்த வழியிலே போயேன். அந்த வழியாலேயே வரும் அது அவங்க அவங்க வாழ்க்கையில் பார்க்கலாம். நம்பவே முடியாது. நீ எப்படித் தடுக்கப் பார்த்தாலும், அந்தத் தடுக்கிற முயற்சி வழியாகவே வரும்.'

பாரதத்திலே... பரீட்சித்து மகாராஜா கதையை சொல்வான்,

பரீட்சித்து பாம்பு கடிச்சுச் செத்துப் போவான்னு சாபம். கடலிலே ஒரு அரண்மனையைச் செய்து சமுத்திரத்துக்கு நடுவிலேயே பாம்பே வராதபடி இருந்தான். உரிய நாள் வந்தது. அப்போது ஒரு எலுமிச்சம்பழம் கடலில் மிதந்து கொண்டே வந்தது. அதைப் பார்த்த காவல்காரன் 'ராஜா, ஒரு எலுமிச்சம் பழம் மிதக்கிறது' என்றான். ராஜா 'அது எப்படி எலுமிச்சம் பழம் வரும். கொண்டாடா பார்க்கலாம்' என்றான். கொண்டு வந்தார்கள். அதை முகர்ந்து பார்த்தான் - கடித்தது - அது பாம்பு.

ஆக நடைபெற வேண்டுமென்றால் 'மற்றொன்று சூழினும் தான் முந்துறும்'. எந்த வழியாக நீ பண்ணுகிறாயோ அது வழியா வரும்.

இதைத் தெரிந்துகொண்டு நடக்கிறதில் ஒரு நன்மை உண்டு. தெரிந்துகொண்ட பிற்பாடு என்ன ஆகிறது? 'நீ ஒரு காரியம் ஆரம்பித்து வெற்றிபெறவில்லை என்றால், தற்கொலை பண்ணிக்கிடுவே. அப்படிப் பண்ணிக்

*கிறவா உலகத்திலே ரொம்பப் பேர் இருக்கா. ஆகவே ஒன்றுமே பண்ண வேண்டாமா?*

**ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழாது உஞற்று பவர்**

*(குறள் 620)*

*விதியைப் புறமுதுகு காணலாம். 'புறமுதுகு காண லாம்' என்று எழுதினார்கள். புறமுதுகிடுதல் என்றால் என்ன அர்த்தம்? இவர் எதிர்த்தாற்போல வருகிறார். எதிர்த்தாப்பலே வரும்போது அவர் என் எதிரி; என்னை அடிக்கணும்னு வர்றார். இவர் திரும்பிட்டார் என்றால், என்ன அர்த்தம். தொல்லை ஒன்றுமில்லை. அது ரொம்ப சிந்திச்சுப் பாக்கணும். எதிரே வருகிறான். என்ன காரணத் தாலோ திரும்பிப் போறான். திரும்பிப் போனதால் எனக்கு ஒன்றுமில்லை. வந்தது என்னமோ உண்மை. வந்தது இல்லேன்னு சொல்ல முடியாதே. ஊழையும் உப்பக்கம் என்றதனாலே முற்பக்கம் பெறப் பெறுகிறது. எதிரேதான் வருகிறது. அது ஒழிக்க வருகிறது. நான் கவலைப்படவில்லை. என் பணியைச் செய்வேன். இப்போ இந்த நாட்டிலே வெளிப்படையாகச் சொல் றாங்க.* 'You have got to live six months more here.' *அவனும் ஆறுமாதத்தில் செய்ய வேண்டியவற்றைச் சிறந்த முறையில் செய்வேன் என்று நினைக்கிறானே அவன் ஊழையும் உப்பக்கம் கண்டவன். நம்ம ஊரிலே 6 வருஷம் இருக்கு என்று சொன்னவுடன், ஆறு வருஷமும் வயிற்றிலடித்துக் கொண்டு வருந்திச் சாவதும் உண்டு. இங்கு 6 மாதம் உண்டு என்று கேட்டவுடன்,*

கவலையில்லை என் பணி செய்வேன் என்று சொல்லி வாழ்பவனும் உண்டு. இரண்டு பேரும் மனுஷன் தானே. இதுதான் மனிதர்களுக்குள் வேறுபாடு. ஆறு மாதம் என்று சொன்னதிலே ஒரு நன்மை உண்டு. இரண்டு வருஷம் கழித்துச் செய்யலாம் என்று நினைத்ததை யெல்லாம் இப்பவே திட்டமிட்டுச் செய்யலாம். இதுவும் ஊழை வென்ற மாதிரி தானே. அது தெரிந்த பிற்பாடு ஆறு மாதத்தில் என்ன செய்ய வேண்டுமென்பதைத் திட்டப்படுத்தி 6 மாதம் போறதுக்கு முன்னாடி ஒரு நிமிஷம் கூட விடாமல் செய்பவனிடம் ஊழ் என்ன செய்ய முடியும்? ஆக ஒருமனிதன் அஞ்சவில்லை என்றவுடனே ஊழ் தோத்துப்போகிறது. சிந்தித்துப் பாருங்கள்.

இராமன் பட்டத்துக்குப் போனான். பட்டம் இல்லை என்றவுடன் திரும்பி வர்றான். கம்பருக்கே கஷ்டமா யிருக்கு.

**குழைக்கின்ற கவரி இன்றிக் கொற்ற வெண்குடையும் இன்றி**
**இழைக்கின்ற விதி முன் செல்லத் தருமம் பின் இரங்கி ஏக**
**மழைக்குன்றம் அனையான் மௌலி கவித்தனன் வரும் என்று என்று**
**தழைக்கின்ற உள்ளத்து அன்னாள் முன் ஒரு தமியன் சென்றான்.**

*(கம்பரா.அயோத். நகர் நீங்கு-1)*

இராமன் இளவரசன் இல்லையா? இரண்டு பக்கம் கவரி வீசி வருவார்கள் பெண்கள். குடையைப் பின்னாலே

பிடித்துக்கிட்டு வருவான் - எல்லாம் முன்னே பார்த்திருக் காங்க. இவன் பேசாம நடந்து வந்தான். இரண்டும் இல்லே. எல்லாருக்கும் தெரிகிறது. இரண்டு இருக்கு. அது யாருக்கும் தெரியலே. அது தான் விதி. இழைக்கின்ற விதி முன்செல்ல அது இராமனைப் பின்னிக்கிட்டே போகுது. ஏனென்றால், இராமனை இங்கு வரவழைத் ததே ஒரு குறிபிட்ட நோக்கத்திற்காகத்தான். ராஜ்யம் பதினாயிரம் வருஷம் பண்றத்துக்கா இராமன் வந்தான்! பெரிய ஒரு காரியத்தை நிறைவேற்றுவதற்கு விதி அவனைக் கூட்டி வந்தது - இழைக்கின்ற விதி. அது இவனுக்கு முன்னாலே இவனை இழுத்துக்கிட்டுப் போகிறது. காட்டுக்குப் போகணும். பொண்டாட்டியை அரக்கன் தூக்கிண்டு போகணும்...

பின்னலே என்ன? 'தருமம் பின் இரங்கி ஏக' இராமனுக்குப் பின்னாலே தருமம் வருந்திப் போகிறது. தருமம் என்றால் இங்கே என்ன பொருள்?

தருமம் பின் இரங்கி ஏக / மழைக்குன்றம் அனையான் மௌலி கவித்தனன் வரும் என்று என்று.... அம்மா காத்திண்டிருந்தாளாம். பட்டம் ஏற்பதற்கு முன்னர் மஞ்சள் நீராடி வருவான்னு பாத்தாளாம். ஆனால் இராமன் இப்போ குளிக்காமல் வந்துட்டான்.

இழைக்கின்ற விதி முன்னாலே போச்சு. தருமம் பின் இரங்கி ஏக என்றால் என்ன அர்த்தம்? தரும தேவதை பின்னே வருந்திச் செல்ல எனப் பொருள் சொல்லலாம். அது சரியா? தோண்டிப் பார்க்கணும்.

தருமதேவதை பின்னாலே இரங்கிப் போச்சு என்று சொல்லி விட்டால், இராமன் வனவாசம் பயனற்றதாகப் போய்விடும்.

தருமம் என்பது அரச தருமம் என்று பொருள்படும். அதுதான் இக்காலத் தர்க்கவியல் கொள்கை. மூத்தவன் பட்டத்துக்கு வர வேண்டுமென்ற அரச தர்மம், அது இங்கே நடக்கலே. அது அடிபட்டது. மூத்தவன்தான் அரசாளணும் என்கிற அரச தருமம் அடிபட்டுப் போய் விட்டது. ஆக, தோண்டினால் ஆழமான பொருள் கிடைக்கும்.

மனித ஆற்றலுக்கு ஓர் எல்லை உண்டு. They cross all barriers.

அனுமன் இருக்கான்; அவன் இராமன் யார் என்று யார்கிட்டே போய்ச் சொல்வது? எல்லாம் எருமைகள்; எதனிடம் சொன்னாலும் எடுபடாது. பேசாமல் உட்கார்ந் திருந்தான். சுக்ரீவன்கிட்டே சொன்னா ஏறுமா, அவன் மண்டையிலே? அவனுக்கு வேண்டியது அண்ணனை அடிக்க ஆளு.

கடைசியாய்ப் பார்த்தான், இராவணன் அறிவாளின்னு தெரிந்து கொண்டான். "அவன் அனுமனிடம் நீ யாருன்னு? கேட்டான். நீ சொன்னயே, 'தேவனோ, அவனோ, மூவரோ' என்றெல்லாம். 'நீ சொன்ன அப்புல்லிய வலியினோர் ஏவல் பூண்டிலேன்'' என்று சொன்னான். 'பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் என்று சொன்னியே. அவங்க ஆளு இல்லே நான்.' அவர்கள் மூன்றாந்தரமானவர்கள். அவங்களுக்குப் பணி செய்பவன் அல்லன் யான்.

*பின்னே யாருடான்னா?*

மூலமும் நடுவும் ஈறும் இல்லது ஓர் மும்மைத்து ஆய
காலமும், கணக்கும், நீத்த காரணன் கைவில் ஏந்திச்
சூலமும், திகிரி சங்கும் கரகமும் துறந்து, தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டு
அயோத்தி வந்தான்

*(கம்ப.சுந்தர. பிணிவீட்டு - 80)*

*இது ஒரு பாட்டு. இதற்கு 16 பக்கம் பொருள் எழுதி யிருக்கிறேன். காரணம், கொஞ்சம் சயின்ஸ் படிச்சதி னாலே. இப்ப இந்தப் பாட்டு இருக்கிறதே, இதில் நான் மட்டும் தானா? பாரதி ஈடுபடுகிறான்.*

*''எல்லையொன் றின்மை' எனும் பொருள் அதனைக் கம்பன் குறிகளால் காட்டிட முயலும் முயற்சியைக் கருதி யும்.'' என்பது பாரதி வாக்கு. அப்போ 'எல்லை ஒன்றின்மை எனும் பொருள்' என்றால் என்ன அர்த்தம்? எல்லை கட்டிவிட்டால் அது கடவுள் இல்லை என்றாகி விடும்.*

*கம்பன் என்ன பண்ணுவான்' பாவம்.*

*குறிகளால் காட்டிட முயல்கிறான். எண்ணலியைக் (Infinity) கொண்டு கணக்குப் போட முயலுகிறீர்களே. அதுபோலக் குறிகளால் காட்டி விட்டான் என்றால் கடவுள் அடிபட்டுப் போகும். கடத்தல் என்ற சொல் அடிபட்டுப் போகும். ஆகவே எவ்வளவு ஜாக்கிரதை யாகச் சொல்றான் பாருங்கள். கம்பன் குறிகளால் காட்டிட முயலும் முயற்சியைக் கருதியும் என்கிறான். எனினும் அவன் முயற்சி செய்கிறான்.*

எல்லை ஒன்று இல்லை என்பதை எடுத்துச் சொல்ல வருகிறாராம்.

'மூலமும் நடுவும் ஈறும் இல்லது ஓர்'

ஆதியும் இல்லே; அந்தமும் இல்லே; நடுவும் இல்லே.

ஒன்றுமே இல்லையா?

ஓர் மும்மைத்தாய இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் இவை எல்லாவற்றையும் கடந்தது இப்போது மூலமும்... நடுவும் ஈறும் என்றபோது மூன்று பரிமாணங்களைப் பற்றிச் சொல்லியாச்சு. மூன்று காலம் என்கிறபோது காலம் என்னும் நாலாவது பரிமாணம் சொல்லியாயிற்று.

'மூலமும் நடுவும் ஈறும் இல்லது' 'மும்மைத்தாய காலமும்' என்றதால் நான்கு பரிமாணங்களும் சொல்லி யாச்சு - எல்லாவற்றிலும் இல்லை இல்லை என்று சொல்வதால் எல்லாம் ஒரு மறுப்பாகப் போய் விடு கிறது. புத்தமதக் கோட்பாடு போல. அதற்காக என்ன செய்கிறான் கம்பன்? உடன்பாட்டுப் போக்கில் 'கணக்கும் நீத்த காரணன்' - என்று சொல்கிறான். எல்லா வற்றிற்கும் முதற் காரணன் - அடிப்படைக் காரணன் - அது என்னது? புரியாது. கைலாசத்தில் இருக்கு என்கிறான்; திருப்பாற்கடலில் இருக்கு என்கிறான். எல்லாத்தையும் விட்டுட்டு எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து 'சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து'... அயோத்தி வந்தான் என்கிறான்.

இந்தப் பாட்டில் ஈடுபட்டுத்தான் பாரதி எல்லை யொன்றின்மை எனும் பொருளதனைக் கம்பன் குறிகளால் காட்டிட முயலும் முயற்சி என்று குறித்தான். பாரதிக்கு அப்புறம் நாம யாரும் சிந்தனை பண்ணலை; தோண்டலை. இந்தப் பாட்டு எல்லாப் பாட்டோடு ஒரு பாட்டாகப் போயிடும். இந்த ஒரு பாட்டிலே உலகத்தில் உள்ள எல்லாப் புலவர்களையும் மிஞ்சுகிறான் கம்பன். இந்த ஒரு பாட்டு பாடியதினால் அவனை விஞ்ஞானி என்று சொல்வதா? அணு பௌதீகம் படிச்சவன் என்று சொல்வதா? 'கைவழி நயனம் செல்ல' என்று பாடியதால் நாட்டிய சாஸ்திரம் வல்லவன் என்று சொல்வதா? எங்கிருந்து வருகுது - நினைச்சுப் பாருங்க - நம்ம ஊரில் பிறந்தவன் ஒருத்தன் சடையப்பன் போட்ட சோற்றைச் சாப்பிட்டு - பூகோளமே தெரியாத ஒருவன் - நல்லா தெரியது. நாட விட்ட படலத்திலே பார்த்தா விளங்கும். நடுவில் என்ன நாடு என்பது தெரியவில்லை - இது கம்பன்லே பெரிய குறைபாடு தான். புகுந்து விளையாட றான் அவன் பாட்டுக்கு - இவை எல்லாம் சிறிய குறை பாடுகள். இது கூடத் தெரியாதவன் இந்த ஆழத்துக்குப் போறான்னா. என்ன சொல்றது?

சித்தர் ஒருத்தர் இருந்தார். 'கிணற்றிலே ஏற்று போட் டிருக்கய்யா. அதைச் சமுத்திரத்திலே ஏற்று போட்டுக்கோ' என்றார். கிணற்றிலிருந்து கொஞ்சம் தான் இறைக்கலாம் - சமுத்திரத்திலிருந்துனா? கவலையே இல்லை. கம்பன் சமுத்திரத்தில் ஏற்று போட்டிருந்தானா? என்ன என்று சொல்வது? நம்மைப் போல் மனுஷன் என்பதா?

Descartes என்ற தத்துவஞானி 'நான் சிந்திக்கிறேன்; எனவே வாழ்கிறேன்.' 'I think - therefore I am' என்றான்.

- ஒரு புளிய மரத்தடியில் ஒரு பிள்ளையாண்டான். வயது என்னமோ குறைவுதான் (பதினாறு).

உளன் எனில் உளன் அவன்

இலன் எனில் இலன் அவன்

உண்டு என்று சொல்கிறாயா? இருக்கிறான். எல்லாம் அவன் தான். 'உளன் அலன் எனில் அவன் அருவம் உருவம் இவ் அருவுகள்.' இலன் அவன் - இல்லேன்னு சொல்றயா? இல்லே.

இவ்வளவு பெரிய தத்துவத்தை ஒரு சிறு பையன் புளிய மரத்தடியில் உட்கார்ந்து பாடுகிறான் என்றால் அதனை விளக்க முடியாது. இது எந்த ஜன்மத்திலோ தோண்டியது. இந்த ஜன்மத்திலே ஊறும்.

இந்த நாட்டிலே புலமையினாலே மாத்திரம் செஞ்சாங்கன்னு நினைக்காதீங்க. சாதாரணப் புலவன் கூட வெறும் புலமையில் பாடும்போது அதுக்கு ஒரு வரம்பு உண்டு. அதைத் தாண்டிப் போயிடும். அதனால்தான் பாரதியைச் சொன்னேன். கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் இவையெல்லாம் குள்ளச் சாமிக்கிட்டேயும், மாங்கொட்டைச் சாமிகிட்டேயும் உபதேசம் வாங்கிச் சித்தனா மாறி அதுக்கப்புறம் பாடற பாட்டு.

*அந்த அதிர்வு இருந்துக்கிட்டே இருக்கும், எப்ப நீங்க தட்டினாலும். அதே மாதிரி கம்பன், ஆழ்வார்கள் போன்றவரிடத்தில் இருக்கிறது.*

*குமரகுருபரர் பார்த்தீர்கள் என்றால் நானூறு வருடம்கூட ஆகாது; சாரி 300 வருடம்தான்.*

*அந்தக் கதையைப் பார்த்தீர்கள் என்றால், ரொம்ப நாளாப் பிள்ளை இல்லை. அப்புறம் பிள்ளை பொறந்தது. ஊமை. டாக்டர்கிட்டே போகலை. அதைக் கொண்டு போயித் திருச்செந்தூரிலே சாமி சந்நிதானத்திலே போட்டுட்டாங்க. ''யோவ். பிள்ளை கேட்டேன். பிள்ளை கொடுத்தே. ஆனால் ஊமையாயிருக்குது. நீயே பார்'' என்றார்கள்.*

*அது திருச்செந்தூர் முருகனைப் பற்றியே பாட ஆரம்பிச்சுதாம்.*

**"பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையும் – தேமேவு
நாதமும்நா தாந்த முடிவும் நவைதீர்ந்த
போதமும் காணாத போதமாய்..."**

*(குமர.கந்தர்கலி.கண்ணி 1,2)*

*முதல் நாலு வரியையே விளக்கிப் பெரிய புத்தக மாகவே எழுதலாம்.*

*எப்படி வருகிறது? வரலாற்று உண்மை; வெறும் கற்பனையில்லே. நடக்கலேன்னு சொல்ல முடியாது. திருமலை நாயக்கர் காலத்தில் இருந்தவர். அரண்மனைக்*

*கல்வெட்டிலேயே இருக்கிறது. என்ன என்ன கொடுத்தேன் என்று எழுதியிருக்கார்.*

*எப்படி வருகிறது? முன்னே பல பிறவிகளிலேயிருந்து நியூரான்ஸ்கள் மூலம் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது.*

*நாம் அகங்காரம் என்று சொல்கிறோம். அதைப் போக்க முடியாது என்று சொல்வர். அதைப் போற போக்கிலே மிக அழகாகக் குமர குருபரர் சொல்வார்.*

அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுக்கும்–
தொழும்பர் உளக்கோயிற்கு ஏற்றும் விளக்கே...

*(மீனாட்சி.வருகைப்:9)*

*அம்பிகையைப் பாடறார்.*

*கிழங்கு என்றாலே பூமிக்குள் இருப்பது. 'அகழ்ந்து எடுக்கும்' - ஏன்னா எடுத்திடுவீங்க. பூமியில் ஒரு வேர் இருந்தாலும் அதிலேயிருந்து ஒன்று வரும். சல்லி வேரு போயிருக்கும். அதிலேயிருந்து ஒன்று வரும். அது மாதிரி இந்த அகங்காரம் என்பது நமக்குள்ளே புகுந்துக்கிட்டுப் போகவே போகாது.*

*சினிமாவுக்குப் போய்விட்டு வருவான். கதவைத் தட்டுவான். புருஷங்காரந்தான் போயிருக்கான்னு தெரியுது. 'யாருன்னு' கேக்கறா பயந்து போய். 'நான்தான்' என்று பதில் வருது. ஒன்றும் பண்ணமுடியாது.*

*அதைப் பார்த்துத் தான் குமரகுருபரர்*

அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுக்கும்

என்கிறார். நான் பண்றதைச் சொல்றேன், சார். பேனா வாங்குவேன். பேனா என்றால் அந்தக் காலத்திலே யிருந்து எனக்கு ஒரு பைத்தியம். ஒவ்வொரு தரமும் பேனா வாங்கும்போது ஒவ்வொரு தடவையும் நினைக் கிறது. பேனாவை இங்க்கிலே தோச்சு முருகன் துணைன்னு எழுதணும்னு நெனச்சுக்கிட்டே போவேன். ஆனா அ.சா. ஞானசம்பந்தன்னு எழுதுவேன். அது அவ்வளவு தூரம் இருக்குது. நான் என்ன பண்ண முடியும்? இது தெரிந்துதான் எழுதுகிறார், குமரகுருபரர். அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழும்பர்களது உளக் கோயிலிலேதான்டா வருவான்.

இதை நினைக்கிற்ார் இன்னொரு பெரியவர். அருள் பெற்றவர். தனக்கு அருள் பெறத் தகுதி உண்டு என்று கூறும்போதுதான் அவர் பெருமையைப் பார்க்கிறோம்.

> **நாயேனையும்இங்கு ஒருபொருளாக நயந்து வந்துநீயே**
> **நினைவின்றி ஆண்டு கொண்டாய்.**
>
> *(அபி.அ:61)*

அபிராமிபட்டர் பாடுகிற பாட்டு. என்னை வந்து ஆண்டுகொண்டாயே, தாயே! எனக்கு எந்த விதமான தகுதியும் இல்லை. என்னை நீ ஆண்டுகொள்ளலாமா நாயேனையும் ஒருபொருளாக நயந்துவந்து ஆண்டு கொண்டாய் என்று சொல்லணும். 'நினைவின்றி ஆண்டு கொண்டாய்' என்கிறார், தற்செயலாக, யாருக்கோ அருள் பண்ண வந்தே? நான் மாட்டினேன்.

மாணிக்கவாசகர் பாடுகிறார்.

தாதாய் மூவேழுலகுக்கும் தாயே நாயேன்
தனையாண்ட பேதாய்

*(திருவா:446)*

*நீ முட்டாள் என்கிறார். யாரை? சிவபெருமானை. ஏன் என்னைப் பிடித்து ஆட்கொண்டாய். அப்போ நீ தகுதியைப் பற்றிச் சிந்திக்கவில்லை.*

இந்த மாதிரி ஆட்களைப்பற்றி என்ன சொல்ல முடியும்.

*'அகந்தைக் கிழங்கை' - இது எப்படி வந்தது? தோண்டினான். எந்தப் பிறவியிலே? போன பிறவியிலே.*

தொட்டனைத்தூறும் அறிவு என்றால் ஒரு பிறப்பிலே அல்ல - பல பிறப்புகளிலே. ஆக, தொடுதல் என்பது கல்வி என ஏதோ ஒன்றோடு வரையறை பண்ணிக்காதீங்க. எந்தப் பகுதியிலே தோண்டினாலும் அது ஊறிக்கொண்டே யிருக்கும். திருவருள் உங்கள் முயற்சிக்கேற்ப 'முயற்சி தன் மெய்வருந்தக் கூலி தரும்' என்கிறாரே. அது மாதிரி தோண்டத் தோண்ட - நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிக்கேற்பப் - பயன் தரும்.

இவன் தமிழ் நாட்டிலே இரண்டாயிரத்து நூறு வருஷத்துக்கு முன்னால் பிறந்தான். அவனுடைய அறிவு வீச்சு இருக்கிறதே. அது இந்த உலகத்தை மட்டுமல்ல. அவன் தேவலோகத்தைப் பார்த்தவனோ என்னமோ தெரியலை போனவன் திரும்பி வரலே. யார் என்ன சொன்னாங்க தெரியாது. ஆனால் என்ன தைரியம் இருந்தால் 'தேவர் அனையர் கயவர்'. என்று பாடுவார்.

நாமெல்லாம் தேவராகப் போகணும்னு என்றெல்லாம் சொல்லிட்டு... வள்ளுவர், தேவரெல்லாம் நம்மூரிலே இருக்கிற கீழ்மக்கள் மாதிரி என்கிறார். இரண்டு பேருக்கும் பொது இயல்பு ஒண்ணு தான்.

தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்து ஒழுகலான்

*(குறள் 1073)*

*நம்மூர் இழிமகன்* loafer *நினைச்சதைச் செய்யறான். அதே மாதிரி தேவரும் நினைச்சதைச் செய்யறாங்க. இது மாதிரி சொல்லணும்னா வெறும் அனுபவம் மட்டும் போதாது. அதனால்தான், திருவள்ளுவர் பேருண்மை களை விளங்க வைப்பதற்காக இறைவனால் பயன் படுத்திக் கொள்ளப்பட்டுள்ளார் என்று நினைக்கிறேன்.*

*பல நாட்கள் சிந்தித்துக் கொண்டேயிருந்தேன். அப்போதான் நம்மாழ்வார் என்னுடைய உதவிக்கு வந்தார். நான் தமிழ்ப் பண்டிதன். எங்கப்பா தமிழ்ப் பண்டிதர். அதனாலே படிக்கும் போதெல்லாம் தப்பு தான் கண்ணுக்குப் படும். அது என் பிறப்புரிமை. அற்புத மாக ஒரு பாட்டு எழுதியிருப்பான். டக்னு தப்புதான் படுது.*

*என்னடா இது நம்மாழ்வாரே தப்பு பண்ணிவிட்டார். 'பாடினேன்' என்றல்லவா சொல்றார். பாடுவித்தான் என்றல்லவா இருக்க வேண்டும். என்னை தன்னால் இன் கவிபாடிய வாட்டாற்றான்' என்று பாடுகிறார் நம்மாழ்வார்.*

*என்ன இது! நம்மாழ்வாரே தப்புப் பண்ணிட்டார். 'பாடிய' என்று தன்வினையிலே சொல்றாரே. 'பாடுவித்த' என்று பிறவினையாக அல்லவா இருக்க வேண்டும்?*

*சரவணமுதலியார் சைவர்; பெரிய புராண பக்தர், அவர் மகன் நான். நம்மாழ்வார்லே தப்பு கண்டுபிடிச் சிட்டேன். இரட்டிப்பு மகிழ்ச்சி. ஒரு வைஷ்ணவியைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்... ஒரு மாதம் கழித்து இதுக்கு நம்மாழ்வாரே 'டேய் சாம்பிராணி இங்கேவாடா' என்று அழைத்து விளக்கம் கொடுத்தார்.*

பஞ்சப் புலனீர் மாமாயன் என்னுள்புகுந்து
என்னை விழுங்கித் தானேயாய்

*பாடினான் - பாடுவிக்கலே. பாடிக்கொண்டான். தன் புகழைத் தானே பாடிக் கொண்டானாம். அது எப்படிப் பாடினான்? ஒரு சிக்கல். அவன் புகழை அவன் பாடினால் உன் காதில் விழாதே. உன் நிலைக்கு அவன் வரணும்.*

*மாமாயன் - ஏற்கெனவே மாயன் - மாமாயன் என்னுள்ளே புகுந்து உள்ளே வந்தான். அது தெரியாது. மாயன் புகுந்தால் அது எப்படித் தெரியும்? 'என்னுள் புகுந்து' - இரண்டு ஆள் உள்ளே இருக்கு. சிலபேர் தாக சாந்தி பண்ணிட்டு எதிரே வரது ஒரு ஆளா, இரண்டு ஆளான்னு தடுமார்றானே. அவனோ மாயன்?*

'என்னுள் புகுந்து' - இரண்டு ஆளா இருக்கு. மேலே, 'என்னை விழுங்கி' என்றார். இந்த நான் என்பது செத்துப்

போயிடுத்து. அது வரையில் புளிய மரத்தடியில் இருந்த நம்மாழ்வார் என்கிற ஆளே மறைந்து விட்டார்.

'என்னை விழுங்கி' - விழுங்கின பிற்பாடு? பாம்பு விழுங்கிடும். அதைப் பார்த்தால் வயிறு பெரிதாக இருக்கும். அது செரிமானம் ஆகிற வரையில் உள்ளே அப்படியே இருக்கும். என்னை விழுங்கினால் அந்த நான் என்பது எங்கேயாவது ஒட்டிக்கிட்டு இருக்கலாமில்லையா?

'தானேயாய்'

இந்த நான் என்பது ஒழிந்தது மட்டுமில்லே, அந்த வாசனையே இல்லாமல் பண்ணிவிட்டார்.

'என்னுள் புகுந்து என்னை விழுங்கித் தானேயாய்' அப்போது 'ஏன் பாடுவித்தான்? ஏன் பாடணும்? இந்தப் பாட்டைப் படிக்கும் போது தோண்ட ஆரம்பித்தேன். அவர் விளக்கம் தந்தார்.

இறையருள் பெற்ற நம்மாழ்வார் பாடிய பாட்டுத் தான். பிழை இல்லை என்று தோன்றுகிறது. இரண்டாம் ஆள் இல்லையே! அப்படியானால், ''பாடினேன்' என்று தானே சொல்ல வேண்டும். தான் பாடிய பாட்டைத் திருமால் தன்னைக் கொண்டு பாடுவித்தான்; அல்லது என்னைக் கொண்டு தன்னையே பாடிக்கொண்டான் - என்றெல்லாம் ஏன் சொல்ல வேண்டும்? சிந்தனை எழுகிறது.

அதுதான் தொட்டனைத்தூறும் மணற்கேணி.

## வினா விடை அரங்கம்

கேள்வி:

நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றும்தன்
உண்மை அறிவே மிகும்

*(குறள் 373)*

*என்று எழுதியிருக்கிறார். ''அப்படியானால் நீ என்ன படிச்சாலும், சமயத்திலே உங்களுக்கு இருக்கிற சுய புத்திதான் வரும். சொல் புத்தி வராது என்று சொல்கிறாரா? அல்லது வேறு விதமாய்ச் சொல்கிறாரா?''*

பதில்: *உண்மை அறிவு என்கிறது இயல்பாக அமைந்திருக்கிற ஒன்று. நீதித்துறையில்,* Natural Justice *என்று சொல்கிறார்கள், இல்லையா? அந்த மாதிரி சில அடிப்படைகள். இந்தப் பிறப்பிலே நமக்கு ஆண்டவனாலே கொடுக்கப்பட்டது. அப்படி வச்சுக்குங்களேன்.*

*இது என்ன ஆகிறது? பல சமயங்களிலே நுண்ணிய நூல் கற்று அதன் வழியிலே போகணும்னு நினைக்கிறான். தன் உண்மை அறிவு ஏமாத்திடும். ஏமாத்திடும்னு சொல்ல வரலே. அது எங்கே இருக்கோ அங்கே கொண்டு போய்விடும்.*

*ஒன்று சொன்னா, புரிஞ்சுக்கணும் நீங்கள்.*

**தோல் வெளுக்கச் சாம்பலுண்டு எங்கள் முத்துமாரியம்மா**
**துணி வெளுக்க மண்ணுண்டு எங்கள் முத்துமாரியம்மா**
**மனம் வெளுக்க வழியில்லையே எங்கள் முத்துமாரியம்மா.**

*(பாரதியார் கவிதைகள்:தோத்தரப்:40)*

நுண்ணிய நூல் பல கற்பினும் என்றபடியாலே அந்தச் சொல்லிலே அழுத்தம் வைக்கிறார். வெறும் ஏட்டுப்படிப்பாப் படிச்சு பயனில்லை. அதை ஆழமாகப் பயின்றான். ஏற்றுக்கொண்டான்.

இவ்வளவு வேண்டாம். இராவணனே உதாரணம்.

**ஆயிரம் மறைப்பொருள் உணர்ந்து அறிவு அமைந்தாய்**
**தீயினை நயப்புறுதல் செய்தனை தெரிந்தாய்**

*(கம்ப:யுத்த:மந்திராலோ:48)*

*'பிறன் மனையை நயத்தல்' பிழை என்பது அவனுக்குத் தெரியாதா? முட்டாளுக்கே தெரியுமே; ஆயிரம் மறைப் பொருள் உணர்ந்து அமைந்தவன் அறியானா?*

*நுண்ணிய நூல் பல கற்பினும் அந்த உண்மை அறிவு ஆக இருக்கே! அடக்கமில்லே. போய்ப் பற்றிக்கொண்டு வந்தான். ஒவ்வொருத்தர் வாழ்க்கையிலும் பார்க்கிறோம். நாம் ஒரு காரியத்தைச் செய்யணும்னு நினைக்கிறோம்... ஒன்று வேறுபாடு. இந்தக் காரியத்தைச் செய்யணும்னு நான் சொல்ற போது இரண்டாகப் பிரிக்கணும். பிறர் பொருட்டாகச் செய்யணும்னா வெற்றி. எழுதிக் கொடுக்கிறேன் - அது ஏற்கனவே சொல்லிட்டாங்க.*

**தமக்கென முயலான் நோன்தாள்.**
**பிறர்க்கென முயலுநர் உண்மையானே**

*(புறநானூறு:82)*

பிறத்தியாருக்காக வலிமையான முயற்சி செய்வார் களேயானால் வெற்றி. காந்திஜி சொன்னார். அந்தராத்மா - போனால் போகுது - என்னுடைய கடமையைச் செய்கிறேன்.

தன்னலத்திற்கு என்று வரும்போது தன் உண்மை அறிவே மிகும். ''எவ்வளவோ பேர் எடுத்துச் சொல் வாங்க'' ஒன்றும் பண்ணுவதற்கில்லை.

எத்தனையோ உதாரணம் சொல்லலாம்.

பிரசித்தி பெற்ற கிருஷ்ணன் கோவில் - குருவாயூர் - அங்கே கிருஷ்ண நம்பூத்ரி ரொம்பப் பெரியவர். அதாவது திருக்கச்சி நம்பி மாதிரி ஆண்டவனோடு நேரே பேசுவார்னு சொல்லுவாங்க. நமக்குத் தெரியாது. அவர் வந்து கதவை மூடிவிடுவாராம். அப்புறம் கொஞ்சம் நாழி கழிச்சு திறப்பாங்களாம். வரிசையாக நிற்பாங்களாம்.

இடது கையிலே பெண் ஜாதகத்தை வச்சுகிட்டு, வலது கையிலே ஆண் ஜாதகத்தை வச்சுகிட்டுக் கண்ணை மூடி நிற்பாங்க. கையை இரண்டு ஜாகத்திலே வச்சார்னா கல்யாணம் பண்ணலாம்னு நம்பிக்கை.

குட்டி ராஜாக்கள் கேரளத்தில் நிறைய பேர் 'த்ரிபுவன சக்ரவர்த்தி' என்று சொல்லிக் கொள்வார். 1/2 கிலோ மீட்டர் முக்கால் கிலோ மீட்டர் நிலப்பரப்பு. அது மாதிரி ஒருத்தன். அரசியல் காரணத்திற்காகத் திருமணம் பண்ணும் படியா ஆயிடுத்து. வந்து நின்னான். இவர் கையை வச்சார். தாலி கட்டினவுடன் பையன் செத்துப் போயிட்டான்.

''அட கிருஷ்ண நம்பூதிரியே தவறு செய்து விட்டாரே...'' என தவிப்பு. 6 மாதம் கழித்துப் பெண்ணின் தந்தை - அதே செத்துப்போனவன் ஜாதகத்தையும், தன் பெண் ஜாதகத்தையும் எடுத்துக்கிட்டு வரிசையிலே நின்றாராம்.

இவரு கதவைத் திறந்தாராம். அழுதாராம். திறந்தவுடன்..... ''ஏண்டா பாவி - அந்தப் பெண்ணை விதவை ஆக்கணும்னு நீ முடிவு பண்ணிட்டாயானால், என்னை ஏண்டா பொறுப் பாக்கினே'' அப்படீன்னு கிருஷ்ணரைத் திட்டினார்.

'என்னைச் சொல்லிப் புண்ணியம் இல்லை. அவன் அப்படி நினைச்சு, என்னைக் கைதியாக்கி விட்டான்.' இப்ப - இதைச் செய்யக் கூடியவனுக்குக் கூட அந்த நேரம் வந்தால் அதைத் தடுத்திடும்.

உண்மை அறிவு என்று சொன்னது உண்மையான அறிவு அல்ல. உள்ளே இருக்கின்ற அறிவு. இவனுடைய பல பிறப்புகள்தோறும் வந்து, என்ன செய்யணும்னு இருக்கல்லவா? அதுக்கு ஏற்ற அறிவு; அவ்வளவுதான் சொல்லலாம்.

**கேள்வி:** அறிவும், பண்பும் ஒரே பொருளாய் வருகின்றனவா?, உணர்வு என்றும் சொல்லலாம். தவறு இல்லே. பாரதி கூடச் சொன்னாரே: பலகற்றும் பல கேட்டும் பயனொன்றும் இல்லையடி.

**பதில்:** 'மனம் வெளுக்க' என்று சொன்னதனாலேயே உணர்வைத்தான் சொல்கிறான் அவன்.

கேள்வி: *நீங்கள் சொன்னதிலேயே*

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

*(424)*

*அதிலே 'மெய்' என்பதற்கு* exact interpretation *சரியான விளக்கம் இல்லாமே* subjective interpretation *தற்காப்பு விளக்கமாக இருக்கே!*

பதில்: *கஷ்டம் தான்*

கேள்வி: *மெய் என்பது* according to modern thought is not only subjective but also circumstantial. According to one school of thought. there is no such as truth, until you deeply analyse and arrive at something like an axiom, which can be universally accepted.

பதில்: Because it is universally accepted, it is not true

கேள்வி: *அதுதான்* my point...

*அதோடு 'மெய்' என்ற வார்த்தைக்குத் திருவள்ளுவர் அந்த இடத்திலே என்ன அர்த்தத்திலே சொல்லி யிருக்கிறார். அதை இப்போ* modern context*லே எப்படி உபயோகப்படுத்த முடியும் என்பது என் கேள்வி.*

பதில்: The whole world accepted the word - atoma. Atom is unbreakable. Hugh Dalton said that. Nobody raised any objection. *யாரோ என்னமோ பண்ணி அதை*

உடைச்சுட்டான். electron என்றான். ஊரிலே உள்ளவ னெல்லாம் எடுத்துக்கிட்டானே.

இப்போ அந்தச் சூழ் நிலையிலே மெய்ம்மை அது. It is factual, Not truth. மெய்ப்பொருள் என்று சொல்லும் போது Factual.

Factual என்று சொன்னது என்னத்தில் என்றால், ஒரே செயல் நடக்குது. இரண்டு பேர் பார்க்கிறாங்க. பக்கத்தில் பக்கத்தில் நின்று பார்க்கிறாங்க அந்த இரண்டு பேரையும் வாக்குமூலம் கொடுக்கச் சொன்னா, தெரியும் அது.

நடந்தது ஒண்ணுதான். அந்த நிகழ்வு பற்றி வித்தி யாசமே கிடையாது.

இப்போ மெய்ப்பொருள் எது? Fact-ஆனால் எப்படி வெவ்வேறு வாக்குமூலம் வந்தது? இவனுடைய அறிவு வளர்ச்சிக்கேற்ப அவனுடைய அறிவு வளர்ச்சி - இது இரண்டையும் கேட்கிறான் பாருங்க ஜட்ஜு - அவனு டைய அறிவு வளர்ச்சிக்கேற்ப...

ஆக, 'யார் யார் வாய்க் கேட்பினும்' என்பதற்கு அழகாகப் பரிமேலழகன் சொன்னான்:

> ''உயர்ந்த பொருள் இழிந்தார் வாயினும், இழிந்த பொருள் உயர்ந்தார் வாயினும், உறுதிப்பொருள் பகைவர் வாயினும், கெடுபொருள் நட்டார் வாயினும் ஒரோ வழி கேட்கப்படுதலான் 'எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்' என்றார்''

என்று எழுதுகிறான்.

'ஏரல் எழுத்துப்போல'' நத்தை ஊர்ந்து போகிற போது 'அ' என்ற எழுத்து மாதிரி ஊர்ந்து சென்ற வழி ''ஆகா, தமிழ்நாட்டு நத்தை 'அ' எழுதிடிச்சுன்னா சொல்வது!

எதிர்பாராமல் தற்செயலாக 'அ' மாதிரியாச்சு அது மாதிரி யார் யார் வாய்க் கேட்பினும் என்றால் மோசமான வனுடைய வாயிலேகூட ஒரு நல்ல வார்த்தை வரலாம்; மிக உயர்ந்த ஒருவனுடைய வாயிலேகூடத் தவறான வார்த்தை வரலாம்.

இப்போ மெய்ப்பொருள் எது? அன்றைய நாளில் (Dalton காலத்தில் atom was fact. Factual அன்றைய நிலைமையால் என்பது. Fact. you can't deny that.

Hugh Dalton சொன்னாலும் எவன் சொன்னாலும் மெய்ப்பொருள் கூறி, அன்றைக்கு அதை ஆராய்ச்சி பண்ணினவன் இருந்தானா? இல்லையா?

...There is some problem here.

Some inglorious Milton here may lie

A Cromwell guiltless of his country's blood?

என்று பாடறான் Goldsmith. 'உங்க ஊர் பாட்டுக்கு நான் அர்த்தம் பண்றேன்' என்று சொன்னேன். ஒரு பாதிரியார். அவர் பல்கலைக் கழகத் துணைவேந்தர். தலைமை தாங்குகிறார். Glorious Milton என்ன - Inglorious Milton என்ன - என்ன சார் வித்தியாசம்? என்று கேட்டார். The fall of man எல்லாரும் படிச்சிருக்கி

றோம் - Bible படிச்ச எத்தனையோ பேர் நினைச்சிருக் காங்க. எல்லாருக்கும் தெரியும். ஆனால் வெளிப்படுத்த முடியவில்லை. There was one Milton who had the same dream as others on reading the Bible and could express himself. Simply because he was able to express himself, he became glorious.

அது போல 63 நாயன்மார் வரலாறு சேக்கிழார் மட்டுமா பார்த்தாரு. எத்தனையோ பேர் பார்த்தாங்க. ஆனால் சேக்கிழார்தான் அதைப் பாட முடிந்தது. ஏன்? அந்தத் தகுதி அவர்கிட்டேமட்டுந்தான் இருந்தது. மற்ற வர்கள் அவங்க வரலாற்றைக் கேட்டாங்க, பார்த்தாங்க - சரி.

மெய்ப்பொருள் என்றால் என்ன? ஒருத்தர் வேஷ்டி தோச்சுக் கொடுத்தாரு - ஒருத்தர் சட்டி செஞ்சு கொடுத் தாரு.

இதிலே எல்லாம் பொதுத்தன்மை என்ன இருக்குது? இவர் அந்தத் தொண்டைப் பண்ணினாரு - இந்தத் தொண்டை பண்ணினாரு. சேக்கிழார் ஒருத்தர்தான் அவங்க வரலாறிலே ஒரு பொதுத் தன்மை இருக்கு துன்னு கண்டாரு.

முன்னாடி படிச்சவங்க யாரும் பொதுத்தன்மையை நினைக்கலே.

அதனால்தான் திருத்தொண்டர் புராணம் காப்பியமே இல்லேன்னு 19ஆம் நூற்றாண்டிலே எழுதிப்புட்டாங்க.

நான் அக்கருத்தைத் தகர்த்தேன். ''ஐயா திருத்தொண்டர் புராணம் காப்பியம். காப்பியத்துக்கு ஊடு பொருள் ஒண்ணே ஒண்ணுதான் இருக்கணும். இப்போ என்ன ஊடு பொருள்? தொண்டுதான் ஊடு பொருள்.

தொண்டு மனப்பான்மையைத் தான் சொல்ல வருகிறார் சேக்கிழார். இங்கே இவன் 'சைவம்' என்று சொல்லிவிட்டதனாலே பட்டையும் கொட்டையும் தான் பெரிய புராணம்னு நினைச்சுட்டான். பட்டையும் கொட்டையும் இதில் பங்கு பெறுவதில்லை.

அடிப்படை என்னான்னா தொண்டு செய்வதுதான். மக்கள் தொண்டு - அதைச் செய்கிறவர் அடியார். சிலம்பு என்பது எப்படிக் காப்பியப் பொருளாயிற்றோ அப்படி இப்போ 'தொண்டு' என்பது காப்பியப் பொருளா ஆக்கிட்டீங்கன்னா. இந்த அடியார் இந்தத் தொண்டு பண்ணினார், அந்த அடியார் அந்தத் தொண்டு பண்ணினார்,

இவன் பிள்ளை அறுத்துக் கொடுத்தான், அதையும் தொண்டாகத்தான். வருகிறவனுடைய வேஷ்டியை வாங்கி, தோச்சு, காயவைத்துக் கொடுத்தான். இவனும் தொண்டு பண்ணினான்.

அது எப்படி சார், பிள்ளையை அறுத்துக் கொடுத்தவனும், வேட்டியைத் தோச்சுக் கொடுத்தவனும் ஒண்ணாக முடியும்?

நாம் இரண்டையும் வித்தியாசமாக நினைக்கிறோம். பிள்ளையை அறுத்துக் கொடுத்தான்னா, 'அடேயப்பா'

என்கிறோம். வேட்டியைத் தோச்சுக் கொடுத்தான்னா, 'இது என்ன பிரமாதம்' என நினைக்கிறோம். சேக்கிழார் பார்த்தார். பிள்ளையை அறுத்துக் கொடுத்த மனநிலை வேட்டியைத் தோச்சுக் கொடுத்த மனநிலை. இரண்டும் தொண்டு மனப்பான்மை கொண்டவை. ஏற்றுக் கொள் என்கிறார். ஆகவே இந்த மெய்ப்பொருளைக் காண முடிகிறது, அவராலே.

'தொண்டர் பெருமை' என வருகிறபோது அவராலே தான் பெரிய புராணத்தைப் பாட முடிஞ்சது. சேக்கிழார் தெய்வீக அருள் பெற்றிருந்தார். அதனாலே அவரால் பாட முடிந்தது.

அடிப்படைப் பொருளை அதாவது மணி, முத்து, பவழம் எல்லாம் கோத்த மாலையிலே உள்ளே இருக்கிற நூலைப் பார்க்கிறது இல்லே; அவரால் பார்க்க முடிந்தது.

'மெய்ப்பொருள் காண்பது அறிவு' எனச் சொல்லும் போது அந்த அறிவு என்பதற்கு உணர்வு என்று இருந்தால் கொஞ்சம் நன்றாக இருக்கும். அந்த உணர்வினையே உள் உணர்வு என்று சொல்லுவார்கள் - இன்ட்யூஷன்; அது அவருக்கு இருந்தது.

திருமூலர் இதையே சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

**நடமாடக் கோவில் நம்பர்க் கொன்றீயில்**
**படமாடக் கோயிற் பகவற்க தாமே.**

*(திருமூ:7:142:1)*

இப்ப நீங்க பார்க்கலாம். பழனிக்கு நீங்கள் போயிருந்தீர்களானால் இரண்டு மூன்று பேர் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பாங்க. எல்லாம் பெரிய இடத்துச் சமாசாரம். 'சார் நூறு குடம் அபிஷேகம் பண்ணினேன்.' என்பார் ஒருவர். அடுத்த வருஷம் மற்றொருவர் 101 குடம் பண்ணுவார். 'முருகான்னு அவர் 100 குடம் பண்ணினேன்னு சொன்னாரில்லே அன்றைக்கே முடிவு பண்ணினேன். 101 குடம் நான் பண்ணறேன்னு.'

இவன் முருகனுக்கா அபிஷேகம் பண்ணினான்? தன் அகங்காரத்துக்கு அபிஷேகம் பண்ணினான். அகங்காரத் துக்கு அபிஷேகம் பண்ணிட்டு, முருகன் தலையிலே கொட்டினான். முருகன் சிரிக்கிறான்.

இதைப் பார்க்கிறார் ஓர் அடியார். இந்த மாதிரித் 'திருவிளையாடல்' அன்றைக்கே இருந்திருக்கிறது. அவங்க இரண்டு பேரும் 100, 101 எனப் போட்டி போட்டுக்கொண்டு ஆக்கிறபோது இவரு 103 ஆக்கு கிறார். அவரு பார்த்தாரு - அடே மூணு திருட்டுப் பசங்களா? முருகன் சிரிக்கிறான். இதெல்லாம் கேக்கலே. பின்னே என்ன கேட்கிறான் தெரியுமான்னாரு.

'என் பாவம் ஆறு கடல் ஏழிருந்தும்' என்ன பாவம்டா! ஆறு, ஏழில் இருந்தும், கடல் ஏழில் இருந்தும் தீர்த்தம் கொண்டு வந்து வைத்திருக்கிறார் அபிஷேகத்திற்கு.

அம்பிகை பார்த்தாள். சிரிக்கிறாளாம் அம்பிகை. வெல்லப் பிள்ளையாரைப் பின்னே கிள்ளி நிவேதனம்

*செய்து பிள்ளையார் பூஜை பண்ணினாள். நிவேதனத் திற்கு ஒன்றும் இல்லே. அதான் வெல்லம் ஆயிற்றே. பின்னே கிள்ளி நிவேதனம் பண்ணினாளாம். அது மாதிரி இவன் என்ன சொந்தமாகப் பண்ணினான்?*

*'நான் படைச்சுதடா இந்த ஆறு. நான் படைச்சுதடா இந்தக் கடல். அதைக் கொண்டு வந்து என் தலையில் ஊத்துறயே.'*

*நான் படைச்சது என்று ஒன்றுமில்லையோ?*

*'இருக்கிறதடா?'*

**என்பாவம் ஆறுகடல் ஏழிருந்தும் என் அம்மை**
**அன்பாளர் கண்ணருவி ஆடுவது திருவுள்ளம்**

*'உன் கண்ணிலே ஊறது பாருடா இரண்டு சொட்டுத் தண்ணி. அதுக்கு ஏங்கி இருக்குறாடா அம்பிகை'*

*ஆக, உள் உள்ளம் உருகிக் கண்ணிர் வருமானால், அதுக்குத்தான் அவள் ஏங்கி இருக்கிறாளே தவிர நீ கொட்டுகிற தண்ணியிலே மகிழ்வதில்லை.*

*இதைப் பார்க்கிறார் திருமூலர். அவர் சித்தர். அவர் எப்போதும் குறுக்கு வழியிலே போவார்.*

**நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்**

*(திருமூ:7:142:1)*

*நடமாடுகிற மனிதர்கள் இருக்கிறார்களே அவர்களுக்கு ஒன்று கொடுத்தால்*

**படமாடக் கோயிற் பகவற்க தாமே**

*அது நேரடியாகப் படமாடக் கோயிலில் இருக்கிறானே சிவபெருமான், அவனுக்குப் போய்ச் சேரும்.*

*'அது இல்லே. நான் நேரே சிவபெருமானுக்கே கொடுக்கிறேன்' என்கிறாயா?*

படமாடக் கோயிற் பகவற்கொன்றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா.

*(திருமூ:7:142:1)*

*அடியார்களுக்கு அது வராது - மக்களுக்கு வராது.*

*என்னமோ இப்பத் தான் மக்கள் தொண்டு பண்ணிட்டான்னு நினைக்காதீங்க.*

*இதைப்பற்றித் திருமூலர் பாடுகிறார். நேரடியாக மக்களுக்குச் செய்ய வேண்டும். இப்ப 'மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்று சொல்லும் போது 'உணர்வினிலே' ஆழ்ந்து சிந்தித்துத் தோண்ட ஆரம்பித்தவுடனே சேக்கிழாரால் பொதுத் தன்மையைக் காண முடிந்தது.*

**கேள்வி:** *63 அடியார்களிலே ஒன்பதோ பத்தோ உதிரி என்று சொல்கிறார்களே...*

**பதில்:** *உதிரி இல்லை. ஒரு குழு. 9 தொகையடியார்கள் என்று சொல்வது...* you see.

*சைவர்களாகிய நாம் ஒரு குழு - இது முக்கியமில்லை. இதை நம்மவர்கள் உணர்ந்திருந்தார்கள். விபூதி போட்டு, ருத்திராக்ஷம் போட்டா ஒரு குழு. அப்படிப் போடாத போனால் அவங்க எல்லாம் நரகத்துக்குப்*

போய்விடுவாங்க எனச் சொல்கிற அந்தக் குழு இல்லே இவர்கள். பரந்த மனமுடையவர்கள்.

**அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்**
*(பெ.பு. தடுத்தாட்கொண்ட.)*

என ஓர் அடி.

அப்பாலும் என்றால் கால தேச வர்த்தமானம் எல்லாம் கடந்த நிலை. முற் காலத்திலே இருந்தவங்க. நம்ம காலத்திலே இருக்கிறவங்க - இன்னும் பிற்காலத்திலே வருகிறவங்க. இந்த இந்தியாவிலே இருந்தவன், அமெரிக்காவில் இருந்தவன்... எங்கிருந்தாலும் - அப்பாலும் - காலம், இடம், வர்த்தமானம் மூன்றையும் சேர்த்தது அப்பாலும் அடிச் சார்ந்த என்ற தொடர்.

இறைவன் என்று நினைத்து எவர் உருகினாலும் அவங்க அத்தனை பேருக்கும் தான் 'அடியார்' என்று பெயர் சொல்கிறார். சைவர்களுக்கு மட்டுமல்ல. அவ்வளவு விரிந்த மனம்!

**எங்கேனும் யாதாகிப் பிறந்திடினுந் தன்னடியார்க்கு**
**இங்கேயென் றருள்புரியும் எம்பெருமான்**
*(திருமு:2:40:6)*

- ஞான சம்பந்தர் தேவாரம். எங்கேனும், யாதாகிப் பிறந்திடினும் நீ நாயா பிற - கழுதையாகப் பிற - மானிடனாய்ப் பிற - கவலையில்லே. வினைப் பயனால், எங்கேனும் யாதாகப் பிறந்திடினும், தன்னடியார் ஆக இருந்தால் அவங்க அத்தனை பேருக்கும் அருள் செய் கிறான் எம்பெருமான். அத்தனை தாராள மனத்தோடு இருந்திருக்கிறார்கள்.

*அது மெய்ப்பொருள். அதைக் குறுக்கிக் குறுக்கிச் சைவமாக்கி ஆறுமுக நாவலர் செய்த மாதிரி கொடுமை வேறு யாரும் செய்யலை - சைவத்தைப் பற்றிப் 'பால பாடம் - வினா விடை' என்று புத்தகம் எழுதினார். அதிலே - 'கோபுரம் தெரியாத இடத்திலே நீ போனால் நரகத்துக்குப் போவே' என்று எழுதிவிட்டார். அதற்கு மேலும் கொடுமை - அந்தக் காலத்தில் எல்லாரும் விபூதிப் பை ஒண்ணு வைத்திருப்பாங்க. அது எப்படி யிருக்கணும்னு சொல்றார்.*

*'விபூதிப் பை இரண்டு விரல் அகலம், ஒரு விரல் நீளத்திற்குமேல் பை இருந்தாப் போச்சு! இப்படித் தான் இடணும் திருநீறை; இப்படி இல்லேன்னா எரிவாய் நரகம் புகுவாய் என்று எழுதினார். நான் சொன் னேன். 'சொன்ன இவர்தான் நரகத்துக்குப் போவார்' என்று*

*மெய்ப்பொருளா இது! இதைப் படித்து விட்டு, இதன்படியே நடக்கிறவங்க இருக்காங்க, யாழ்ப்பாணத்திலே - இன்று யார்யார்வாய்க்கேட்பினும் மெய்ப்பொருள் பார்க்கிறோம். ஆறுமுக நாவலர் ஒரு பெரிய சைவர். யாரும் மறுக்க முடியாது. ஆனாலும் அதை நான் ஏற்றுக்கத் தயாராக இல்லை. அது மெய்ப் பொருளல்ல.*

**கேள்வி:** *திருவாசகத்திலே,*

**'தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'**

*(திருவாச: 4: 164-165)*

என்று பாடியிருக்கே. சிவன் எல்லா நாட்டிற்கும் பொதுவா?

பதில்: ஆமாம். அந்த காலத்தில் ரொம்பப் பரந்த நோக்க முடையவர்களாக இருந்திருக்காங்க.

நால்வர்கள் காலம் மட்டுமல்ல. ஆழ்வார்கள் காலம் மட்டுமல்ல. அவங்க அவங்க காலத்திலே சிலவற்றை அழுத்திப்பாடுவாங்க. இல்லை என்று சொல்வதற்கில்லை. சைவம்தான் உயர்ந்தது என்று பாடுவாங்க - வைஷ்ணவம்தான் உயர்ந்தது என்று பாடுவாங்க. தப்பு ஒன்றுமில்லே. ஆனால், ஆழ்ந்த தத்துவம் என்று வருகிற போது

**ஈறாய்முதல் ஒன்றாய் இரு பெண்ணாண் குணம் மூன்றாய்**
**மாறா மறை நான்காய் வரு பூதம் அவை ஐந்தாய்**
**ஆறார் சுவை ஏழோசையொடு எட்டுத் திசை தானாய்**
**வேறாய் உடனானானிடம் வீழிம் மிழலையே**

*(திருமு:1:11:2)*

என்று முடித்து விட்டார் சம்பந்தர்.

வெளியே வேறாக இருக்கிறார்; உள்ளே உடனாயும் இருக்கிறார்: ''வேறாய் உடன் ஆனான்''

இறைவன் உள்ளேயும் இருக்கிறார். வேறாகவும் இருக்கிறார். அவ்வளவு பரந்த நோக்கம் சொல்லும் போது அப்புறம் பௌத்தன் எங்கே சார் வந்தான்? எல்லாம் ஆண்டவனாக இருக்கும்போது, பௌத்தன் மட்டும் அந்த ஆண்டவனுக்கு அப்பாலே எல்லைக் கோட்டுக்கு வெளியிலே நிற்கிறானா? சமணன்

*வெளியில் நிற்கிறானா? அப்போ சிவபெருமான் இவங்க இரண்டு பேரையும் படைக்கலேன்னா, சாத்தான் கதையாக அல்லவா ஆகிப்போச்சு!*

*பின்னே ஏன் பாடினாங்க? சிலவற்றைச் சொல்ல வேண்டிய காலம் - சூழ்நிலை அவ்வளவுதான். அதனை அவர்கள் நன்றாக அறிவார்கள்.*

**எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும்**
**தன்அடியார்க்கு**
**இங்கேஎன்று அருள்புரியும் எம்பெருமான்**
*(திருமு:2:40:6)*

*என்று பாடிய ஞானசம்பந்தர் புத்தனுக்கு மோட்சம் இல்லேன்னு எப்படிப் பாடுவார்? ஜெயினனுக்கு மோட்சம் இல்லேன்னு எப்படிச் சொல்லுவார்.*

**விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம் செய்தே**
**எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்**
*(திருமு:4:60:9)*

*என்று அவங்களும்தான் பாடுகிறார்கள். ''நீ என்ன சொன்னாலும் எங்க சாமி ஏத்துக்குவாங்கன்னு சொல் லிட்டு, அடுத்த பாட்டிலே, நீ சைவனாக இருக்க வேண்டும் என்றும் பாடுவார்கள்.*

*அது அந்தக் காலத்தைப் பொறுத்தது - அவ்வளவு தான்.*

*கேள்வி: திருவள்ளுவர் காலத்தைப் பற்றியும், அவருடைய மொழிநடையைப் பற்றியும் ஒரு கேள்வி.*

திருவள்ளுவருக்கு முன்னால் இருந்த அகநானூறு, புறநானூறு பாட்டுகளைப் படித்தீர்களானால், அது வந்து பண்டிதர் தமிழ் மாதிரி இருக்கு. உடனே எளிதில் புரிந்து கொள்வது கொஞ்சம் கஷ்டம். திருவள்ளுவருக்குப் பின்னாலே வந்தவர்கள் பாடியதையும் புரிந்துகொள்ள உதவி தேவையாக இருக்கு. திருவள்ளுவர் இரண்டாயிரம் வருடத்துக்கு முன்னாலே பாடினார். குறள் பெரும்பாலும் இக்கால மொழிநடையாக இருக்கே, அது எப்படி?

பதில்: இரண்டு வகை.

ஒன்று - தான் சொல்ல வந்தது. தன் புலமையை அல்லது கற்பனையைக் காட்ட வேண்டும் என்கிற போது அது மாறுபடும். தன்னைப் பற்றியே மறந்து இது மற்றவர்களுக்காக எழுதப்படுவது என்கிற போது மாறுபடும். அவ்வளவுதான்.

வள்ளுவன் தன்னை எந்த இடத்திலும் வெளிக் காட்டிக்கவே இல்லை. அவன் ஆம்பளையா? பொம் பளையா, பாணனா, பார்ப்பானா - மயிலாப்பூரிலே பொறந்தானா - அமெரிக்காவிலே பொறந்தானா - ஒன்றும் தெரியலை. என்ன சாமியக் கும்பிட்டாங்கறது கூடத் தெரியாது, 'கடவுள் நம்பிக்கை உண்டு' என்கிறதைத் தவிர. 'எண் குணத்தான்' என்றதனாலே ஜைனன் எங்களுக்குத்தான் சொல்லியிருக்கான் என்றான். பௌத்தன் எங்களுக்குத் தான் சொல்லியிருக்கான் என்றான்.

'சைவர்கள் விட்டுவிடுவார்களா! 'ஆகா எண் குணத்தன்' என்றதனாலே எங்கள் சிவபெருமானைத் தான் சொல்லியிருக்கான்' என்றார்கள்.

பாவம் - வைஷ்ணவன் ஒருத்தன்தான் எண் குணத்தன் என்றதானாலே ஒன்றும் சொல்லிக்கொள்ள முடியலே. அவன் பார்த்தான். 'அடி அளந்தான்' என்றதனாலே எங்கள் வைஷ்ணவத்தைத்தான் சொல்லியிருக்கு; தாமரைக் கண்ணான் உலகு என்று வைகுண்டத்தைத்தான் சொல்லியிருக்கு.

அப்படி எல்லாரும் 'தனது தனது' என்று உரிமை கொண்டாடுகிற மாதிரி அவன் தன்னை மறைத்துக் கிட்டான். இளங்கோவடிகள் மாதிரிதான் மறைத்துக் கிட்டிருக்கிறார். ஏன் அந்த மாதிரி மறைத்துக்கிட்டிருக் கிறார்?

மனிதர்களுக்குள்ள மன வேறுபாடு - கோட்டங் களை நன்றாக அறிந்தவன். அவன் இன்னான் என்று தெரிந்தால் உண்மையாகவே திருக்குறள் இப்படிப் பரவி இருக்காது. அது உண்மை.

நான் சின்ன பையனா இருக்கும்போது மார்க்கஸ் அரேலியஸ் எழுதிய கிரேக்க வரலாறு எல்லாம் படிக்காத போது - 'மார்க்கஸ் அரேலியஸ் சிந்தனைகள்' என்று ராஜாஜி மொழி பெயர்ப்பு பண்ணியிருந்தார். அதைத் தற்செயலாகப் பார்த்தேன். நம்பமாட்டீங்க. 'குட்டித் திருவாசகம்' அது. அதைப் பாராயணமே பண்ணுவேன் நான்.

பின்பு பத்து ஆண்டுகள் கழித்துக் கிரேக்க வரலாற்றைப் படித்த போது நான் கண்டுபிடிச்சேன். இந்த மார்க்கஸ் அரேலியஸ் போல அயோக்கியப் பயல் இந்த உலகத்திலேயே இருக்க முடியாது. 'சண்டாளன்' என்றால் அப்படி ஒரு சண்டாளனைப் பார்க்க முடியாது.

ஆனால், அது என்ன ஆச்சரியம். அவனுக்குள் இரண்டு பேர் இருந்திருக்கணும். - Dr Jekyll and Mr. Hyde மாதி அவனுக்குள். இருந்த Dr. Jekyll தான் இந்த Meditations எழுதியிருக்கணும். இதைத் தெரிந்த பிறகு அந்தப் புத்தகத்தைக் கையிலே தொடக்கூடப் பிடிக்கிறதில்லே.

அதற்கு முன்னாலே நானே விரிவுரை பண்ணுவேன். இந்த மாதிரி தமிழர்களுக்கு வரலாற்று உணர்வு கிடையாதுன்னு - ரொம்ப வருந்தத் தகுந்தது என்று.

17 வருஷம் இலக்கிய வரலாறு நான்தான் பாடம் சொன்னேன். M.A.க்குப் பத்து வருஷம் இதைத் தான் சொல்லியிருக்கேன். பிறகு தவறு என்று உணர்ந்து, மாற்றிக் கொண்டேன். தமிழர்களுக்கு வரலாற்று உணர்வு இருந்தது. அதை அவர்கள் வெளிக்காட்ட விரும்ப வில்லை.

அரசன் அரசியர் கதை வரலாறு அன்று மக்கள் எப்படி வாழ்ந்தார்கள்? என்ன உண்டார்கள்? என்ன நினைத்தார்கள் என்பதைப் பிற்பாடு Carlyle படிக்க ஆரம்பித்தேன். கார்லைல் சொன்னான். சொல்லுடா! அதுதாண்டா வரலாறு என்றான் தாமஸ் கார்லைல்.

*அதே மாதிரி தமிழர்களைப் பார்த்தால், சங்கப் பாட்டிலே மக்களைப்பற்றி நிறைய இருக்கும்.*

*மாவடு என்னா எனக்கு ரொம்பப் பிடிக்கும். என் வீட்டுக்காரி கூட திட்டுவா. 'என்ன வயசாச்சு. இப்போ போய் மாவடு மாவடுன்னு' என்று. நான் சொல்வது 'அடி பயித்தியம் உனக்குத் தெரியாது' நான் சைவ குடும்பம்... சைவர்களுக்கு மிக முக்கியம் மாவடு. பத்துப்பாட்டிலே பாணன் சொல்றான்: ''நீ போனேன்னா - ஒரு பிராமணன் வீடு இருக்குது. அவன் மாவடு ஊறுகாயோடு பால் சோறு தருவான். அதைத் தின்னுட்டுப் போ. அடுத்தாப் பலே போனேன்னா கோழிக்கறி. பண்ணி சம்பிரமமா வச்சுருப்பான். அதைச் சாப்பிடு'' என்கிறான்.*

*இந்தச் சமுதாய மக்களைப் பற்றிச் சொல்கிறான்.*

*அப்ப இந்த மாவடுவைப் பற்றி இவ்வளவு தூரம் சொல்வது சமுதாய மக்கள் வாழ்க்கையைப் பற்றிய தாகும். இது வரலாறு.*

*1500 ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் எவ்வாறு வாழ்ந்தனர்,* How they lived. *அவர்கள் இனவாரியாக என்ன சாப்பிட்டார்கள், அவன் என்ன சாப்பிட்டான். இவன் என்ன நினைச்சான், அவன் என்ன நினைச்சான்... அது வரலாறு. அதை விட்டுப் போட்டு, இவன் இருந் தான். இவன் ஏழு பெண்டாட்டியைக் கல்யாணம் பண்ணினான். அதிலே ஒருத்தி கழுத்தை வெட்டி னான். ஒருத்தியைத் தூக்கிலே போட்டான் - இது என்ன?* Henry VIII *எத்தனை பெண்டாட்டியைக் கல்யாணம்*

பண்ணினா எனக்கென்ன? என் பெண்ணையா கொடுக்கப் போறேன்.

பள்ளியில் சொல்லிக் கொடுப்பது எல்லாம் குப்பை; வரலாறு அன்று எனச் சொல்வான், கார்லைல்.

இது தெரிந்த பிற்பாடு நான் மாறினேன்.

ஏன் வள்ளுவன் தன்னைக் காட்டிக்கலே?

அவனுக்கு மக்களைத் தெரியும் - அவன் இன்னாரு என்று தெரிந்தால் - நீங்க உரிமை கொண்டாடுவீங்க. அவர் உடுமலைப் பேட்டைக்குப் பக்கத்திலே தான் பிறந்தாரு என்பார் ஒருவர். நான் 'இல்லவே இல்லை மயிலாப்பூரிலே' என்பேன். இந்த விவகாரமெல்லாம் வரும்.

பராசரன்... அட்டர்னி ஜெனரல்... அவர் தந்தை கேசவய்யங்கார்.

அவரு 'வடகலை ஐயங்கார்' திருவள்ளுவர் என்று சொல்லியிருக்கிறார். நீங்கள் நம்புவீர்களா? 'வள்ளுவர் உள்ளம்' என்று 450 பக்கம் எழுதியிருக்கிறார் ஒரு புத்தகம்.

இது மனித இயற்கை. வள்ளுவன் பார்த்தான். நூலை வெளியிட்டான்; ஆளை மறைச்சுக்கிட்டுப் போயிட்டான்.

கேள்வி: வள்ளுவரை விடுங்க. யானைக்கே வடகலை நாமமா, தென்கலை நாமமா... என்று சுப்ரீம் கோர்ட் வரை போனாங்க.

பதில்: போனோம் அதுக்கப்புறம் தமிழர் பெருமை உங்களுக்குத் தெரியாது. நான் காஞ்சிபுரத்திலே பணியாற்றினேன். இரண்டு பேருமே போட்டாங்க. ஏன்னா? தென்கலைன்னு தீர்ப்பு கொடுத்துட்டான். தென்கலை நாமத்தைப் போட்டான். பார்த்தான் வடகலையான். நீங்கள் நம்ப மாட்டீர்கள்; ஆனால் உண்மை. யானைக்குப் பின்பக்கத்திலே வடகலை நாமத்தைப் போட்டான். வெட்கமா இல்லே!? பகவானுடையது என்று சொல்கிறதை யானையினுடைய ப்ரஷ்ட பாகத்திலே போட்டு...

ஏன் இந்த ஊர் இருக்கே இராமானுஜர் - எதீந்திரர் கிட்டேப் படிச்சாரு.

யாதவப் பிரகாசர் என்பவர் காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவில்லே உட்கார்ந்து, பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்திருந்தார். "கப்யாஸம் புண்டரீகம் ஏவம்க்ஷிணி" என்ற வாக்கியம் வந்தது. 'குரங்கினுடைய பின்பகுதி' என்று அர்த்தம் பண்ணினாரு.

முசு என்றால் குரங்கு. அதிலே ஒண்ணும் தப்பில்லே. பகவானுடைய வாய் சிவப்பாக இருக்கிறது என்கிற இடத்திலே முசுப்பிரஷ்டம் என்று வந்திருக்கு.

'செங்குரங்கினுடைய பின்பாகம் இருக்கிறதே, அது மாதிரி' என அர்த்தம் பண்ணுகிறது இராமானுஜருக்குப் பிடிக்கலே. அவருக்குத் தாங்க முடியல. இராமானுசர், "சூரியனால் மலர்ந்த தாமரை போன்ற கண்ணை உடையவன் பெருமான்" என்று பொருள் கொண்டார்.

அதனால் யாதவப் பிரகாசரிடம் படிப்பது நின்றது. அப்போது கேள்விப்பட்டார் திருக்கச்சி நம்பி; படிப்பே இல்லாதவர் - பகவான் இராமகிருஷ்ணர் மாதிரி. கோவில்ல தண்ணி எடுத்துப் பூக்கட்டி கொடுக்கறது. கோயில்லேயே படுத்துக்கிறது. எல்லாரும் சொல்றாங்க தினமும் பெருமாள் அவர் கிட்ட பேசறாரு என்று.

நல்ல வேத அத்தியாயி. அறிவாளி. இராமானுஜர். படித்தவர். நம்பமுடியவில்லை. நம்பியோ சாதியும் இல்லாத ஆளு; தாழ்ந்த குலத்தவர். இவரைச் சோதனை பண்ணனும்னு 12 கேள்வி தயார் பண்ணினார், உடையவர் - இராமானுஜர். இதை அவர்கிட்ட கொடுத்துப் பார்ப்போம். பகவான் கிட்ட கேட்டுச் சொல்றானான்னு. அடுத்து ஒரு சந்தேகம் வந்து விட்டது. இந்தக் கேள்வியை அவர் படிக்கிறதாவது? அவர்தான் படிக்காதவராயிற்றே. சந்தேகம் வந்தது.

பார்க்கிற போதெல்லாம் கும்பிடுவாரு. 'நல்லா இருக்கியா குழந்தை'ன்னு ஆசீர்வாதம் பண்ணிப் போவாரு. ஒரு நாள் திருக்கச்சி நம்பி குளத்திலே தண்ணி எடுத்துக்கிட்டுப் போறப்போ இராமானுஜரை 'இங்கே வா' என்றார்.

''ராத்திரி பெருமாள் சொன்னாரு. என்னவோ 12 கேள்வி உன் கிட்டச் சொல்லச் சொன்னாரு'' என்று ஒப்பிச்சார். எனக்குத் தெரியாது. அது எல்லாம் இராமானுஜருடைய 12 கேள்விக்குப் பதில். அன்றையிலிருந்து திருக்கச்சி நம்பியை இராமானுஜர் குருவாக ஏற்றுக் கொண்டார்.

இராமனுஜருக்குப் பெரிய இடத்துக் கல்யாணம் - அழகான பெண்டாட்டி - ஒருநாள் இராமானுஜர் திருக்கச்சி நம்பியைக் கூப்பிட்டு விருந்து போடணும்னு ஏற்பாடு பண்ண, நம்பி வேண்டாம்னு சொல்லிப் பார்த்தார். ஆனால் இராமானுஜர் கண்டிப்பா வரணும் என்றதால் சரியென்றார். பெண்டாட்டி கிட்டே 'பெருமாளே வரார்' என்று சொன்னார். பெண்டாட்டி கொஞ்சம் முகத்தைச் சுளிச்சார். இருந்தாலும் குறிப்பிட்ட நேரத்தில் சாப்பாடு தயாராயிடுச்சு. அந்த வேளையில் இராமானுஜர் எங்கேயோ வேலையில் வெளியே போக வேண்டியிருந்தது. பகவனானுடைய செயல் - திருக்கச்சி நம்பி வந்தார். இராமானுஜருடைய பெண்டாட்டி 'ஓ, செட்டி இங்கே உட்கார்' என்று திண்ணையில் வைத்துச் சாப்பாடு இலையிலே போட்டாள். அவர் சாப்பிட்டார். 'எலையை எடு' என்றாள். எடுத்துப் போட்டார். அந்தப் பெண்டாட்டி சோறையெல்லாம் போட்டுவிட்டுக் குளித்தார். அந்த வேளையில் இராமானுஜர் திரும்பி வந்தார். 'நம்பி வந்தாரா' என்று கேட்டார். 'சூத்திரன் வந்தான் சாப்பாடு போட்டேன்' என்றாள். அப்பதான் இராமானுஜர் சன்யாசம் ஏற்றுக் கொண்டார். சூத்திர னுக்குச் சாப்பாடு போட்டேன். இது அந்த இராமானுஜர் மனைவியைப் பொறுத்த வரை அன்றைய சமுதாயப் பார்வை. யார் மறுக்கமுடியும்?

இவரைப் பொறுத்த மட்டில் இவர் பார்க்கிற பார்வை வேறு. அந்தப் பெண்ணைப் பொறுத்தமட்டில் பார்க்கிற பார்வை வேறு. சமுதாயப் பார்வை வேறு. ஆக மெய்ப்பொருள் எது? திருக்கச்சி நம்பி பகவானோடு

சமத்துவம் கொண்டவர்னு நினைக்கிறது. இவருக்குச் சரி. நம்பி ஒரு சூத்திரன். தண்ணீர் கொண்டு வரவன் பூ தொடுக்கறவன்... வீட்டுவேலை செய்றவன். என்பதும் உண்மை.

'நுண்ணிய நூல்பல கற்றார்.' நுண்ணிய நூலிலே சாதி இருக்கிறது. மெய்ப்பொருள் காண்பது என்பது அவரவர் வளர்ச்சியைப் பொருத்தது.

**கேள்வி:** வடகலை / தென்கலை வழக்கின் உகப்பான பகுதி. கொஞ்சம் பேர் யானைக்கு வடகலை நாமம் போடணும்னாங்க - கொஞ்சம் பேர் தென்கலை என்று வாதம் பண்ணாங்க. கடைசியிலே ஜட்ஜ் என்ன சொன்னார் - 6 மாதத்துக்கு வடகலை போடுங்கள் - 6 மாதத்துக்குத் தென்கலை போடுங்கள் - என்று தீர்ப்புச் சொன்ன நீதிபதி Justice Ismail...

**பதில்:** ஆமாம். ஆனால் நம்ம Ismail இல்லை. அவர் ஒரு District Judge Ismail.

**கேள்வி:** மெய்ப் பொருள் என்று பேசறோம் - யானையை யாருமே கேட்கலே...

**பதில்:** சார் - இந்த வெறி இருக்குதே என்ன என்று சொல்றது... தீர்த்தம் வாங்கறத்துக்கு ஒருத்தனை ஒருத்தன் அடித்துக்கொள்வதைப் பார்த்தீங்கள்னா... பகவான் பார்த்துச் சிரித்துக்கொண்டே இருக்கிறான் - சாட்சி மாத்திரையாக.

**கேள்வி:** சேக்கிழார் காலத்திலே சாதி பிரிச்சு, பிரிச்சு எழுதறார்.

பதில்: *அக்கால நிலையை ஏற்றார்; சில விதி விலக்கும் இருந்தது. சுந்தரமூர்த்தி நாயனார் குருக்கள் குலத்தில் பிறந்தவர். உலகத்தில் பொம்பளையே யில்லேன்னு ஒரு தாசியைக் கல்யாணம் செய்து கொள்ளணுமா? அதைப் பாடறார். மற்றவன்னா அதை மறைப்பான். ஆனால் சேக்கிழார் அப்படியில்லை. அவர் சிறப்பென்ன என்றால்*

'பதியிலார் குலத்துள் தோன்றிப்
பரவையார் என்னும் நாமம்
விதியுளி விளக்கத்தாலே
மேதகு சான்றோர் ஆன்ற.

*(பெ.பு.தடுத்தாட்கொண்ட. 132)*

*என்று பாடுகிறார். அன்று இதை நம்பறவங்களும் இருந்தாங்க. சிலர் இதைச் 'சீப்போ' என்று இடது காலால் உதைத் தெறிந்தவர்களும் இருந்தார்கள். இல்லேன்னா, மயிலாப்பூரிலே வாழ்ந்த செட்டியார் சீர்காழியில் வளர்ந்த பிராமணனுக்குப் பெண்ணைக் கொடுக்கணும் என்று வளர்த்தான் - அவன் பைத்தியக் காரனா என்ன?*

*இதைத் தூக்கி எறிந்த சிலரும் இருந்தாங்க. பெரும் பாலோர் எடுத்துக் கொண்டாங்க. எல்லோரும் இராமானுஜர் அல்லர்.*

**கேள்வி:** *திருத்தொண்டர் புராணம் என்று பெயர் கொடுத்தார் சேக்கிழார். இதைக் காப்பியம் என்று எடுத்துக் கொள்ள ஏன் இவ்வளவு நாளாயிற்று? இப்ப கம்பன் வந்து 'ஆசை பற்றி அறையலுற்றேன்... இராமன்*

கதை' என்று பாடினான். இது காப்பியமாக ஏற்றுக் கொண்டாங்க. தொண்டர் புராணம் என்றபோது, தொண்டுதான் தலைவன் என்று ஏன் ஏற்றுக் கொள்ள வில்லை.

பதில்: *அது எல்லாம் சரி சார். காப்பியம்னா காப்பிய நாயகன் என்று ஒருத்தன் இருக்கணும்னு - தண்டியலங் காரத்திலே காப்பிய இலக்கணம் வகுத்தான். - 'தன்னேரில்லாத் தலைவனை உடைத்தாய்' எப்போ உடைக்க. ஆரம்பிச்சன்னா அண்ணைக்கே* close. *தமிழ்நாட்டிலே ஒரு காப்பியம் மாதிரி மற்றொன்று இல்லை. சிலப்பதிகாரத்துக்குப் பின்னே வந்தது எல்லாம் வேறே வேறே அப்புறம் வந்தது மணிமேகலை. சிலப்பதிகாரத்துக்கும் மணிமேகலைக்கும் எவ்வளவு வித்தியாசம். அதுக்கப்புறம் வந்தது. தலையும் இல் லாமல் வாலும் இல்லாமல் - வெட்டி வைச்ச மாதிரி - பெருங்கதை - இதைப் பற்றி ஒண்ணும் தெரியாது. அதுக்குப் பின்னாலே வந்தது கம்பன் - அதைப் பற்றியும் ஒண்ணும் தெரியாது. சிந்தாமணி - ஒண்ணு மாதிரி ஒண்ணு கிடையாது. எதை வைச்சு, இலக்கணம் பண்றது? அதுதான் உபத்திரவம். எல்லாத்துக்கும்* at... *ஒரு* common factor - *சிலப்பதிகாரம்னு - கோவலன்னு ஒருத்தன் இருந்தான். மணிமேகலைன்னா, மணிமேகலை ஒருத்தி, பெருங்கதைன்னா உதயணன், இராமாயணம்னா இராமன் இப்படி 63 பேரில் யாரைப் போய்த் தலைவன் என்று எடுத்துக்கொள்வது? இந்தச் சிக்கல் வந்தவுடனே*

இது காப்பியமே இல்லைடா என்னாங்க. உதிரிப்பாடல்க ளெல்லாம் சேர்த்திட்டாங்க, அவர் கதை இவர் கதை என்று. புறநானூறு மாதிரி. ஒரு தொகுப்பு.

யாரோ ஒருத்தரை தலைவராக வைக்கமுடியலை. சேக்கிழாரே பார்த்தார். முதல்லே ஒரு கதையை வைத்துப் பின்னாலே ஒண்ணு - சுந்தர மூர்த்தி நாயனாரை காப்பிய நாயகனை வைத்துச் சொல்லலாம். Homer இலும் Milton Paradise Lost இலும் வரும் பின்னோக்கு உத்தி (flash back) மாதிரி பண்ணலாம்.

கேள்வி: கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே தந்தைசொல் மிக்க மந்திரமில்லை. என்றே வந்துகொண் டிருக்கிறது. ஆனால், பிரஹலாதன் கதையை எடுத்தால், தந்தை சொல்லை தட்டித் தூணிலும் இருப்பான் என்று சொன்னதால் தான் அவன் மோட்சம் பெற்றான். - இராமன் கதையை எடுத்தால், அரசாள வேண்டும் என்னும் கடமையை விட்டு விட்டுக் காட்டுக்குப் போனதால் இராமாயணம் வந்தது. இதுமாதிரி பார்த்துக்கொண்டு போகும்போது நம் முன்னோர்கள் கடமையைப் பற்றி ஆழமாகச் சிந்தித்து, எதை வற்புறுத்திச் சொன்னார்கள் என்று சொல்லலாம்....?

பதில்: கடமை என்பது யாருக்கு? எந்த படிநிலை என்று இருக்கு. பள்ளிக்கூடத்திலே படிக்கிறபோது, படிக்கிறது தான் அவன் கடமை. அரசியலில் போயி... ஆனால் பெரும்பாலும் அதிலேதான் ஈடுபட்டிருக் கிறான். அது வேறு விஷயம்.

அப்புறம் கல்யாணம் ஆன பின்பு குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியது கடமை என்கிறோம். வேலைக்குப் போனவுடனே கையூட்டு வாங்காமல் இருந்தா சரி. அவன் கடமையைச் செய்யணும். இது மாதிரி கடமையைச் செய்திருந்தான்னா இந்தியா எல்லா நாட்டை விட முன்னேறியிருக்கும்.

பிரகலாதனை எடுத்துக் கொண்டால், அகங்கார வளர்ச்சியைப் பார்க்க வேண்டும். பிரகலாதன், இரணியன் அவங்க அகங்கார வளர்ச்சி ஏறத்தாழ ஆண்டவனுக்கு நிகரானதும், பிரகலாதனையோ இரணியனையோ அழிக்க வேண்டுமானால் கடவுளே வரணும். அதுவே பேரகங் காரம் (Super ego) நம் அகங்காரம் போன்றதன்று. காரணம் அகில 'உலகமும் நான்; என் பேரைச் சொல்லு' என்கிறான். இந்த (ego) அகங்காரத்தைப் போக்க வேண்டுமானால் பகவான் தான் நேரடியாக வர வேண்டும். 'எல்லாம் நான்' என்கிறான் அவன். எல்லாம் அவனாக இருக்கிறான். அவனுக்கும் இறைவனுக்கு மிடையிலான வேற்றுமை மெல்லிய படலம் போல அமைந்துள்ளது. அந்தப் படலம் கிழிந்தால் அவன் இறைவனுக்குச் சமமாகி விடுவான். (The distriction is so thin it is like a membrane - அந்த membraneஐ இழித்தால், he is equal to God.)

இப்ப இந்த ஆணவம் இருக்கே, இதைப் போக்க வேண்டுமானால் பகவான்தான் நேரடியாக வர வேண் டும். ஏனென்றால், 'எல்லாம் நான்' என்கிறான் அவன். அந்தப் படலத்தைக் கிழிக்க வரவேண்டும்.

எனவே, அகம் பிரம்மாஸ்மியாக இருக்கிறபோது பிரம்மம் பிரம்மாஸ்மியாக உள்ளது. அத்வைதியாக 'எல்லாம் நானாக இருக்கிறேன்' என்று நினைக்கிறானே, அந்த 'நான்' பெரிசாக வளர்ந்துவிட்டது. இந்த நானைப் போக்குவது நம்மாலே யெல்லாம் முடியவே முடியாது.

**'கேள்இது: நீயும் காணக் கிளர்ந்த கோள் அரியின் கேழ்இல்**
**தோளொடு தாளும் நீக்கி நின்னையும் துணித்துப் பின் என்**
**வாளினைத் தொழுவ தல்லால் வணங்குதல் மகளிர் ஊடல்**
**நாளினும் உளதோ என்னா அண்டங்கள் நடுங்க நக்கான்'**

*(கம்ப.யுத்த.இரணிய வதை:146)*

*'ஊடலில்கூடப் பொம்பளையை நான் வணங்கினது இல்லடா. நீ சொன்ன நாராயணனையா வணங்குவேன் போடா. நீயுமாச்சு நாராயணனுமாச்சு' என்றான். அது தான் பேராணவம்.*

*தான் பெற்ற பிள்ளை - ஒரே பிள்ளை. மலையிலிருந்து "உருட்டுடா நான் சொன்னதைக் கேட்கலன்னா" கொல்லுடா.*

*புத்திர வாத்ஸல்யம் என்று சொல்வார் வடமொழிக்காரர். தள்ளமுடியாத அன்பு - புத்திர வாத்ஸல்யம். அதிலே தானே உயிரை விட்டான் தசரதன். அந்தப் புத்திர வாத்ஸல்யத்தையும் வென்றுவிட்டானே இவன். நினைத்துப் பாருங்கள் அப்படியானால், தன் ஆணவத்திற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறான்.*

*அதே மாதிரிதான் இராவணன் கிட்டேபோய்ச் சொல்றான் அவன் மகன். 'ஆதலால் அஞ்சினேன் என்று அருளலை' அப்பா - இந்திரசித்து - நான் பேசுகிறேன். தகுதியற்றவன் இல்லே. சாதாரண ஆள் என்று நினைத்து விடாதே. இந்த உலகத்திலே இதை விட வெற்றி அடைய முடியாது. ஆதலால் தயவு செய்து போருக்குப் பயந்து விட்டேன் என்று நினைக்காதே.*

**உன்மேல் காதலால் உரைத்தேன்**

*கடைசியாக, உனக்கு நான் செய்ய வேண்டிய கடமையைச் செய்ய வேண்டும். என்னைப் பெற்றதற் காக உன்னை வாழ வைக்க வேண்டும் என்று நினைக் கிறேன்.*

**.........'ஆசைதான் அச்**
**சீதைபால் விடுதிஆயின் அனையவர் சீற்றம் தீர்வர்**
**போதலும் புரிவர், தீமையும் பொறுப்பர்; உன்மேல்**
**காதலால் உரைத்தேன்'.......**

*(கம்ப:யுத்த:இந்திரசி வதை.7)*

*இப்போது நினைத்துப் பாருங்கள். ஒரே பிள்ளை. எல்லாம் போயாச்சு. தம்பியும் போயாச்சு. இருக்கிறது அவன் ஒருத்தன் தான். அவனிடம்*

**'முன்னையோர் இறந்தார் எல்லாம் இப்பகை முடிப்பர் என்றும்**
**பின்னையோர் நின்றோர் எல்லாம் வென்றனர் பெயர்வர் என்றும்**

*(கம்ப:யுத்த:இந்திரசி வதை.8)*

போடா போடா. உன்னைப் பார்த்தா இந்தப் பகையைத் தேடிக் கொண்டேன்.

**என்னையே நோக்கியான்இந் நெடும்பகை தேடிக்**
**கொண்டேன்'**

*(கம்ப:யுத்த:இந்திரசி வதை.8)*

என்னையே என்று சொல்லுகிற ஆணவம் இருக்கே, அதுதான் பேராணவம். புத்திர வாத்ஸல்யத்தையும் தூக்கி எறிகிறது.

புத்ர வாத்ஸல்யமே அடிபடுகிற போது பெண் டாட்டி எல்லாம் எங்கே இருக்கா? எல்லாம் போச்சு. அந்த ஆணவம் அண்டத்தை எல்லாம் தன்னுள் கொண்டு நிற்கிறது. அந்த நேரத்தில் ஆண்டவன் வருகிறான். நீ என்னிடம் வரவேண்டிய நிலையில் உள்ளாய். அந்த படலத்தைக் கிழித்து விடவேண்டும்.

இப்போது எல்லாம் நான் என்று நினைப்பது போக, எல்லாம் அவன் என்று நினைக்கிற நிலை. சூரபன்மன் வருகிறான். சின்னப் பையன் சண்டைக்கு வருகிறான் என்று சொல்லிக் கொண்டிருந்தவன் பார்த்தவுடனே கும்பிடவேண்டும் என்று அவன் மனம் எண்ணுகிறது. ஆனால் அப்படி நடவாமல், தடுத்தது மானம் ஒன்றே.

**சூழுதல் வேண்டும் தாள்கள்**
**தொழுதிடல் வேண்டும் அங்கை**
**தாழுதல் வேண்டும் சென்னி**
**துதித்திடல் வேண்டும் தாலு**

*(கந்தபுராணம் சூர்.வதை:444)*

*'ஏண்டா கடங்காரா! பண்ணிவிட வேண்டியது தானே!' 'தடுத்தது மானம் ஒன்றே' என்றான்.*

*'108 உலகத்தை ஆண்டுப்புட்டு பொடி பயலுக் கிட்டே போய் கும்பிடறதா...!?' தடுத்தது மானம் ஒன்றே. அதைத்தான் இவன் சொன்னான்.*

**சிவனோ அல்லன் நான்முகன் அல்லன் திருமாலாம்**
**அவனோ அல்லன் மெய் வரம் எல்லாம் அடுகின்றான்**
**தவனோ என்னின், செய்து முடிக்கும் தரன் அல்லன்**
**இவனோ தான் அவ்வேத முதல் காரணன் என்றான்.**

*(கம்ப.யுத்த.இராவ.வதை:134)*

*கும்பிட்டுத் தொலைக்க வேண்டியதுதானே*

**யாரேனும்தான் ஆகுக -**
**யான்என் தனி ஆண்மை**
**பேரேன்; நின்றே வென்றா**
**முடிப்பேன் - புகழ்பெற்றேன்**

*(கம்ப.யுத்த.இராவ.வதை:135)*

*என்று முழக்கமிடுகிறது இராவணன் ஆணவம்.*

*அந்த ஆணவம் இருக்கிறதே அதைப் போக்கக் கடவுளைத் தவிர வேறு யாருமில்லை. ஆனால் இராவண னைப் போக்க வேண்டுமானால் அந்தப் பேராணவத் துக்கு அதை அளித்த பரம்பொருள்தான் நேரே வர வேண்டும். ஆகையால் தான் வந்தான். அம்பைப் போட்டவுடனே அகங்காரம் அழிந்தது.*

*அதே மாதிரிதான் இரணியன். 'எங்கடா நீ சொன்னவன். எங்கேடா உங்க நாராயணன்? அங்கே இருக்கானா? இங்கே இருக்கானா?'*

**சாணினும் உளன்; ஓர்தன்மை**
**அணுவினைச் சதகூறுஇட்ட**
**கோணினும் உளன்; மாமேருக்**
**குன்றினும் உளன்; இந்நின்ற**
**தூணினும் உளன்; நீ சொன்ன**
**சொல்லினும் உளன்...**

*(கம்ப.யுத்த:இரணிய.வதை:124)*

*உங்களுக்குக் கதை தெரியும். அவன் சொன்னான் இந்தத் தூணைப் பிளக்கிறேன். அதனுள் அவன் இல்லையாயின் இந்த வாளால் உன்னையும் கொன்று தின்பேன். அந்த ஆணவம், பேராணவம். அந்தப் பேராணவம் வரும்போது சாதாரண கடமையெல்லாம் கத்தரிக்காய். எல்லாம் விட்டு விடுங்க. இதெல்லாம் நம்ம மாதிரி ஆளுங்க பேசுற பேச்சு. அதைத் தாண்டிப் போகும்போது*

**குற்றம் நீ குணங்கள் நீ -**

*(திருமு:3:52:1)*

**பகையும் நீ நட்பும் நீ**

*(கம்ப.கிட்கி:வாலிவதை:129)*

*எங்கேயோ போய்விடுகிறது - அனைத்தையும் தழுவிக் கொள்கிறது. அப்போது நீ, நான் என்கிற பிரச்சினையே இல்லை. ஒருத்தன் தான் இருக்கிறான்.*

அந்த மாதிரி இருக்கறவங்க சண்டை போட்டு அமிழ்ந்து போகிறாங்க.

நம்மாழ்வார் மாதிரி - சம்பந்தர் மாதிரி இருக்கிறவங்க பிறப்பிலேயே 'சப்மர்ஜ் ஆகிறாங்க.' 'என்னை விழுங்கித் தானேயாய் என்னுள்' என்று பாடுகிறாங்க. இரண்டும் ஒன்றே. அங்கே தொடர்ந்து போராடி இறைவனிடம் ஆழ்கின்றனர். இங்கே அப்படிக் கிடையாது.

**கேள்வி:** This is a question on Bharathiyar. When he went to Pondichery he come into contact with...

**பதில்:** குள்ளச்சாமியார், மாங்கொட்டைச் சாமியார்.

**கேள்வி:** when I read some of his poems, some of the things he has said seem to be like Aurobindo's interpretation.

**பதில்:** மாங்கொட்டைச் சாமியைப் பற்றிப் பாடியிருக்கிறாரு. குள்ளச்சாமியைப் பற்றிப் பாடியிருக்கிறார். Have you read that?

**கேள்வி:** yes... But I think they seem to be more like ...

**பதில்:** I do not deny that ...

அரவிந்தர்கிட்டே பாரதி இருந்த நிலை வேறு; அரவிந்தர் இவருக்கு உபதேசம் பண்ணலே. அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம்.

*பாரதி அரவிந்தரை அறிவார். பாரதி அடிக்கடி ஆஸ்ரமத்துக்குப் போயிருக்கார். - அரவிந்தரை நல்லாத் தெரியும்.*

*ஆனால் அரவிந்தர் பாரதியைத் தம் சீடராகக் கொள்ள வில்லை. காரணம், அரவிந்தர் உபதேசம் பண்ணி இருக் கிறதா இருந்தா பாரதி வாழ்க்கை மாறிப் போயிருக்கும். உட்கார்த்தி வைத்திருப்பார். அவர் பெரிய புரட்சியாளர்; அதாவது,*

*கொஞ்சம் சிந்திக்கணும். நீங்கள் வினவியதால் சொல்கிறேன்: அரவிந்தர் இந்தியத் துறவிகளில் வித்தி யாசமாக இருந்தவர்.*

*எல்லாரும் நம்மைத் திருத்திக் கொண்டு அந்த வழிக்குப் போகணும்னு சொன்னாங்க. அரவிந்தர் எழுதின 'சாவித்திரி' படிக்கணும். ஆண்டவனையே, ''நீ என்னடா அங்கே உட்கார்ந்து பண்றே? வாடா இங்கே'' என்கிறார்.*

*அதைத்தான் எதிரொலிக்கிறான் பாரதி:*

''அம்மா
பஞ்சமும் நோயும் நின் மெய்யடியார்க்கோ
பாரினில் மேன்மைகள் வேறினி யார்க்கோ
தஞ்சமடைந்த பின் கைவிடலாமோ?
தாயுந்தன் குழந்தையைத் தள்ளிடப் போமோ?

*(பாரதி: சுதந்தரதாகம்:2)*

*நீ வந்து அருள் பண்ண வேண்டுமென்று பாரதி பாடுவதே, அரவிந்தருடையதுதான். 'சாவித்திரி'யில்*

தான் முதன் முதல்ல சொன்னார் அரவிந்தர். ‘கடவுள் இறங்கி என்னிடம், நம்மிடம் வரட்டும்.’ (Let the Lord come down to me; come to us.)

ஒன்றை வைத்துக்கொள்ளுங்கள். பகவான் இராம கிருஷ்ணர் சாக்தர். அம்பிகைகிட்டே நேரே பேசுகிறவர். He never inculcated that philosophy into Vivekanda, do you know why? He knew full well. The message of Vivekanda is totally different. காளி பூசை பண்றத்துக் காக விவேகானந்தர் வரலே.

அவரை அமெரிக்காவுக்கு அனுப்பி, இந்த உலகத் திலே இந்து சமய நெறியைப் பரப்பணும். அதற்காக வளர்க்கிறார்.

ஒரு நாலைந்து நாள் அவரைப் பார்க்க வரலையாம். ‘எங்கே நரேந்திரன்’ என்று கேட்கிறார், ‘ஏண்டா வரலே’ன்னு.’

‘நாங்க உங்களைப் பற்றிப் பேசிண்டு இருந்தோம்’

‘என்னடா பேசினே’ன்னு கேட்டாரு.

நீங்கள் தான் உலகிலேயே மிகப் பெரிய கல்வியற்ற மனிதர் ("you are the greatest illiterate in the world") என்று பேசிக்கிட்டு இருந்தோம்னாரு. எல்லாரும் விழுந்து விழுந்து சிரிக்கின்றனர்.

அப்படிச் சொன்னவரைக் கூப்பிட்டு வச்சதே அவர் ராஜயோகமும், பக்தி யோகமும் இங்கே வந்து பண்ண னும்னா எப்படி? அவரு இங்கே காளி பூஜை பண்றது எப்படி?

ஆகவே, காளி பூஜை பண்ணி அம்பிகைகிட்டே நேரே பேசற இராமகிருஷ்ணர் இவரை ஒதுக்கி வளர்க்கிறார். ஏன்? இவருக்கு வேறு ஒரு நோக்கம் இருக்கு.

இதே தான் ஸ்ரீ அரவிந்தர் பண்ணினது. பாரதியாரை அவர் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. ஏன்னா, பாரதியார் பிறந்ததே வேறொரு நோக்கத்திற்காக.

ஆகவே, ஸ்ரீ அரவிந்தர் பாரதிக்குச் சில கருத்துக்களைக் கொடுத்து அப்படியே விட்டு விட்டார். அவ்வளவு தான் வேறு ஒன்றுமில்லே.

அரவிந்தருடைய கருத்துக்கள் நிறைய இருக்கு. பாரதிகிட்டே அதுவும் சாவித்ரியை படித்து விட்டு பாரதியைப் படித்தால் நிறைய இருக்கு பாரதியிலே அரவிந்தருடைய எண்ணங்கள்.

இந்தக் கருத்து - ஆண்டவன் மேலேயிருந்துவந்து இங்கே நமக்கு அருள்புரிய வேண்டும். அங்கே அவனுக்கு வேலை ஒன்றுமில்லே என்று சொன்னது - பாரதியிலே நிறைய இருக்கும். அதெல்லாம் அரவிந்தருடைய வாதம்.

பதில்: *யார்? அசோக்?* - Ashok is my son-in-law's younger brother - a computer engineer in California - என்ன கேள்வி?

**கேள்வி:** விவேகானந்தர் முதன் முதலில் நாஸ்திகராக இருந்தவர். He went about asking every one - Have you seen God?. He was the first person to have asked Ramakrishna directly - 'Have you seen God?'

Ramakrishna replied 'yes - Not only have I seen. I have talked to him.' So Vivekananda was quite aware that Ramakrishna had direct communication with God.

*பதில்: அதுமட்டு மில்லே. குரு இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலத்தையும் அறிந்தவர். சீடர் அப்படி எதனையும் அறியாதவர்.*

*விவேகானந்தர் எத்தீஸ்ட் - நாத்திகர் இல்லே.* He was a typical agnostic *அறிவுக் கண் கொண்டு பார்த்தார். அறிவு பூர்வமாக ஆராய்ந்து ஒண்ணும் பண்ண முடியாது என்பதை முதன் முதல்லே பகவான்தான் அவருக்குச் சொன்னாரு. இதை வந்து 'தேன் தடவிய வாள் முனை' என்று சொல்வார்கள். தேனை நக்கினால் வாள் நாக்கை அறுத்திடும். அது மாதிரி அறிவு பூர்வமாகப் போய் நீ ஆண்டவனை அடைய முடியாது. சரண் புகு.*

*அதற்கு ஒரு உதாரணம். ஒரு நாள் வீட்டிலே - நரேந்திரனுக்கு ரொம்பச் சிரமம். ரொம்ப ஏழைக் குடும்பம். இவர்கிட்டே வந்து 'உர்' என உட்கார்ந்திருக்கார்.*

*''ஏண்டா இப்படி உட்கார்ந்திருக்கே''*

*''என்னய்யா உன் உபதேசமும் மண்ணாங்கட்டியும். வீடு திண்டாடுகிறது, சோத்துக்கு இல்லாமே''*

*''போய் அம்மாகிட்டே கேளேன்''*

*'அம்மா கிட்டே எப்படிக் கேக்கிறது?'*

*இது ஒரு வகையான தீக்ஷை.*

'போடா - அங்கே போய்க் கேளு. எவ்வளவு வேண்டுமானாலும் கொடுப்பா...

போனா பணமா கேட்பாரு? அப்படியே நின்னாரு - திரும்பி வந்தாரு. 'கேட்டாயாடா' என்றார்.

'என்ன கேக்கிறது. மறந்துட்டேன்' என்றாரு.

''போடா பைத்தியக்காரனா இருக்கியே - வீடு பட்டினி கிடக்குது - திரும்பப் போய்க் கேளு'' என அனுப்பி வெச்சார்.

திரும்பிப் போனாரு. ஒன்றும் கேட்க வில்லை. முன்போலவே மூன்றாம் முறையும் செய்தார்.

பின்னர் விவேகானந்தர் உணர்ந்தார். இப்போ படிப்படியாக வளர்க்கிற முறை - இவ்வளவு தூரம் விவேகானந்தருக்குப் பண்ணினதை அவரது மச்சான் பார்த்துக்கிட்டே இருக்கான்.

''என் நெஞ்சிலேயும் கைவச்சு அருளுங்க'' என்கிறான். பகவான் - வேண்டாம்னு எவ்வளவோ சொல்லிப் பார்க்கிறார். சாரதா தேவி கிட்டே போய் அந்தப் புண்ணிவான் முறையிடுகிறான்.

'ஐயோ பாவம், அவனுக்கும் பண்ணிவிடுங்க' என்கிறார் அந்த அம்மா. பகவானால் கூட மனைவி சொல்லைத் தட்ட முடியவில்லை.

நெஞ்சிலே கை வச்சவுடனே அவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. பைத்தியமாகப் பல நாள் அலைந்தான்.

பின்னர் பகவானே அவனைத் தெளிவித்தார். ஆக மொத்தம் அந்தப் பக்குவம் வரணும்.

இராமகிருஷ்ணர் கிட்ட நரேந்திரர் மட்டுமா போனார். எத்தனையோ பேர் போனாங்க. பகவானுக்கு யாரைத் தேர்ந்தெடுக்கணும்னு தெரியும். ஏசுநாதரைக் கூட எத்தனையோ பேர் போய்ப் பார்த்தாங்க. அவர் சிலரைத் தான் தேர்ந்தெடுத்தார். அது மாதிரி நரேந்திரன் போகும் போது அவன் யாருன்னு பகவானுக்கு உள்ளங்கை நெல்லிக் கனிபோல தெரிந்தது. அவனை அணைத்துப் பிடிச்சுக்கிட்டார். எடுத்த எடுப்பிலேயே பண்ணிட்டா மதிப்பு இல்லாமப் போகும். கொஞ்சம் கொஞ்சமாகச் சிரிக்க வச்சு, கூத்தடிச்சு... மேலே கொணர்ந்தார்.

அதே மாதிரி அரவிந்தர்; அந்த அம்மா பிரஞ்சுக்காரி. நம்பவே மாட்டீங்க. அந்த அம்மாவைத்தான் தேர்ந்தெடுத்தாரு. அவர்களுக்கு மட்டுமே விதிகளும், நடைமுறைகளும் தகுதியும் தெரியும். நமக்குத் தெரியாது.

**கேள்வி:** திருவள்ளுவர் மேலே ஒரு கணை தொடுக்கணும்.

**பதில்:** ஒரு கணையில்லை சார். 2000 வருஷமா எத்தனையோ பேர் தொடுத்திருக்காங்க உங்க கைவரிசையைக் காட்டுங்க.

**கேள்வி:** அறத்துப்பால் - அதை ஏன் எடுத்துண்டார்னு தெரியலை. பொதுவாக நீதி நூல் என்கிறோம். அறத்துப் பாலில் நீதிகள் பல சொல்றார் ஒத்துக்கொள்றோம். பொருட்பால் - அதிலேயும் நீதிகள் சொல்றார்.

அதையும் ஒத்துக் கொள்கிறோம். இன்பத்துப் பால் - இதில் காதலர்களுடைய இனிய உணர்வுகளை...

பதில்: உடுமலைப் பேட்டைக்காரர் எப்போ DMK ஆனார்? காமத்துப்பால் என்று சொல்லிட்டுப் போங்க ளேன். ஏன் திருவள்ளுவர் தலை மேல் ஏதோ ஏத்தறீங்க.

கேள்வி: சரி சரி - காமத்துப்பாலில் காதலர்களுடைய நுண்ணிய உணர்வுகளுக்கும் தமிழர் இலக்கியத்துக்கும் ஓர் உச்சகட்டம். ஆனால் நீதி நூலில் காமத்துப்பாலுக்கு என்ன வேலை?

பதில்: ஆமாம். நீதி நூல் என்று சொன்னவுடனேயே, அவன் சாமியாராக இருக்கணும்னு எங்க படிச்சீங்க?

இந்த நாட்டிலே பிரிக்கவே இல்லை. சங்க காலத் திலே ஆகட்டும் - 16, 17 முடிய அவை பிரித்துப் பார்க்கப் படவில்லை. இடையிலே இந்த வேதாந்தம் என்ற பெயரிலே வந்து, 'பெண்டாட்டி கால் விலங்கு - பிள்ளை ஒரு சூளாணி' என்றெல்லாம் வந்திடுச்சு. அது உண்மை யல்ல. அது மட்டுமில்லை. சங்க காலத்திலே பார்த்தீர்கள் என்றால், கடவுள் வழிபாடும் இதுவும் ஒன்றாத்தான் வைத்திருந்தான். பெண்டாட்டியோடே தான் போறான்.

**தாவில் கொள்கை**
**மடந்தையொடு சின்னாள்**
**ஆவினன்குடி அசைதலும் உரியன்**

என்று பாடுவான்.

அவனே தாவின் கொள்கை மடந்தையொடு இருக்கும்போது நான் ஏன் என் பெண்டாட்டியை

விட்டுப் போகணும்? விட்டிடு என்று எங்கே சார் சொல்லியிருக்கு? - சரி, சிலபேர் இயற்கையிலேயே கல்யாணம், கில்யாணம் பண்ணாம, சாமியார் மாதிரி இருக்கணும்னு நினைக்கின்றனர் - சரி.

'ஆறு எழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி நாஇயல் மருங்கின் நவிலப்பாடி...' இருக்கிறான். அந்த மாதிரி ஒரு இடமும் இருக்கிறது.

சிலபேருக்கு முண்டாவை மடக்கினால்தான் புத்தி வரும். அவன் வந்து திருப்பரங் குன்றத்தில் சண்டை போட்டுக்கொண்டு போகிறான்.

அப்படி வேதங்களையெல்லாம் படித்து, ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி... நவிலப் பாடி இருக்கிற பிராமணனுக்கும், இவன் சுத்தப் பட்டிக்காட்டான். இவன் அந்தக் கடாவை அறுத்து, அந்த ரத்தத்தை அரிசியிலே கலந்து தூவி முருகா என்று கத்துவான் - அவனுக்கும் அங்கே முருகன் எப்படி வரான்?

இந்த உச்ச கட்டத்திலே இருக்கிற தத்துவவாதி கிட்டே போற முருகன், இந்த பாமரன்கிட்டே எப்படி வந்தான்?

அதைத்தான் முதன்முதல்லே கண்டு பிடித்தான் தமிழன். உயர்ந்த தத்துவம். - இதோ பாரு - அறிவின் எல்லையிலே இருக்கிற இவனும் சரி. அறியாமையிலே இருக்கிற அவனும் சரி - இரண்டு பேருக்கும் பொதுப் பண்பு ஒன்றே ஒன்று இருக்கு. அது என்ன தெரியுமா?

*'சேவடி படரும் செம்மல் உள்ளம்.' (நான் இப்போ திருமுருகாற்றுப் படையைச் சொல்கிறேன்.)*

*அவன் திருவடியை அடையணும் அல்லது பார்க்கணும்ங்கிற ஒரே ஒரு எண்ணம்தான் இருக்கு. வேறு ஒன்றும் கிடையாது. அந்த எண்ணம் இருந்தால் ''நீ ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி - பெரிய தத்துவ ஞானியாக இருந்தாலும் சரி, கடாவை அறுத்து அரிசியிலே படைத்து முருகா என்று சொன்னாலும் சரி*

சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம் பிரிந்து உறையும்
செலவு நீ நயந்தனை ஆயின்...

*(திருமுரு:62:64)*

*எப்படியாயினும் அவன் திருவருளை அடைய வேண்டுமென்ற எண்ணம் உனக்கு உண்டாயின்,*

இன்னே பெறுதி நீ முன்னிய வினையே.

*இந்த வினாடியே உனக்குக் கிடைப்பான். எங்கே கிடைப்பான்?*

சதுக்கமும் சந்தியும் புதுப் பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும், கந்துடை நிலையினும்

*(திருமுரு:225:226)*

வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டாண்டு உறைதலும் அறிந்தவாறே

*(திருமுரு)*

*நான் பாத்ரூம் ஜபத்தை திருமுருகாற்றுப்படை படித்தப்புறம்தான், 'என்னடா மடையன்க... ஏதோ குளிக்கிறதாம் - உட்கார்ரதாம்... என்னடாது' என்று ஒதுக்கினேன்.*

*பாரதியாருக்குக் குள்ளச் சாமியார் சொன்னாரே 'நான் வெளியில் சுமக்கிறேன் நீ உள்ளே சுமக்கிறாய்' என்றாரே... 'பாத்' என்ன வேண்டியிருக்கு?*

**வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்**

*(குறள்-265)*

**எய்தினர் வழிபட**
**ஆண்டாண்டு உறைதலும் அறிந்தவாறே**

ஆகவே, இல்லற வாழ்க்கை - பெண்டாட்டி யோடே இருக்கிறதை அற வாழ்வுக்கு விரோதமாகச் சொல்ல வில்லை.

முத்திரை வச்சவர் ஞானசம்பந்தர்.

**'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்.'**

*(திருமு: 3:24:1)*

*எத்தனை நாளைக்கு? 25 வருஷம் வாழ்ந்துட்டு, அப்புறம் சந்நியாசியாகப் போகணுமா? இல்லே.*

வைகலும் (Unto the last.) இறுதி மூச்சு வரை.

*'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் - வைகலும்' என்ன சார். இப்படிப் பெண்டாட்டி கூடவே இருந்து, அதுவே சொர்க்கம் என்று நினைத்தால், அப்புறம் அது என்ன ஆறது?*

கவலைப்படாதே - **'எண்ணில்'** சிந்தித்துப் பார்த்தே யானால் **'நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை.'**

நீ பெண்டாட்டி கூடவே இருந்து வாழ்கிறதனாலே அந்தக் கதிக்குப் போக முடியாதுன்னு நினைக்காதே.

'நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை.'

ஏன், தெரியுமா?

**கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்**
**பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.**

*(திருமு:3:24:1)*

அவனே பாசிடிவ், நெகடிவ் ஆக இருக்கும்போது எனக்கென்ன வந்திருக்கு? நான் ஏன் விடணும்?

அப்படி வாழ்க்கையை முழுவதும் இறுதிவரை அநுபவித்துப் போகணும். அதுதான் சுந்தரமூர்த்தியி னுடைய வரலாறு.

அதனாலே தான் பெண்டாட்டி கூடவே இருந்து கிட்டு 'யோகம்' பண்ணினாரு எனப் பாடினார் சேக்கிழார்.

திருமந்திரத்திலே - பரியங்கயோகம். கட்டிலுக்கு போகம் பண்றதுன்னு பேரு. பெண்டாட்டியோடே இருந்து யோகம் பண்றதை முதன் முதலில் நம்ம ஆளுதான் கண்டுபிடித்தான், பரியங்க யோகத்தை. அதனாலே இது விலக்குரிய தன்று. அப்படீன்னு வந்த பிறபாடு நீ புலனுக்கு அடிமையாகாதபடி இருந் தேன்னாத் தப்பு ஒன்றும் இல்லை.

*சுந்தரமூர்த்தி நாயனார் ஒரு கல்யாணம் பண்ணி னாரு. அடுத்த கல்யாணமும் பண்ணினாரு. நேரம் வந்தது. சங்கிலியை நினைக்கல. மேலே போய்ட்டாரு.*

*ஆக விட்டேத்தியா கூட இல்லே. தாமரை இலைத் தண்ணீர் மாதிரி, வாழ்கிறான். அதிலே தவறு இல்லே. வாழ்க்கையிலே ஒரு விதமான குறைவும் இல்லே. அந்தத் தத்துவம் இந்த நாட்டிலே இருந்தது. இதை வள்ளுவன் எடுத்தான். அதனாலே 'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை' என ஒரு ஏகாரம் அடிச்சி 'கவலையே படாதேன்னான். சரி இருக்கிறாங்களே - இருக்கவனைப் பற்றிக் குறை சொல்லவேயில்லை.*

***அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை** என்ற உடன் சாமியார் எல்லாம் 'இல்லே நான் இப்படித்தான் இருப் பேன்'னா, சரி. **அதுவும் பிறர் பழிப்பதில்லையாயின் நன்று.***

*சாமியார் மாதிரி சாமியார் மானத்தை வாங்கினவன் வேறு யாருமில்லை. இந்த உடையைப் போட்டுக்கிட்டு அவங்க பண்ற அழிச்சாட்டியம் இருக்கிறதே!*

**தவம்மறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து**
**வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று**

*(குறள்:274)*

*வேடன் எப்படிப் புதருக்குள் இருந்துக்கிட்டு அம்பு போடறானோ அது மாதிரி 'இந்தச் சந்நியாசி வேஷத் தைப் போட்டுக் கொண்டு அயோக்கியத்தனம் பண்றே யடா, பாவி'ன்னு அவன் தான் கேட்டான். ஆக,*

அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை. தமிழ் கோட்பாட்டில் வானப்பிரஸ்தம், வானப்பிரஸ்தத்தில் சந்நியாசம் ஒன்றும் கிடையாது. இங்கிருந்தே வாழ்கிறதுதான் நம்முடைய வாழ்க்கை முறை. அதனாலே 'நால்வகை' இங்கே கிடையாது. இதைக் கொண்டுவந்து ஏத்தணும் என்று பாடுபடுகிறவர்கள் உரையாசிரியர்கள்.

நால்வகை - பிரம்மச்சரியம், இல்லறம், வானப் பிரஸ்தம், சந்நியாசம். அவன் சொன்னான், பதினாறு வயது ஆண் பன்னிரண்டு வயது பெண்ணுக்குன்னா அதெல்லாம் சாரதா சட்டம் வருவதற்கு முன்னாலே பாடியது. இப்ப நாற்பத்தெட்டு ஆண்டு பிரம்மச்சரியம் காத்துக் கிழவனா போனப்பறம் கல்யாணம் பண்ணிக்கச் சொல்வானா? அப்போது 48 வயசிலே பதினெட்டு வயசுப் பொண்ணைக் கல்யாணம் பண்ணினான். பட்டராமகன் கதைதான். அப்போ அவுங்க ஏன் பண்ணி னாங்க. அதைத் தப்புன்னு சொல்ல மாட்டேன். அவங்க ஆரியன் எங்கோ ஒரு இடத்திலே போனான். மாட்ட மேச்சுக்கிட்டுப் போயிட்டான். இவளை கூட இழுத்துக் கிட்டுப் போக முடியாது. போன இடத்திலே கல்யாணம் பண்ணிக்கிட்டான். அவ்வளவுதான்.

**கேள்வி: இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து**
**கெடுக உலகியற்றி யான்.**

*(குறள்:1062)*

பதில்: இதற்கு என்ன விளக்கம் சொல்றது? கூடாதுன்னு சொல்றான். பல்லாக்குத் தூக்குற கதைக்கு விளக்கம் சொன்னேனே, அது இதற்குத்தான். 'பரந்து

கெடுக உலகியற்றியான்' என்றால் அவன் பண்ண லேன்னு தெரிகிறது இல்லையா

**அறத்தாறு இது என வேண்டா சிவிகை**
**பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை**

*(குறள் 37)*

என்கிற குறளுக்கு ஏறிக்கிட்டுப் போறவன் புண்ணியம் பண்ணினவன், தூக்கிக்கிட்டுப் போறவன் பாவம் பண்ணினவன் என எழுதிட்டுப் போயிட்டான். நான் அதை மறுக்கிறேன். 19-வது வயசிலே இதை எதிர்த்து ஒரு கட்டுரை எழுதினேன். அது அல்ல பொருள். திருவள்ளுவர் ரொம்ப ஜாக்கிரதையாய்ச் சொல்கிறார்.

பல்லக்குத் தூக்கிட்டுப் போறவன் ஏறிட்டுப் போறவனை வைத்து இவர்களிடையே 'அறத்தாறு இது' என்று சொல்லாதே என்று எழுதினேன். அதுதான் உரை.

இப்போ அவன் புண்ணியம் பண்ணினவன். இவன் பாவம் பண்ணினவன் அதனாலே அவன் பல்லக்கைத் தூக்கிட்டுப் போறான் என்கிறதை நான் ஏற்றுக் கொள்ளத் தயார் இல்லை. அவர் எங்கேயும் சொல்லலை.

இப்போ இந்தக் குறளை எடுத்துக்கிட்டா அதற்கு அரண் என்று இதைச் சொல்லலாம்.

இவன் பிச்சை எடுக்கிறது இவன் தலையெழுத்து. அப்படித்தான் பிரம்மா எழுதியிருக்கிறான். அப்படின்னா ஒழிச்சுத் தொலையடா பிரம்மாவை.

கிருபானந்த வாரியார் ஒரு கதையைச் சொன்னார். ரொம்ப நல்லாயிருக்குது. அந்த நேரத்திலே 'பரந்து

கெடுக உலகியற்றியான்' என்றார். ஒரு பெரிய முனிவர். மகாராஜா வீட்டிலே போய்த் தங்கியிருந்தார். அந்த வீட்டு அம்மாவுக்குப் பிரசவ நேரம். பிரம்மா போனாராம். அது முனிவருக்குத் தெரிஞ்சது. எங்கடா போறேன் னார். அந்த பையன் தலையிலே எழுதப் போறேன் என்றார்.

சரின்னு வந்தான் எழுதிட்டு. 'என்னடா எழுதினே'ன்னு கேட்டார். 'ஏக ரிஷப ஜாதகம்'னு எழுதினேன்னான்.

இவர் அதை வெளியிலே சொல்ல முடியாது. தேவ ரகசியம் என்று பேரு. முனிவர் போயிட்டாரு. பத்து வருஷம் கழிச்சு வந்தாரு. 'எங்கடா ராஜான்'னு கேட்டாரு.

'ராஜாவாவது - போய்ப் பல நாள் ஆயிப் போச்சுங்க'

'பையன் பொறந்தானே?'

'ஆமாங்க. ஒத்தமாட்டு வண்டி ஓட்டிக்கிட்டு இருக்கான்.'

இவரு பார்த்தாரு - முனிவரு அல்லவா - இப்படி யோசனை பண்ணினாரு.

'நேராப் பையன் வீட்டுக்கு போனாரு. அப்பா நான் உங்க அப்பாவுக்கு ஃப்ரெண்டுன்னாரு. 'சரி... அங்கே தங்கினாரு. அவனைப் பார்த்து ''நீ போயி இந்த மாட்டை வித்துட்டு வான்னாரு...''

'என்னய்யா எங்க அப்பாவுக்கு ஃப்ரெண்டுங்கறே. நான் பொழைக்கிறது இந்த ஒத்த மாட்ட வச்சுத்தான். அதையும் போய் வித்துட்டு வாங்கிறேயே'ன்னான்.

''நீ கவலைப்படாதே. மாட்டை வித்துட்டு வந்துரு''ன்னாரு. சாமியார் சொன்னாரேன்னு மாட்டக் கொண்டு போயிப் பத்து ரூபாய்க்கு வித்தான். ராத்திரி ரொம்பச் சாப்பிட்டான். காலம்பற எழுந்திருச்சி பாத்தா ஒரு மாடு இருந்தது. அந்த மாட்டையும் கொண்டு போயி வித்துவிட்டு வந்து சாப்பிட்டான்.

இப்படிப் பதினைந்து நாள் மாடு வர்றது, விக்கறது, சாப்பிடறதுன்னு சென்றது. பிரம்மா பார்த்தான். ''அட நாசமாகப் போக உன்கிட்டச் சொல்லித் தொலைஞ்சு போக'' என்றார்.

ஏன்னா 'ஏக ரிஷப ஜாதகம்'னா ஒரு ரிஷபத்தை அவனுக்கு சப்ளை செய்ய வேண்டியது பிரம்மாவி னுடைய வேலை. இவன் புத்திசாலித்தனமா... இப்பத் தெரிகிறதா.

**ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழாது உஞற்று பவர்**

*(குறள்:620)*

**தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்**

*(குறள்:619)*

**எத்தனை குறளுக்குப் பொருள் வருகிறது பாருங்கள். எளிய கதையாக இருக்கலாம். ஆனால் இந்தக் கதையிலே எவ்வளவு பெரிய தத்துவத்தைக் கொண்டு போய் வச்சுருக்கார், பாருங்க.**

ஆக மொத்தம், அறிவினாலே சிந்தித்துப் பார்த்து இதை இப்படித்தான் பண்ணனும்னா ஊழ்வினை தோற்றுப்போகுது.

'பரந்து கெடுக உலகியற்றியான்' என்றால் சரி. திருவள்ளுவர், இறைவன் ஒருவனைப் பிச்சைக் காரனாகப் படைக்கிறான் என்பதை ஏற்கவில்லை. மனிதன் பண்ணின கொடுமைக்குக் கடவுளை போய்ச் சொல்வதா?

அவரைப்போல ஒரு சிந்தனையாளர் உலகில் கிடை யாது சார். அது பொருளாதாரச் சிந்தனை தோன்றாத காலம்; Adam Smith பிறவாத காலம்.

அப்ப ஜனங்க வாழ்ந்துக்கிட்டுத் தானே இருந்தாங்க. அப்ப எப்படி வாழ்ந்தாங்க? அப்படி இருக்கிற போது இது ஆண்டவன் கொடுத்தது என எப்படி நினைக்கிறது.

இரண்டு பேர் ஒரே நேரத்தில் ஒரே தொழில் ஆரம் பிக்கிறாங்க. ஒரே தொழில். ஒருத்தன் Rasproவாக இருக்கிறான். ஒருத்தன் அ.ச.வா இருக்கிறான்.

என்ன பண்றது?

இப்ப விதி விளையாடறதா என்ன? இப்பப் பொருள் இல்லை. அங்கேதான் வள்ளுவன் ரொம்ப ஜாக்கிரதையாகிவிட்டான். நானும் அவனும் ஒண்ணாத் தானே ஆரம்பிச்சோம். நான் ஏன் Rasproவாக ஆகலை?

**வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி**
**தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது** *(குறள் 377)*

என்கிறான். இவ்வளவு மில்லியன் சம்பாதித்திருக்கானே. அவனாலே சாப்பிட முடிகிறதா? அனுபவிக்க முடிகிறதா? என்பது வேறு சமாசாரம்.

கோடி தொகுத்தார்க்கும் 'துய்த்தல்' என்று சொன்னான். 'துய்க்கிறது' என்பதுதான் வினை. அது கண்கூடாகக் காண்பது. அதை யாரும் மறுக்கமுடியாது. ரொம்ப ஆழ்ந்து சிந்தித்தால் பலவற்றில் நாம் உண்மையான பொருளைக் காணமுடியும்.

★

கங்கை

பாலாஜி ஆப்செட் பிரிண்டர்ஸ்
23633094 -23631794